





# தமிழரசு

1-9-1988 ரூ. 1









# விடுதலை நாள் விழா

(14.8.88 நிகழ்ச்சிகள்)



விளையாட்டு வீரர்கள் ஓட்டம்



சுதந்திரச் சுடர் வழங்குதல்



மாணவியர் அணிவகுப்பு



# இலட்சியங்களை அடைய...

நமது வளர்ச்சிப் பணிகளின் நன்மைகள் மக்களுக்குப் போய்ச்சேரவில்லை என்று அரசுக்கு அடிக்கடி புகார்கள் வந்திருக்கின்றன. அரசு பல கூட்டங்களை நடத்தி இதுபற்றி விரிவாக விவாதித்துள்ளது. இந்த விவாதங்களைத் தொடர்ந்து அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டியது அவசியம் என்ற முடிவு உருவாகியுள்ளது.

அண்ணல் காந்தியடிகளின் ''சுய ராஜ்ய'' தத்துவதுக்கு ஏற்ப இது அமைந்திருக்கிறது. ஒரு சிலரின் கைகளில் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தும் தகுதியை மக்கள் பெறவேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். அந்தப் பாதையை நாம் பின்பற்றுகிறோம்.

நம் நாட்டின் முன்பு இரண்டு இலட்சியங்கள் உள்ளன.

ஒன்று வறுமை ஒழிப்பு.

மற்றொன்று வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிப்பு.

இந்த இலட்சியங்களை அடைந்து, அந்நிய ஆதிக்கத்தின்கீழ் நாடு அடிமைப்படுவதற்கு முன்பிருந்த உன்னதமான நிலைக்கு நாட்டை நாம் மீண்டும் அழைத்துச் செல்ல வேண்டும்.

உறுதியுடனும் தியாக மனப்பான்மையுடனும் அந்த இலட்சியத்தை அடைந்திட நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.



—மாண்புமிகு பிரதமர் ராஜீவ்காந்தி

(15-8-88 விடுதலை நாளன்று டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை)

---



## தமிழ்த்தென்றல் திரு. வி. க.

தமிழ்நாட்டில் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாகவும், தாயாகவும் விளங்கியவர் திரு.வி.க. ஆவர். காந்தியடிகளின் அகிம்சை, எளிமை, சத்தியம் ஆகியவைகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்.

—பெருந்தலைவர் காமராஜர்.

(தமிழ்த் தென்றல்திரு.வி.க. அவர்களின் பிறந்த நாள் ஆகஸ்ட் 26)

### அட்டையில்...

மாண்புமிகு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கடந்த ஆகஸ்ட் 4, 5, 6 தேதிகளில் மேற்கொண்ட தமிழகச் சுற்றுப் பயணக் காட்சிகளும், விடுதலை நாள் விழாவை யொட்டி 15.8.88 அன்று சென்னை கோட்டையில் தமிழக ஆளுநர் தேசியக் கொடியேற்றிய காட்சியும் இவ்விதழின் முன்பக்கம் மற்றும் பின்பக்க அட்டையில் இடம் பெற்று உள்ளன.


தமிழரசு

1-9-1988

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - ஆவணி 17

மலர் : 19 இதழ் : 5

# மக்களிடம் புதிய எழுச்சியை உருவாக்கிய பிரதமரின் சுற்றுப்பயணம்!

திண்டிவனம் அருகே உள்ள சிங்கனூர் எனும் சிற்றூர் கடந்த 4.8.88 அன்று வரலாற்றில் இடம்பெற்றது. நமது பிரதமர் ராஜீவ காந்தி அன்று தான் சிங்கனூரில் பெருந்தலைவர் காமராசர் பெயரால் அமைந்த ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.

மழை, வெயில், வெள்ளம், புயல் மற்றும் ஆதிக்கவாதிகளின் நெருப்பு இவற்றுக்கு ஆளாகிய மக்களுக்கு, நிலையான காங்கிரீட் வீடுகளை அளிப்பதே காமராசர் வீட்டு வசதித் திட்டம். இத்திட்டத்தை ஆகஸ்ட் 4ந் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி சிங்கனூரில் தொடங்கி வைத்தார்.

தமிழக மக்களை நேரில் சந்திக்கவும், மக்களின் குறைகளை அறியவும், வளர்ச்சித் திட்டங்களின் பயன் மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்கவும், பிரதமர் ராஜீவ் காந்தி, தம் சுற்றுப் பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

செஞ்சியில் தொடங்கி -திருச்சி கரூரில் நிறைவுற்ற பிரதமரின் மூன்று நாள் சுற்றுப் பயணத்தில் தமிழக மக்கள் வரலாறு காணாத வகையில் எழுச்சியும் உணர்ச்சியும் மிக்க வரவேற்பைப் பிரதமருக்கு அளித்தார்கள். தமிழக வரலாற்றில் பிரதமரின் இந்தச் சுற்றுப்பயணம் ஒரு திருப்பு முனையாக அமையும் என்று மக்களில் பல தரப்பினர் ஒருமுகமாகக் கூறினர்.

சென்னை விமான நிலையத்தில் 4ந் தேதி பிற்பகல் வந்திறங்கிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், அவர் துணைவியார் திருமதி சோனியாவும், ஆளுநரும், உயர் அலுவலர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏராளமான பிரமுகர்களும், பொதுமக்களும் அளித்த வரவேற்பை ஏற்றுக் கொண்டனர். செய்தியாளரிடம் சில நிமிடங்கள் கலந்துரையாடி பிரதமர் பின்னர் 'எம்.ஐ.8 ஹெலிகாப்டர்' வாயிலாகத் தென்னார்க்காடு மாவட்டம் சென்றடைந்தார்.

செஞ்சி- திண்டிவனம் சாலையில் செஞ்சியிலிருந்து எட்டாவது கிலோ மீட்டரில், சாலையின் இடதுபுறம் அமைக்கப்பட்டிருந்த ஹெலிபேடில் அவர்களுடைய ஹெலிகாப்டர் சரியாக 4.15க்கு வந்திறங்கியது.



அங்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி மற்றும் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு வரவேற்றனர். தானே காரை ஓட்டிக் கொண்டு தமது பயணத்தைத் தொடங்கினார் பிரதமர். ஹெலிபேடில் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்த அன்னை இந்திரா காந்தி திருவுருவப் படத்தில் - புறப்படுவதற்கு முன்பாகப் பிரதமரின் பார்வை படிந்து மீண்டது.

வழி நெடுகிலும் அலை அலையாகத் திரண்டு வந்த மக்கள் கையசைத்தனர். வாழ்த்தொலி முழக்கினர். வழியிலே அவருடைய காரை நிறுத்தி மாலைகளும், துண்டுகளும் அவருக்கு அணிவித்து, மகிழ்ச்சி தெரிவித்தார்கள் மக்கள். 5.15க்கு செஞ்சிக் கோட்டை எதிராக வந்து, வந்தவழியே திரும்பியது அவருடைய கார். சாலைகள் சந்திப்பில் குதுகலத்தோடு கூடியிருந்த மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தைப் பார்த்ததும், காரை நிறுத்திவிட்டு இறங்கியேவிட்டார் பிரதமர்! வாழ்த்தொலி வானைத் தொட்டது. சிறிது நேரத்தில் மழை தூறத் தொடங்கியது.

'டில்லிக்கோட்டை ராஜாவை செஞ்சிக்கோட்டை வரவேற்கிறது' என்பதுபோலப் பல வாழ்த்து வாசகங்கள் அங்கங்கே எழுதி வைக்கப் பட்டிருந்தன.

நாட்டார்மங்கலம், வல்லம், தீவனூர், கொணக்கம்பட்டு....எங்குபார்த்தாலும் மழை, அதையும் பொருட்படுத்தாமல் வழியெல்லாம் நனைந்தபடி நின்ற மக்கள் கூட்டம். அங்கங்கே இறங்கி மக்களிடம் ''அரிசி கிடைக்கிறதா'', ''குடிநீர்த் தட்டுப்பாடில்லையே?..'' "ரேஷன் சரியாக வழங்கப்படுகிறதா?'' என்றெல்லாம் கேட்டு, நல்ல பதில் கிடைக்கவே, நெஞ்சம் குளிர்ந்தார் பிரதமர்.

திண்டிவனம் நகர எல்லையில் காரிலிருந்து இறங்கி, அந்த மழையிலும் திறந்த ஜீப்பில் ஏறி நின்று பயணம் தொடர்ந்தார் ராஜீவ். வழிநெடுகிலும் வண்ண விளக்குகள் வசீகரித்தன.

காமராசர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்தைச் சிங்கனூரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிய பொது விழாவில் தொடங்கி வைத்தார் ராஜீவ். அவ்விழாவில் மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ. பத்மநாபன் வரவேற்புரையாற்றினார். விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பி.சி. அலெக்சாண்டர் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவரின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

அங்கிருந்து நேரே விழுப்புரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார் பிரதமர்.

வீதிகளின் இருமருங்கும் மகிழ்ச்சி பொங்க நின்ற மக்களில் சிலர் வைத்திருந்த மனுக்களைப் பார்த்த பிரதமர், காரை நிறுத்தி தாமே அவைகளைப் பெற்றுக் கொண்டார். 8.45மணியளவில் கூட்டம் தொடங்கியது. முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி வரவேற்புரையாற்றினார். பிரதமர் அவர்கள் ஆங்கிலத்திலேயே சொற்பொழிவாற்றினார் என்றாலும், பேச்சின் தொடக்கம் தமிழிலேயே இருந்தது.

அதன்பின் தொடர்ந்த ஆங்கிலச் சொற்பொழிவை மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்.

# தென்னார்க்காடு-தஞ்சை-திருச்சி மாவட்டங்களில் வரலாறு காணாத காட்சிகள்!



இதய அறுவைச்சிகிச்சை பெற்ற சிறுமி உமாமகேஸ்வரியுடன்

''தங்களைப் போன்ற பெருமக்கள், வழியெல்லாம் அளித்த வரவேற்பின் காரணமாகவே இக்கூட்டத்திற்கு நான் தாமதமாக வர நேர்ந்தது; அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தமிழகம் வரும்போதெல்லாம் மிக அன்பான வரவேற்பளிக்கிறீர்கள்; அதற்காக மிகுந்த நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஓராண்டுக்கு முன்பு நான் தமிழ் நாட்டுக்கு வந்தபோது நீங்களெல்லாம் வறட்சியால் வாடிக் கிடந்தீர்கள். இந்த முறை தமிழகம் பசுமையடைந்து நீங்களெல்லாம் மலர்ந்த முகத்தோடு காணப்படுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

''தமிழக அரசுக்கு விரிவான கொள்கை வழிமுறைகளை மத்திய அரசு அளிக்கிறதே தவிர, அரசின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடுவதில்லை.

''நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுக்காகத் தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து அறுநூறு கோடி ரூபாய் கடனுதவி பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழ் நாட்டில் உள்ள ஒன்பது நகரங்கள் பயனடையும். குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்திற்குக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் ஆதாயம் கருதி சிலர் ஜாதி வேறுபாடுகளைத் தூண்டிவிடுகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அவர்களுக்கு இடம் தரக்கூடாது. அரிசன மக்கள் சிறுபான்மை மக்கள் பின்தங்கிய மக்கள் முன்னேற்றத்திற்காக உங்களோடு உழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்''.

ஒன்றுபட்டு உழைக்க ஆதரவு தாரீர்.!...

-மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பேச்சு 45 நிமிட நேரம் தொடர்ந்தது.

பொதுக்கூட்டம் முடிந்தது. இரவு உணவு சிதம்பரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வடக்குவீதி, கீழவீதி, வேணுகோபால் பிள்ளை வீதி வழியாகச் சிதம்பரம் நகருக்குள் நுழைந்தது பிரதமரின் கார். அந்த நள்ளிரவிலும் அவரைக் காணத் தெருவின் இருபுறத்திலும் தாய்மார்களும், பெரியவர்களும், குழந்தைகளும் உற்சாகத்துடன் திரண்டிருந்தார்கள். காத்திருந்த சிறுவர் சிறுமியர் கையில் பிடித்திருந்த கொடிகளை வாங்கி திருமதி சோனியா காந்தியும் அவ்வப்போது அசைத்து அவர்களை மகிழ்வித்தார்.

இரவு 1.30 மணியளவில் சிதம்பரம சர்க்கியூட் ஹவுசில் உணவு முடிந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்த துணைவேந்தர் இல்லத்தில் ஓய்வெடுத்துகொள்ள - அன்றைய சுற்றுப்பயணம் முடிந்து பிரதமர் தம்பதிகள் வந்து சேர்ந்தபோது இரவு இரண்டு மணி! பல்கலைக் கழகத் துணைவேந்தர் எம்.ஏ.எம். இராமசாமி, துணைவேந்தர் சேது நாராயணன், பதிவாளர் ராஜ மாணிக்கம் ஆகியோர் அங்கே அவர்களை மாலையணிவித்துப் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள்.

கலையூர் ஹெலிபேடிலிருந்து செஞ்சி, திண்டிவனம், காட்டேரிப்பட்டு, கிளியனூர், வடலூர், பண்ணுருட்டி, புவனகிரி வழியாக மெல்லாம் அன்றுமட்டும் இந்தியப் பிரதமர் அவர்கள் பயணம் செய்த மொத்த தூரம் 170கிலோ மீட்டர். இது குறைவான தூரமே எனினும், ஆங்காங்கே அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்புகளால் குறிப்பிட்ட இடத்திற்குக் குறித்த நேரத்தில் வந்து சேர முடியாத நிலை இருந்தது.

## தஞ்சை மாவட்டத்தில்....

தமது இரண்டாவது நாள் பயணத்தை 5.8.88 அன்று காலை எட்டு மணியளவில் தொடங்கினார் நமது பிரதமர்.

சிதம்பரத்தில் முந்திய நாள் இரவில் வரவேற்கக் காத்திருந்த கூட்டத்தை விட வழியனுப்பக் காத்திருந்த கூட்டம் அதிகமிருந்தது. முந்திய நாள் போலவே அன்றும் வழி நெடுகிலும் மாலைகள் .. துண்டுகள் சால்வைகள்.. பட்டாடைகள்.. சரிகை மாலைகள்.. சந்தன மாலைகள்!

மூன்றாவதாக வந்த சிறிய வேனில் அவையெல்லாம் குவிக்கப்பட்டன. அவ்வப்போது பிரதமர்

மூன்று நாளும் மூன்று பொதுக் கூட்டங்களில் பிரதமர் கலந்து கொண்டார். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானோரில், பிரதமரிடம் தர மனு ஏதாவது கொண்டு வந்து அதைக் கொடுக்கமுடியாமல் சிலர் தவிப்பார்கள்; அப்படிப் பட்டவர்கள் கையை உயர்த்தி மனுவைக் காட்டினால் போதும்-மேடையிலிருந்து அதைக் கவனிக்கும் பிரதமர், தன் உதவியாளரிடம் அதைச் சுட்டிக் காட்டி வாங்கிவரச் செய்தார். இதனால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.

# ஏழை எளிய மக்களுக்குப் பிரதமர் அளித்த நம்பிக்கை!

அவர்கள் ஏழை எளிய மக்களிடம் மாலைகள், சால்வைகள் என எடுத்து எடுத்து வழங்குவதால் அவ்வப்போது குறைக்கப்பட்டன.

வல்லம்படுகையில் கட்டப்பட்டிருந்த ஆதிதிராவிடர் குடியிருப்பைப் பார்வையிட்ட பிரதமர் அங்கிருந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அக்குறைகளைக் களையுமாறு அருகில் நின்ற மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆணையிட்டார்.

கொள்ளிடம் ஆற்றங்கரை எல்லையிலிருந்து துவங்கும் . தஞ்சை மாவட்ட எல்லையைப் பிரதமர் அடைநதபோது, தஞ்சாவூர் மாவட்ட ஆடசித் தலைவர் திரு. மச்சேந்திரநாதன, துளசி ஐயா வாண்டையாா இருவரும் மாலையும் பொன்னாடையும் அணிவித்தனர். நாதசுர இசை முழக்கத்தோடு வரவேற்றனர். அங்கே ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரக் கணக்கில் எழுசசியமயமாகக் கூடியிருந்த மக்களைப் பார்த்ததும், எல்லையற்ற மகிழ்சசி பிரதமருககு. காரை விட்டு இறங்கி மக்களோடு சேர்நது நடக்கலானார் அவர். வாழ்த்து முழக்கங்கள் மண்ணதிரச் செய்தன.

மறுபடியும் கார்ப்பயணம், புத்தூர், எருக்கூர், அரசூர், சேந்தங்குடி, சீர்காழி வழியே 11.30 மணிக்கு வைத்தீஸ்வரன்கோயில் வந்து சேர்ந்தார் பிரதமர். அன்று வெள்ளிக்கிழமை. ஆடிப்பூர உற்சவம் தொடக்கம். தருமை ஆதீனத்தின் நிர்வாகத்தில் உள்ள அக்கோயில் வாயிலல் ஆதீனம் சார்பில் கட்டளை சாமிநாதத் தம்பிரான் மற்றும் அறநிலையததுறை ஆணையர் திரு.கல்யாணசுந்தரமும் பிரதமரையும் அவர் துணைவியாரையும் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றார்கள். நெல் மாலை அணிவிக்கப்பட்டது.

பழம் பெருமை மிக்க அக்கோயிலின் வரலாற்றைத் தருமை ஆதீன சைவ சிந்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு.டி.என் இராமசசந்திரன் ஆங்கிலத்தில் விளக்க பிரதமர் தம்பதிகள் ஆர்வத்தோடு கேட்டனர்.

பிரதமர் தம்பதிகள், கோயில் யானைக்குக் கரும்பு கொடுத்தனர். முத்துக்குமார சன்னதியில் தேவாரப் பண் இசைக்கப்பட்டது. வேத பாடசாலை மாணவர்கள் ஆகமங்



மக்கள் மாலையிடுதலும் மனு அளித்தலும்




கரூர் அகல ரயில்பாதை திறப்புவிழா

# அரசுத் திட்டங்களின் செயல்பாட்டின்மீது பிரதமர் செலுத்திய கண்காணிப்பு!

களைப் பாடினர். பிரதமர் பக்தி சிரத்தையோடு அதைக் கவனித்தார். அம்மன் சன்னதியில் அர்ச்சனை முடிந்தது. பிரதமருக்கும், அவர் துணைவியார்க்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பிரதமருக்கு வெள்ளிச் செங்கோலும், அவர் துணைவியாருக்குப் பட்டுப் புடவை, பட்டு ரவிக்கைத்துண்டு, வெள்ளி குங்குமச் சிமிழ் ஆகியவைகளும் வழங்கப்பட்டன. இருவருக்குமாக வெள்ளிப் பேழையில் வைத்து வாழ்த்தொன்றும் வழங்கப்பட்டது.

நெற்றியில் குங்குமமும், நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியுமாக வெளிப்பட்டார்கள் பிரதமர் தம்பதியர்.

"ரூரல் பஞ்சாயத்தாக உள்ள வைத்தீஸ்வரன் கோயிலை டவுன் பஞ்சாயத்தாக்க வேண்டும். இங்கு தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி, வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும். வைத்தீஸ்வரன் கோயிலை சுற்றுலா மையமாக்க வேண்டும் என்ற மனு ஒன்றைக் கொடுத்தார் அந்த ஊர் ஊராட்சி மன்றத் தலைவர். அது பற்றிப் பரிசிலிப்பதாக இன்முகத்தோடு கூறினார் பிரதமா.

புத்தூருக்கு அவர் வந்த போது, சாலையோரத்தில் வாழ்த்தி நின்ற எஸ்.எஸ்.பி.பாலிடெக்னிக் மாணவர்கள் வரவேற்றனர். அங்கு சிறிது நின்று விசாரித்துவிட்டுப் புறப்பட்ட பிரதமருக்கு, வழியில் நின்ற ஒரு மூதாட்டி எலுமிச்சம் பழம் கொடுத்து வாழத்தினார். அதை அன்புடன் பெற்றுக் கொண்டார் அவர்.

தோட்டமானியம் மாதாகோயிலருகே கூடி நின்ற பெண்கள் சார்பில் அங்குள்ள குடிநீர்த் தட்டுப்பாடு பற்றி ஆலிஸ் சுந்தராம்பாள் என்ற பெண்மணி முறையிட்டார். அதை உருக்கத்தோடு செவிமடுத்த பிரதமர், அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆணையிட்டார்.

கதிராமங்கலம் தாண்டி மாயவரம், மங்கைநல்லூர், கொல்லுமாங்குடி வழியாகப் பேரளம் வந்து சேர்ந்தார் பிரதமர்.

அத்தியூர் விவசாயிகள், தமக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டுமென்று வேண்டினார்கள். அது பற்றிய மனுவை அவர் பெற்றுக் கொண்டா.

செம்பொனார் கோயில் தின்னியூரில் ஆதிதிராவிடர் குடியிருப்பைத் திறந்து வைத்தார். பின்னர் நன்னிலம் பஸ் ஸ்டாண்ட் எதிரே மாபெரும் வரவேற்பு. காரை விட்டிறங்கி, திறந்த காரில் ஏறி நின்று எல்லோருக்கும் கரங்குவித்தார் பிரதமர். கூட்டத்தில் முஸ்லீம் பெருமக்கள் அதிகம் காணப்பட்டார்கள்.

அதையடுத்து மாப்பிள்ளைக் குப்பத்தைச் சென்றடைந்தன கார்கள். அந்த வட்டாரக் கிராம மக்கள் சார்பில் ராஜீவ் காந்திக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார் என். தியாகராஜன். பிரதமர் அங்கு சிறிது நேரம் நிற்கவே, அண்டை அயலிருந்த வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவர்களெல்லாம் அங்கே ஓடி வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். விவசாயப் பணிகள், அவர்கள் பெறும் ஊதிய விவரம் ஆகியவற்றைக் கனிவோடு கேட்டறிந்த பிரதமர், ஒரு ஆதிதிராவிடப் பெண்மணி கையிலிருந்த பச்சைக் குழந்தையை வாங்கி முத்தமிட்டார்; அவரருகே நின்ற சிறுவனிடம் குனிந்து முத்தம் பெற்றார்.

**நமது பிரதமர் அவர்கள் இந்த முறை மூன்று நாட்கள் தமிழ்நாடு சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதும் நான்கு முழம் கதர்வெட்டி, கதர் ஜிப்பா சகிதமாகவே காட்சியளித்தார். அவர் துணைவியார் திருமதி சோனியா, கதர்ப்புடவை ரவிக்கையோடும், குங்குமப் பொட்டு, தலைநிறைந்த பூ, ஐடையோடுமே காணப்பட்டார்!**

திருவாரூரையடைந்த பிரதமர், இசைஞானத்தால் புகழ்பெற்ற மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் பிறந்த இல்லத்திற்குச் சென்று பார்வையிட்டார். அருள்மிகு தியாகராஜர் கோயில் எதிரே நின்று சாமி தர்சனம் செய்தார். பள்ளி மாணவ மாணவிகளும் பொதுமக்களும் வீதியெல்லாம் திரண்டிருந்தார்கள். திருநந்தியூரில் ஆதிதிராவிடர் குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டது. தோட்டமானியம் கிராமக் குடிசைவாசி ஒருவர்; அவர், தமது, குடிசைக்குப் பிரதமர் வந்து "என்ன சமையல்"? என்று கேட்டபோது மெய்சிலிர்த்துப் போனார். திருவாரூரில் தானே காரை செலுத்தி வந்த பிரதமர் அவ்வூர் பேருந்து நிலையத்தில் பெருந்திரளாகக் கூடியருந்த மக்களை நோக்கிக் கையசைத்தபடி ஒரு முறை காரில் தனியே சுற்றி வந்தார்.

பிறகு அடியக்கமங்கலம், நீலப்பாடி, குருக்கத்தி, கீவளூர் வழியாகச் சிக்கல் வந்து சேர்ந்தார் பிரதமர். அருள்மிகு சிக்கல் சிங்காரவேலனைக் கோயில் எதிரே நின்று தரிசித்து வணங்கினார்.

மத்தியானச் சாப்பாட்டுக்காக நாகப்பட்டினம் ராஜா திருமண்டபம் போய்ச் சேர்ந்தபோது மணி என்ன தெரியுமா? மாலை 5.30. நாகை வீதியெல்லாம் பெரும் கூட்டம் அலை மோதியது. பெரும்பாலும் முஸ்லீம் பெண்மணிகள் காணப்பட்டார்கள். ஏ.டி.எம்.மகளிர் கல்லூரி மாணவிகள் வெள்ளை சீருடை அணிந்து அணிவகுத்து நின்று வரவேற்றார்கள். நாகையில் திபாகிலட்சுமணசாமி நினைவுத் தூண் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

நாகூர், வேளாங்கண்ணி, திருப்பூண்டி, திருத்துறைப் பூண்டி, கோட்டூர், நீர்முளைக்காடு, தொற்கை வழியாகப் பிரதமரின் பயணம் தொடர்ந்தது.

முஸ்லீம் மக்களின் திருத்தலமான நாகூர் தர்காவுக்கு அவர் வந்து சேர்ந்தபோது மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜாபர் ஷெரிப், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு.பரூக் மரைக்காயர், இருவரும் வரவேற்றனர். தர்கா வாயிலில் நிர்வாக டிரஸ்ட்டி திரு எம்.எஸ்.எம்.சேக்பாவா சாகிபு, திரு அக்காணி சாகிபு, திரு என்.பி.சுல்தான், கபீர் சாகிபு ஆகியோர் வெள்ளிக் கிண்ணத்தில் நேர்சியா வழங்கி உள்ளே அழைத்துச் சென்றனர். முஸ்லீம் பெருமக்கள் பாணியில் பிரதமருக்குத் தலைக்குல்லாய் அணிவிக்கப்பட்டது. தர்காவில் ஐந்து நிமிட நேரம் தொழுகை நடத்திவிட்டுப் பிரதமர் புறப்பட்டார். தர்கா முன்னால் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லீம் பெருமக்கள் அவரை வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

வேளாங்கண்ணிக்கு வருகைதந்த பிரதமர், அன்னை இந்திரா காந்தி சிலையையும், நாற்பது லட்சம் ரூபாய் செலவில் அங்கு கட்டப்பட்டிருந்த பள்ளிக் கட்டடமொன்றையும் திறந்து வைத்தார். அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு வந்த அவரை, தஞ்சை பிஷப் ஆரோக்கியசாமி, தந்தை காபரியேல் இருவரும்

# "தமிழகத்தை முன்னேற்ற ஆதரவு தாரீர்"- பிரதமரின் வேண்டுகோள்

வரவேற்று அழைத்துச் சென்றனர். பிரதமர்பிரார்த்தனை முடித்தபின், அவருக்காகப் பிரார்த்திக்கப்பட்டது. வெள்ளியால் ஆன மாதா சிலையொன்று பிரதமருக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. திருமதி சோனியா காந்தி, அவ்வாலயத்திற்கு நெக்லேஸ் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

ஆலயத்தின் முன்னால் கூடியிருந்த கிறிஸ்தவப் பெருமக்களை நோக்கி மேலே கரம் உயர்த்தி அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள் கள், பிரதமர் தம்பதிகள். பயணம் தொடர்ந்தது. வழிநெடுகிலும் பெருமளவில் கூடிநின்ற பெண்கள், ஆங்காங்கே பிரதமருக்கு ஆரத்தியெடுத்து நெற்றித் திலகம் வைததார்கள். மன்னார்குடியில் ஃபின்லே உயர்நிலைப் பள்ளித் திடலில் மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு பதினோரு மணிக்கு பொதுக் கூட்டத் திடலுக்கு பிரதமர் வந்து சேர்ந்தார்.

பொதுக்கூட்டம் தொடங்கியது. பிரதமர் உரைநிகழ்த்தினார்.

"தேசத்தின் நலன், தமிழர்கள் நலன் ஆகிய இரண்டையும் வைத்து, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்னையை அணுகினார். அவர் மிகச் சிறந்த தேசபக்தர்; தேசியவாதி. அதனால்தான் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயுடன் அந்தப் பிரச்னை பற்றி சுமுகமாகப் பேசித் தீர்க்க முடிந்தது. அவர் ஒத்துழைப்போடு இலங்கைத் தமிழர்களுக்குப் பல உரிமைகளையும் நாம் பெற்றுத் தந்தோம்.

"இப்போது இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வாபசாக வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்கமுடியாது. இந்தியப்படை வாபசானால், இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றமுடியாது. இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் பலியாவதற்கு விடுதலைப் புலிகளே காரணம். ஒப்பந்தத்தை ஏற்று, போராட்டத்தைக் கைவிட்டு, அரசியலில் நேரடியாகப் பங்கேற்க அவர்கள் முன்வர வேண்டும். விடுதலைப்புலிகள் செய்த தியாகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்; அதை யாரும் மறக்கவில்லை.

"தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் விவசாயம் பாதிப்பதாகத் தெரிவித்தார்கள். அதுபற்றி ஆளுநரோடு பேசினேன். வருகிற ஏழாம் தேதி மேட்டூர் அணை திறந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


நாகூர் தர்காவில்

—இரவு பன்னிரண்டு மணிக்குப் பொதுக்கூட்டம் முடிந்தது; பிரதமரின் பயணம் தொடர்ந்தது. வடுவூர், நெய்வாசல் வழியாகத் தஞ்சாவூர் விருந்தினர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார் பிரதமர்.

தம் சுற்றுப் பயணத்தின் இரண்டாம் நாள் 5.8.88ல் மட்டும் பிரதமர் பயணம் செய்த மொத்த தூரம்225 கிலோ மீட்டர்.

தஞ்சை கவிதா மன்றத்தில் இரவு உணவை முடித்துக் கொண்டு, சுற்றுலா மாளிகையில் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டார்கள் பிரதமரும் அவர் துணைவியாரும்.

6-8-'88 காலையில் தஞ்சையை விட்டுப் புறப்படும் பிரதமரைக் காண விழாக்கோலம்போல் வீதியெலாம் மக்கள் கூட்டம். எங்கு பார்த்தாலும் மாவிலை, குருத்தோலைத் தோரணங்கள், வண்ணம் பல கொண்ட வரவேற்புச் சுவரொட்டிகள். நெஞ்சையள்ளும் விதத்தில் பொலிவு பெற்றிருநதது தஞ்சை.

காலை 8 மணிக்கெல்லாம் சுற்றுப் பயணத்திற்குத் தயாரானார் பிரதமர். தஞ்சை நகராட்சி மன்றத் தலைவர் திரு ஏ.வி.பதி மற்றும் பலர், பிரதமருக்கு மாலைகள், சால்வைகள் அணிவித்தனர். தஞ்சாவூர் தட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பிரதமரின் கருணையால் அயல் நாடு சென்று, இதயக் கோளாறுக்குச் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்த சிறுமி செல்வி உமாமகேஸ்வரி அங்கு அழைத்து வரப்பட்டார். மேற்கொண்டு செலவுஎவ்வளவு ஆயிற்று? என்று அவள் தந்தை ஜெயராமனிடம் கேட்டார் பிரதமர். "பதினேழாயிரம் ரூபாய் என்று பணிவோடு பதில் வந்தது. அதை உடனே தரும்படிக்கான சான்றிதழில் அங்கேயே கையெழுத்திட்டுக் கொடுத்தார் பிரதமர். அந்தச் சிறுமியினுடைய எதிர்காலப் படிப்பிற்கு வங்கிமூலம் வகை செய்து தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உத்திரவிட்டார்.

திரு.சீனிவாச ஐயர், திரு.திருநாவுக்கரசு முதலியார், திரு.வி.என். சாமிநாதன், திரு. என். இராதாகிருஷ்ண வாண்டையார், திரு எஸ். மோகன், பழநி. ஜெகதீசன் உள்ளிட்ட விவசாயப் பெருமக்கள் குழுவினர் பிரதமரிடம் ஒரு மனுக் கொடுத்தனர். அதில், தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு முழுக் காலமும் பயன்படும்படியாகக் கர்னாடக அரசிடம் பேசி 45 டி.எம்.சி. தண்ணீர் விடச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இர்வின் பாலம், பேருந்து நிலையம், மாமாசாகிப் சந்திப்பு, தெற்கு வீதி, மேல வீதி, கொடி மரத்து

**வீதியின் இருமருங்கும் நின்றிருந்தோரில் யாராவது மாலையுடனோ, எலுமிச்சம் பழத்துடனோ காத்திருப்பது தெரிந்தால் போதும், அவர் உடனே காரை நிறுத்தி அவற்றை வாங்கிக்கொண்டு அவர்களை மகிழ்வித்தார். 'அடடா, நாமும் மாலை கொண்டு வந்திருக்கலாமே" என்று, வெறுங்கையோடு நின்றோரில் பலரும் வருந்துவதைக் காண முடிந்தது.**

மூலை, கருந்தட்டான் குடி வழியாகப் பயணம் செய்த பிரதமர், கார் குடி சென்ற பிறகு திருவையாற்றில் உள்ள தியாகராஜர் சமாதிக்குச் சென்று வழிபட்டார். திரு.குன்னக்குடி வைத்தியநாதன் அங்கு அவரை வரவேற்றார்.

திருவையாறு அம்மன்பேட்டையில் ஆதிதிராவிட மக்களுக்காகக் கட்டப்பட்டிருந்த ''இந்திரா நினைவுக் குடியிருப்புக்குச் சென்று பார்வையிட்டார். பிரதமர், தன் காலைத் தொட்டுக் கும்பிட வந்த இருவரை அவரே தடுத்துத் தூக்கி விட்டார். அதேபோல் கண்டியூர் குடியிருப்பில் இறங்கிக் கொடியேற்றி வைத்தார். ரேஷனில் பாமாயில் கிடைப்பது தட்டுப்பாடாக இருப்பதாகப் பிரதமரிடம் குறைப்பட்டுக் கொண்டார் ஒரு பெண்மணி. அதுபற்றிக் கவனிக்கும்படி அருகிலிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்தார் பிரதமர்.

கல்யாணபுரத்தில் கூடியிருந்த முஸ்லீம் பெருமக்களிடையே இறங்கி அளவளாவினார் அவர். ''இந்த ஊர்ல வேறெந்தத் தலைவருமே இப்படி காரை நிறுத்தி இறங்கிப் பேசினதே இல்லீங்க'' என்று பெருமைப்பட்டுக் கொண்டார் ஒரு முதியவர்.

திருவையாறில் வைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பலகையின் ஆங்கில வாசகம் புதுமையாக இருந்தது.

Right
Administration
join
in giving
Valid support

—என்றிருந்த அந்த விளம்பரம் பெரும்பாலோரைக் கவர்ந்தது.

## திருச்சி மாவட்டத்தில்...

11.45 க்குத் திருமழபாடி வழியாகத் திருச்சி எல்லையை அடைந்தார் பிரதமர். மாபெரும் மக்கள் வெள்ளம் மங்கல வாத்தியங்களோடு அவரை எதிர்கொண்டழைத்தது. திருமானூரில் காரை விட்டிறங்கிய பிரதமர் சிறிது தூரம்வரை மக்கள் வெள்ளத்திலேயே மிதந்தார்.

அரண்மனைக் குறிச்சியில், இந்திரா நினைவுக் குடியிருப்பான ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்த 20 வீடுகளை அவர் திறந்து வைத்தார். அவருக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கருப்பையா, தஞ்சை பெரிய கோவில் கோபுர அமைப்பை பரிசாக வழங்கினார். திருமழப்பாடி அரசினர் மேனிலைப்பள்ளி அருகில்- 'நமக்குத் தேவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு; எதையும் தாங்கும் இதயம் பேரறிஞர் அண்ணா என எழுதி வைக்கப்பட்டிருந்தது. அங்கே அணிவகுத்து நின்ற மாணவ மாணவியரை மகிழ்ச்சி பொங்க வாழ்த்தினார்கள், திரு ராஜீவும், திருமதி சோனியாவும்.

கண்டிராதித்தம், செம்பியக்குடி, ஆலம்பாக்கம் வழியாகச் சென்ற பிரதமர் புள்ளம்பாடியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த கர்மவீரர் காமராஜர் சிலையைத் திறந்து வைத்தார்.

வெள்ளனூர், பூவானூர், லால்குடி, மாந்துறை, வேலாயுதபுரம், கபிரியேல் புரம், வாளாடி, மலைவாசல் வழியே ஸ்ரீரங்கம் வந்தாயிற்று. ராஜகோபுரம் உள்ள சன்னதி தெருவை அடைந்ததும் தன் காரை விட்டிறங்கிய பிரதமர் சோனியாவோடு திறந்த காரில் ஏறிக் காட்சிதந்தார். வானளாவி நிற்கும் கோபுரம் வரை அந்த ஊர்வலம். கோயிலடியில் வரவேற்பு. தரிசனம். மீண்டும் அதே போலப் பாலம்வரை திறந்த காரில் ஊர்வலம்.

திருவானைக்கோயில், உறையூர், புத்தூர் எங்கு பார்த்தாலும் எழுச்சிமயமான மக்கள் கூட்டம். கார்கள் போவதே சிரமப்பட்டது. ஆங்காங்கிருந்து மாலைகளையும், துண்டுகளையும் பிரதமரை நோக்கி மக்கள் வீசுவதும் - மக்களை நோக்கி மகிழ்வோடு அவற்றை அவர் திரும்ப எடுத்துப் போடுவதும் வழிநெடுகிலும் நடந்தது. சுற்றுலா மாளிகை சென்றடைந்தபோது மாலை 5.30 மணி.

பகல் உணவு முடிந்து, 6 மணியளவில் மீண்டும் பயணம். தோகை மலை, சிந்தாமணிப் பேட்டை, வெள்ளியணை எனப் பிரதமர் பயணத்திலிருந்த போது மழைத் தூற்றல் தொடங்கிவிட்டது. பிரதமர் வருகையினாலேயே போல மண்மாதா மனங்குளிர்ந்தாள்.

இரவு பதினோரு மணியளவில், கரூர், திண்டுக்கல் அகல ரயில் பாதைத் தொடக்கவிழா பிரதமர் ராஜீவ்காந்தி பச்சை விளக்கு காட்டி ரயில் போக்குவரத்தைத் தொடங்கி வைத்தார். விழாவுக்கு, மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா தலைமை தாங்கினார். அவ்விழாவில் பேசிய பிரதமர் - ''இத்திட்டத்தால் இந்தப்பகுதி வளர்ச்சியடையும் என நம்புகிறேன்'' என்றார்.

ரெட்டியார் பாளையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டம், தொடர்ந்து பெய்த மழையால் சிறிது பாதித்தது. இரவு 12.30 மணிக்குப் பிரதமர் பொதுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

பிரதமர் அவர்கள் உரையாற்றுகையில் ''இந்தியாவின் தொன்மையான நகரங்களில் பாடலிபுத்திரத்திற்கு இணையானது கரூர். பெரிய புராணத்திலேகூட கரூர் பற்றிப் பாடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நகருக்கு வர நேர்ந்தது எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது'' என்று குறிப்பிட்டார். காலஞ்சென்ற கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.முருகையா மறைவுக்கு அவர் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.



தியாகராஜர் நினைவிடத்தில்...

காவிரி நீர் பிரச்னை பற்றிப் பேசும்போது ''இனிய பொழில்கள், நெடிய வயல்கள், எண்ணரும் பெருநாடு'' என்று பாடிய பாரதியின் கனவு நனவாகும்'' எனத் தெரிவித்தார்.

கூட்டம் முடிந்து, குளித்தலை, பேட்டைவாய்த்தலை வழியாகக் கொட்டும் மழையில் மீண்டும் திருச்சி வந்து சேர்ந்தார்கள் நமது பிரதமர் திரு ராஜீவ்காந்தியும் அவர் துணைவியார் சோனியாவும்.

மூன்றாம் நாளான அன்று மட்டும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்த மொத்த தூரம் 275 கிலோ மீட்டர்கள்.

மறுநாள் (7.8.88) காலை 6.30 மணிக்குத் திருச்சி விமான நிலையத்திலிருந்து அவர்கள் நெஞ்சம் நிறைந்த பூரிப்போடும், நினைவகலாப் பெருமகிழ்வோடும், இராணுவ விமானம் மூலம் டில்லிக்குப் பயணமானார்கள்.

மொத்தத்தில்-மூன்று மாவட்டச் சுற்றுப் பயணம் மிகவும் எழுச்சி மயமாக அமைந்திருந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு 'சோழராஜா'

# விடுதலைப் போர்த் தியாகிகளை நன்றியுடன் பாராட்டுவோம்

இந்தியாவின் 42-வது விடுதலை நாளையொட்டி 15-8-88 அன்றுஅரசு தலைமைச் செயலகம் அமைந்துள்ள சென்னை • செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடி யேற்று விழா சிறப்புற நடைபெற் றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினார்.

அதற்கு முன்னதாக. அவ் விழாவிற்கு வருகை தந்த ஆளு நரை அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம்.ராஜேந்திரன் வர வேற்றார். சென்னையிலுள்ள முப் படை அதிகாரிகளையும், காவல் துறைப்பொது இயக்குநர், சென்னை நகரக் காவல் துறை ஆணையர், காவல்துறைச் சட்டம்- ஒழுங்குப் பிரிவு பொது ஆய்வாளர், சென்னை மாநகர ஷெரிப் ஆகியோரையும்ஆளு நருக்கு அவர் சம்பிரதாயப்படி அறி முகப்படுத்தி வைத்தார்.

அணிவகுப்பு மரியாதையை ஏற் றுக் கொண்ட ஆளுநர் - அதன்பின் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இவ்விழாவில், விடுதலைப் போராட்ட வீரர்கள் பலரும் பங்கேற்றனர்.

ஆளுநரின் ஆலோசகர்கள் திரு, ஜி.வி.ராமகிருஷ்ணா, திரு, ஆ. பத்மநாபன் ஆகியோரும் மற்றும் பலரும் பங்கேற்ற இவ்விழாவில், மேதகு ஆளுநர் அவர்கள் தமிழில் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''இந்த நாள் நாம் அனைவரும் போற்றி மகிழவேண்டிய நாள். விடுதலைக்காகப் பாடுபட்டவர் களுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய நாள். அதுமட்டுமல்ல, நாம் என்னென்ன தவறுகளைச் செய்தோம், எப்படியெல்லாம் தடு மாறினோம் என்பதையெல்லாம் ஆழ்ந்து, தீவிரமாகச் சிந்திக்க வேண் டிய நாள். ஒரு வலிமைமிக்க, ஒன்று பட்ட, செழிப்பான சுதந்திர இந் தியா உருவாகவேண்டுமென்ற கனவை நனவாக்க என்னென்ன திட்டங்கள் வகுத்தோமோ, அவற் றையெல்லாம் நினைவுகூர வேண் டிய நாள்.

''சரித்திரப் புகழ் வாய்ந்த இந்தக் கோட்டையில் நின்றுகொண்டு உங் களிடையே பேசும்பொழுது நமது விடுதலைக்காகப் பாடுபட்ட பல் லாயிரக்கணக்கான வீரர்களை நினைத்துப் பார்க்கிறேன். முக மலர்ச்சியுடன் அவர்கள் ஏற்றுக் கொண்ட இன்னல்கள், அவர்கள் புரிந்த வீரதீர தியாகச் செயல்கள் ஆகியவற்றை எண்ணிப் பார்க்கி றேன். இவர்கள் அனைவருக்கும் தலைவராக விளங்கிய மகான், நமது தந்தை மகாத்மா காந்தியடி களை நினைத்துப் பார்க்கிறேன்.

''நமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதும் என்று காந்தியடிகள் நினைக்க வில்லை. ஒன்றுபட்ட நாட்டை, ஒரு மித்த மனமுடைய மக்களை உரு வாக்கவும் அவர் பாடுபட்டார். வெள்ளையரை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரம் என்று அவர் நினைக்கவில்லை. அம்மாதிரி நினைத்திருந்தால் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் சுதந்திரம் பெற்ற பல நாடுகளில் ஏற்பட்டதுபோல், ஆட்சி செய்பவரின் நிறம் மட்டும் மாறியிருக்கும்.

''ஒவ்வொரு இந்தியனும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுக ளுக்கு அப்பால், ஜாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால், வாககுச் சீட்டின் மூலம் தன்னு டைய விதியை நிர்ணயித்துக் கொள் ளவேண்டுமென்று காந்தியடிகள் நினைத்தார். அந்த உரிமையைப் பெற்றுத் தருவதுதான் உண்மை யான சுதந்திரம் என்று அவர் நினைத்தார். சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த நன்னா ளில் அன்னாருக்கு நமது அஞ்சலி யையும், நன்றிக் கடனையும், செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

''நமது சுதந்திரப் போராட்டத் தின் முன்னணியில் தமிழகம் இருந் தது என்பதை மிகப் பெருமையுடன் கூற விரும்புகிறேன். வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டு மென்ற ஒரே கொள்கைக்காக, தமி ழக மண்ணில் தோன்றிய பலர் தமது பதவிகளையும், சொத்து, சுகங்களையும் துறந்து இருக்கிறார் கள். இந்தத் தலைவர்களுக்கும், விடுதலைக்காகப் பாடுபட்டு சிறை சென்ற சட்ட வல்லுநர்கள், மருத் துவ நிபுணர்கள், விவசாயப் பெரு மக்கள், தொழிலாளர்கள், எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி தடியடிபட்டு அல்லல் பல அனுபவித்த லட்சக் கணக்கான ஏழை எளியமக்களுக்கும், அஞ்சலி செலுத்தக் கடமைப்பட் டுள்ளோம். அவர்களில் பலர் தங் களது வாழ்நாளில் இந்தியா சுதந் திரம் அடையுமென்று நினைத்துக் கூட பார்த்து இருக்கமாட்டார்கள். இத்தியாகிகள் சிலர் இன்னும் நம் மோடு வாழ்ந்து கொண்டிருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி அளிக் கிறது. அதிலும் சிலர் இன்று இங்கே கூடியிருப்பது நமது மகிழ்ச்சியைப் பன்மடங்காக அதிகரிக்கிறது. நமக் குத் தெரியாத, நம்மால் போற்றப் படாத, பாராட்டப்படாத வீரர்கள் பல பேர் இருந்து இருக்கக்கூடும்.

''சுதந்திர இந்தியாவில் குடிமக்க ளாக இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கிறோம் என்றால், இவர்கள் அனைவரும் செய்த தியாகங்களி னால் தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த வீரர்களுக்கும் தியாகிகளுக்கும் எனது அஞ்சலியை யும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்''.

—இவ்வாறு தமிழில் உரை நிகழ்த்திய மேதகு ஆளுநர் அவர் கள், பின்னர் சிறிது நேரம் ஆங்கி லத்திலும் விடுதலைத் திருநாள் குறித்து உரையாற்றினார்.



**விடுதலை நாள் நிகழ்ச்சிகள் 41-ஆம் பக்கம் பார்க்க.**

சென்ற இதழ்த் தொடர்ச்சி

'47 '87

# நாற்பதாவது விடுதலை ஆண்டு தமிழக அரசு ஆற்றிய தொண்டு

கடந்த கால வரலாற்றை இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களது சக்தியை ஆக்க வழியில் திருப்பி, நாட்டுக்கும், வீட்டுக்கும் நற்பணியாற்றும் நல்ல குடிமக்களாக அவர்களை உருவாக்கும் வகையில் உப்புச் சத்தியாக்கிரகம் மீண்டும் நடத்திக் காட்டப்பட்டது. இந்த வழியில் குஜராத் மாநிலத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மேற்கொண்ட தண்டி யாத்திரையும், தமிழகத்தில் வேதாரணியம் புனிதப் பயணமும் பெருவெற்றி பெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க வேதாரணியம் உப்பு யாத்திரையை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்கள் 13-4-88 அன்று திருச்சியில் உப்புச் சத்தியாக்கிரக நினைவுத் தூண் அருகிலிருந்து துவக்கிவைத்தார்கள். இதே இடத்தில் இதே நாளில்தான் கடந்த 58 ஆண்டுகளுக்கு முன்பு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 100 தொண்டர்களுடன் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக யாத்திரையைத் துவங்கினார். இப்புனிதப் பயணம் நினைவாகக்கல்வெட்டு ஒன்றையும் மேதகு இந்தியக்குடியரசுத்துணைத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்.

தண்டி நினைவு யாத்திரையில் பயன்படுத்தப்பட்ட ஜோதியையும், தேசியக்கொடியையும் யாத்திரையில் கலந்து கொண்ட இளைஞர்கள் எடுத்துச்சென்றனர். ஏப்ரல் 13-ல் தொடங்கி 28-ஆம் தேதி வரை இப்பயணம் தொடர்ந்தது. மொத்தம் 221 கி.மீ. தூரம் நடந்து ஏப்ரல் 28-ஆம் தேதி காலை, குழுவினர் வேதாரணியம் சென்றனர்.

இந்த உப்பு யாத்திரையின்போது வழிநெடுகத் தொண்டர்களைக் கட்சி, மதம், இனம், மொழி என்ற எந்த வேறுபாடுமின்றி கிராமமக்கள் வரவேற்றனர். வயது வித்தியாசம் கூட குறுக்கே நிற்கவில்லை. பல கோயில்களிலிருந்து பூரண கும்ப வரவேற்பு அளிக்கப்பட்டதைப் போலவே, இஸ்லாமியர், கிருத்துவர்கள் வாழும்பகுதிகளில் அவரவர்களது சமயமுறைப்படி பாடல்கள் பாடி வரவேற்றனர். சமூக நல இயக்கங்கள், பெண்கள் சங்கங்கள், மாணவர்கள் எல்லாத் தரப்பினரின் வரவேற்பும் யாத்திரைக் குழுவினருக்குக் கிடைத்தன. யாத்திரையின்போது தொண்டர்கள் மரக்கன்றுகளை நட்டனர். துப்புரவுப் பணிகளைச் செய்தனர். சாலைகள் அமைத்தனர். அரிசனங்களுக்காகப் பணி செய்தனர். மதுவிலக்குப்பிரச்சாரம், தீண்டாமை எதிர்ப்புப்பிரச்சாரம் செய்தனர். ஆங்காங்கே கூட்டங்கள் நடத்தி தேசபக்தியும், தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் மிக்க சொற்பொழிவுகள்-கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**இந்திய விடுதலையின் 40வது ஆண்டினை யொட்டி தமிழக அரசு அதன் தொடர்பாக ஆற்றியுள்ள பணிகள் - உருவாக்கி வரும் திட்டங்கள் இங்கே தொகுத்துச் சொல்லப் பட்டுள்ளன.**



ஏப்ரல் 28 அன்று வேதாரணியத்தில் தொண்டர்களுக்கு வரவேற்புக் கூட்டம்மேதகு ஆளுநர் முன்னிலையில் நடைபெற்றது. விழாவின் துவக்கத்தில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அகஸ்தியம் பள்ளி சென்று சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியின் நினைவாக அங்கு எழுப்பப்பட்டுள்ள நினைவுத் தூணுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

1930-ல் மூதறிஞர் இராஜாஜியின் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட தியாகச் செம்மல்கள், திருவாளர்கள் ஜி. இராமச்சந்திரன், ஓ.வி. அளகேசன் சர் வெங்கட்ராமஐயர், வந்தே மாதரம் செட்டியார், ஆர். எஸ். இராமகிருஷ்ணன், என்.ஏ.வி. பதி, கே.ஏ. சுப்பிரமணியம், ஏ. பால சுப்பிரமணியம், ஏ. பாலகிருஷ்ணன் டி. என். பாலசுப்பிரமணியம், சண்முகம்பிள்ளை, திருவேங்கடம், ஏ. பழனிவேலு ஆகியவர்களும், மூதறிஞர் இராஜாஜியின் புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன், உப்புச் சத்தியாக்கிரகப் போரை வேதாரணியத்தில் பெரும் எதிர்ப்புகளுக்கிடையில் முடித்துக் கொடுத்து வெற்றி கண்ட சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் மைந்தன் திரு. வே. அப்பாக்குட்டி, டாக்டர் ம.பொ. சிவஞானம், வேதாரணியத்தில் சவரத் தொழில் நடத்தி வந்தவரும் அப்போராட்டத்தில் அடக்குமுறை செய்ய வந்த அந்தக் காலத்துக் காவலர்களுக்கு முகச் சவரம் செய்ய மறுத்து அதற்காக ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றவருமான திரு. வைரப்பன் ஆகியோருக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கினார். உப்புச் சத்தியாக்கிரக நினைவுக் கல்வெட்டைத் திறந்து வைத்தார்.

அகஸ்தியம் பள்ளியில் உப்புச் சத்தியாக்கிரக நினைவு ஆலயம்

**நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப.,**
**இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை**

அமைக்க வேதாரணியம் ஆலயத்திற்கு உரிமையான 10 ஏக்கர் நிலத்தில் உப்பெடுத்து வந்த உரிமையை திருமதி வேதம்மாள், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

வேதாரணியம் உப்பு யாத்திரை நிறைவு விழா-உப்பு எடுக்கும் விழா 30-4-88 அன்று அகஸ்தியம் பள்ளியில் நடை பெற்றது. அதிகாலையில், தொண்டர்கள் உப்பு எடுத்தனர். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் தியாகிகளோடு உப்பு எடுத்ததுடன், அவர்களது புனிதப் பயணத்தை நிறைவு செய்து, போற்றிப் பாராட்டினார்.



உப்பு யாத்திரையையொட்டி திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் புனிதப் பயணம் சென்ற வழிகளில் பல வளர்ச்சிப் பணிகளை அரசு மேற் கொண்டது.

திருச்சி மாவட்டம், திருவளர் சோலை, கிளிக்கோடு ஆகிய கிராமங்களில் 20 ஆதிதிராவிடர் குடியிருப்புகள், ஒவ்வொன்றும் ரூ. 2.40 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் தொட்டக்காடு, சாத்தனூர், நல்லூர், காசான்குளம், ஆதிச்சபுரம், மேல மருதூர், பூவனூர் மற்றும் ஆயக்காரன்புலம் ஆகிய கிராமங்களில் ஒவ்வொன்றும் ரூ. 50,000 செலவில் சமூக நலக்காடுகள் உருவாக்கப்படுகின்றன.

வழுத்தூர், தகட்டூர் ஆகிய கிராமங்களில் ஒவ்வொன்றும் ரூ. 50,000 செலவில், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. ரொக்கக் குத்தகை என்ற கிராமத்தில் ரூ. 5,000 செலவில் வாய்க்கால் ஒன்று கட்டப்பட்டது. உப்பு யாத்திரையை ஒட்டி திருச்சியிலிருந்து வேதாரணியம் வரையிலான 221 கி. மீட்டர்கள் தூரப் பாதை ரூ. 40.65 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் வேலூர் சிறையில் வைக்கப்பட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து வேலூர் சிறையில் 10-4-1988 அன்று விழா எடுக்கப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் போன்ற தலைவர்கள் இச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். இவ்விழாவில் டாக்டர் ம.பொ. சிவஞானம், திரு. எஸ். என். சோமையாஜுலு ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதே போன்று கோயம்புத்தூர் சிறையில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூரும் விழா 11-6-88, அன்று கோவை சிறையில் நடைபெற்றது.

செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்கள் 1908-ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறைபட்ட அறையில் வ.உ. சிதம்பரனார் நினைவாக நிறுவப்பட்ட கல்வெட்டினை டாக்டர் ம. பொ. சிவஞானம்அவர்கள் திறந்துவைத்தார். சிறைச்சாலையின் முன்புறம், கோவைச் சிறையிலிருந்த தியாகிகளின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுத்தூண் திறந்து வைக்கப்பட்டது. அன்று நடந்த விழாவில் தியாகிகள் பதின்மரின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன. விடுதலைப் போராட்ட வீரர்கள் சிறப்பு செய்யப்பட்டனர். விழாவில் 40-வது சுதந்திரத்தை முன்னிட்டு 40 பேருக்கு இலவச மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் தியாகிகள் நலனைப் பேண ஒருங்கிணைந்த சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேலூர், கோவை சிறைகளில் நடைபெற்றது போன்று விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூரும் விழா 30-7-'88 அன்று திருச்சி சிறையிலும் நடைபெற்றது. திருச்சி மத்திய சிறைச்சாலை வளாகத்தில் எழுப்பப்பட்ட நினைவுத் தூண் திறந்து வைக்கப்பட்டது. திருச்சிச் சிறையில் வைக்கப்பட்ட விடுதலை வீரர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

ஆகஸ்ட் புரட்சி தினமான 9ஆம் தேதியன்று ( 9.8.88 ) டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் நூற்றாண்டு விழா சென்னையில் கொண்டாடப் பெற்றது.

40வது விடுதலை ஆண்டின் நிறைவு விழா ஆகஸ்ட் 14, 15 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கல்வித்துறையின் சார்பாக பண்டித ஜவஹர்லால் நேரு மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள் புகழ்பாடும் 'கருத்தரங்குகள், கட்டுரைப் போட்டிகள், திரைப் படக் காட்சிகள் நடத்தப்படுகின்றன.

பல்கலைக்கழக ஆராய்ச்சி விருதுகளுக்கென பல்வேறு தலைப்புகளாக நேருவின் சிந்தனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளிடையே நாட்டுப்பற்றினை வளர்க்க அவர்கள் பாடும் வகைகளில் 'கோரஸ்' பாடலகள் தயாரிக்கப்படுகின்றன.

அனைத்துப் பள்ளிகளிலும் கணக்குப் பாடம்போதிப்பதில் முன்னேற்றம் ஏற்படுவதற்காக பாடத் திட்டம் திருத்தி அமைக்கப்படுகிறது. தற்போது புதிதாகத் துவக்கப்பட இருக்கும் கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்திற்கு நேருவின் புனிதப் பெயர் சூட்டப்படும். விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறையின் மூலம் நேரு யுவக் கேந்திரங்கள் வலுவூட்டப்படும். மாநிலத்தில் எட்டு இடங்களில் விளையாட்டு வளாகங்கள், நீச்சல் குளங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் கட்டும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து ஊராட்சிகளிலுள்ள 11,530 மகளிர் நலநிலையங்கள் மூலம் பெண்களின் படிப்பறிவின்மையைப் போக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பெண்கள் நல முன்னேற்றத்திற்காகப் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களை மரம் நடும் திட்டத்தில் ஈடுபடுத்தி, மரம்நடும் திட்டத்தை ஒரு பாடமாகவே அவர்களுக்கு ஏற்படுத்தப்படும். இவ்வாண்டு 10,000 பள்ளிகளில் இம்முறை அறிமுகப் படுத்தப்படுகிறது.

சமூகவனக் காடுகள் திட்டத்தின் கீழ் 11,000 எக்டேர் உட்பட 35,000 எக்டேர் நிலங்களில் வனக் காடுகள் அமைக்கும் திட்டம் செயல் படுத்தப்படும்.

பழநி, கொடைக்கானல் மலைப் பகுதிகளிலும், குற்றாலத்திலும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளி லும் மரம் வளர்ப்புத் திட்டங்கள் முனைப்புடன்செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தொழு நோய் பீடிப்பு அதிகம் உள்ள 17 மாவட் டங்களிலும்,குறைவாயுள்ள மாவட் டங்களிலும் தொழுநோயை ஒழிக்க பலநோக்கு மருத்துவ சிகிச்சை அறிமுகப்படுத்தப்படுகிறது.

தமிழில் மொழி மாற்றம் செய் யப்படும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வெளியிடப்படுகிறது.

சுற்றுப்புறச் சூழல் கெடுவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகள், கழிவு களிலிருந்து சக்தி உருவாக்குதல் போன்றவற்றைப் பற்றிய விளக் கங்கள் செய்தித் தொடர்புச் சாத னங்கள் மூலம் மக்களுக்குக் காட் டப்பட உள்ளன.

விடுதலைப் போராட்ட வீரர் களின் ஓய்வூதியத் தொகை தொடர்பாக நிலுவையிலிருந்த கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு வரு கின்றன.

திருச்சி மற்றும் வேதாரண்யத் திற்கு இடையேயான, உப்புயாத் திரை வீரர்கள் சென்ற வழியில் உள்ள இடங்களில் ஆதிதிராவிடர் களுக்குச் சமுதாய நலக்கூடம், தொகுப்பு வீடுகள் போன்ற 13 பணிகள் ரூ.9.85 இலட்சம் செல வில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

கோயம்புத்தூரிலுள்ள வேளாண் மைப் பல்கலைக் கழகம், 1947 ஆம் ஆண்டு இந்தியாவின் வேளாண்மை நிலை, இதுவரை ஏற் படுத்தப்பட்ட வேளாண்மை வளர்ச்சி, வருங்காலத்தில் ஏற்பட இருக்கின்றபிரச்சினைகள்இவற்றைப் பற்றி ஆராய மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கருத்தரங் கங்கள் நடத்தும்.

வேளாண்மைப் பல்கலைக் கழ கத்தின் சார்பில் 1989-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நேரு நூற் றாண்டு விழா கொண்டாடப்படும். ஜவஹர்லால் நேரு அவர்கள் பெயரி லான சிறப்பு விருதுகளை வேளாண் மைப் பல்கலைக்கழகம் உருவாக்க உள்ளது. வேளாண்மையில் சாதனை படைத்த வேளாண் பெரு மக்களும், விவசாயத் தொழிலாளர் களும் தகுந்த முறையில் கௌர விக்கப்பட உள்ளனர்.

விடுதலைப் போரில் தமிழகம் ஆற்றிய பங்கினை எடுத்துக் கூறும் வகையில் 20 நிமிடம் ஓடக்கூடிய திரைப்படம் ஒன்று தயாரிக்க ரூ. 5.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மேலும் ஜவஹர்லால் நேரு அவர்களைப் பற்றிய வீடியோ படம் தயாரிக்க ரூ. 70,000 ஒதுக் கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள் ளது.

கிராமத்தொழில்கள்,வேளாண்மை, பால்வளம்ஆகிய துறைகளில் பெண் டிர் பொருளாதார முன்னேற்றம் எய்துவதற்கான சிறப்புத் திட்டங் களைத் தமிழ்நாடு மகளிர் முன் னேற்றக் கழகம் செயல்படுத்தத் துவங்கி உள்ளது.

தொழிலாளர் நலத்துறையின் சார்பில் மாமல்லபுரத்தில் ரூ. 27 இலட்சம் செலவில் தொழிலாளர் விடுமுறை இல்லம் கட்டப்பட்டுள் ளது.

வில்லுப்பாட்டு, ஒலி-ஒளிக்காட்சி மூலமாகவும், இசை, நாடகம், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் மூலமாக வும், ஏனைய செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும்விடுதலைப் போராட்டம் பற்றியும்,நேரு அவர் களின் நூற்றாண்டு பற்றியும் மக் களிடையே விளக்கப்படும்.

விடுதலைப் போராட்டம் நடை பெற்ற இடங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் குறிக்கும் சிறப்புகளைக் கொண்ட படங்கள் அடங்கிய கையேடுகள் வெளியிடப் பட்டு வருகின்றன.

விடுதலை பெற்ற பின்னர் இம் மாநிலம் பல்வேறு துறைகளில் அடைந்த வளர்ச்சி பற்றி வெளி யீடுகள் கொண்டு வரும் பணி நடை பெற்று வருகிறது.



விடுதலைப் போராட்ட இயக்கம் தொடர்பான நினைவுச் சின்னங்கள் அழகுபடுத்தப்படுகின்றன.

விடுதலைப் போராட்டம்நிகழ்ந்த வரலாற்றுமுக்கியத்துவம் கொண்ட இடங்களுக்கும், கைத்தொழில்கள் சிறக்கும் இடங்களுக்கும், கலை, பண்பாடு சிறந்து விளங்கும் இடங் களுக்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிய வகையில் சுற்றுலாப் பயணங்களை ஏற்பாடு செய்து வருகிறது.

இந்திய விடுதலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலை சென்னை கிண்டி அருகில்21-12-87 அன்று திறந்து வைக்கப்பட்டது.10 அடி உயரமுள்ள வெண்கலத்தி லான அச்சிலையை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி சத்தியமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக அவரின் திருவுருவச் சிலையை புதுக் கோட்டையில் 21-12-87 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.

கல்லூரி மாணவர்களுக்கென ஜவஹர்லால் நேரு அறிவியல் ஆற்றல் நூல் திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்குக் குடிநீர் வழங்கவும், அவர்களுடைய குடி யிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் போடவும், தீப்பிடிக் காத வீடுகள் கட்டவும் காமராஜர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட் டம் மொத்தம் 27 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் அண்மையில் துவக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் ரூ. 3 இலட்சம் செலவில் ராஜாஜி நினைவு நூலகம் ஒன்று கட்டப் பட்டு, 2-10-87 முதல் செயல்பட்டு வருகிறது. முதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆற்றிய முக்கிய சொற் பொழிவுகள் கேசட்டில் ஒலிப்பதிவு செய்து நூலகத்தில் ஒலிபரப்ப ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை அடையாறில் ரூ. 2 கோடி செலவில் நிறுவப்பட்ட பி. எம். பிர்லா கோளரங்கக் கூடத்தை மேதகு இந்தியக் குடி யரசுத் தலைவர் அவர்கள் 9-5-'88 அன்று திறந்து வைத்தார்.

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம், குழந்தைகள் அறி வியல், தொழில் அறிவியல் பூங்கா இவை ஏற்படுத்தப்பட உள்ளன.

# 20 அம்சத்திட்டச் சாதனைகள்

**எம். தேவராஜ், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**மதுரை மாவட்டம்.**

வறுமையை ஒழிக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், சமுதாய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிடவும், நலிவுற்றோர் வாழ்வை மலரச் செய்யவும்,பாரதப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டப்பணிகள் சீரிய முறையில் நம் நாட்டில் செயல்படுத்தப்படுகின்றன. அந்த வகையில், மதுரை மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் விவரம் பின்வருமாறு:

**கிராமப்புற வறுமையை நீக்குதல் (அம்சம் 1)**

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை எளியவர்களின் வருவாயை மேம்படுத்தும் பொருட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்குக் குறைவாக இருப்பவர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கறவை மாடுகள், உழவு மாடுகள் வாங்கவும், ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, சுய வேலைவாய்ப்பு, தொழில் வணிகம் போன்ற பணிகளுக்காகவும் தேவைப்படும் நிதி உதவி, வங்கி மூலம் வழங்கப்படுகிறது.

1987-88 நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ்10,953பழைய குடும்பங்களும், 3671 புதிய குடும்பங்களும் பயனடைய வேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயம் செய்ததில், 10,972 பழைய குடும்பங்களும், 3672 புதிய குடும்பங்களும் பயன் பெற்றுள்ளன. அவர்களில் 7365 ஆதிதிராவிட மக்களும்,4519 பெண்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டு மொத்த ஒதுக்கீட்டில் 50 சதத்துக்குக் குறையாமல் வேலை பார்ப்பவர்களுக்கு ஊதியமாக வழங்க ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு நபருக்கும் தினசரிக் கூலி ரூ. 10. இதில் 1.5 கிலோ அரிசி ரூ. 2.80, 1 கிலோ கோதுமை ரூ. 1.55,மீதம் ரூ. 5.65 பணமாகவும் தரப்படுகிறது.நடப்பு ஆண்டில் 16.54 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதில், 20.02 லட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டு 121 சதம் சாதனை எட்டப்பட்டுள்ளது.

நிலமில்லாத தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், சாலைகள் அமைத்தல், கழிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், மதகுகளைப் புதுப்பித்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தும் வேலைகளில் பணி புரிபவர்களுக்கு நபர் ஒன்றுக்கு தினக்கூலியாகக்குறைந்தது ரூ.2.80 பெறுமான 1.5 கிலோ அரிசி, ரூ. 1.55 பெறுமான 1 கிலோ கோதுமை, ரொக்கம் ரூ. 5.65 ஆக ரூ. 10 வழங்கப்படுகிறது. இதன் மூலம் 10.29 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டுக்கு மேலாக, 11.99 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின்கீழ் சிறு தொழில், குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை அதிகம் பதிவு செய்து அவைகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின்படி மதுரை மாவட்டத்திற்கு 350 சிறு தொழில்கள் தொடங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், மார்ச் '88 முடிய 776 சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன.

**நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல் (அம்சம் 5)**

இத்திட்டத்தின் மூலம் 85 ஏக்கர் உபரி நிலம் வழங்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், மொத்தம் 103 ஏக்கர் உபரி நிலம் கைப்பற்றப்பட்டு, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



**சுத்தமான குடிநீர் வழங்குதல் (அம்சம் : 7)**

மதுரை மாவட்டத்தில் 100 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மார்ச் '88 முடிய 110 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் 99,330 மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

**அனைவருக்கும் சுகாதார வசதி (அம்சம்: 8)**

ஆரோக்கியமான குழந்தைகளால்தான் இந்நாட்டின் எதிர் காலத்தைச் சிறப்பாக அமைக்க முடியும் என்பதனைக் கருத்தில் கொண்டு, குழந்தை நலப்பணிகள் நடைபெறுகின்றன. அந்த அடிப்படையில் 55,400 குழந்தைகளுக்கு முந்நோய்த் தடுப்பு ஊசி போட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், மொத்தம் 79,332 குழந்தைகளுக்கு முந்நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 55,400 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோயிலிருந்து, பாதுகாப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டு, இலக்கிற்குமேல் 78,730 குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

55,400 குழந்தைகளுக்குக் காச நோய்த் தடுப்புச் சிகிச்சைஅளிக்கத் திட்டமிடப்பட்டதில், 78,887 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**குடும்ப நலம் (அம்சம்: 9)**

''அளவோடு பெற்று வளமுடன் வாழ்க'' என்ற தத்துவத்தினை மக்களுடைய மனதில் பதியும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டது. குடும்பநல முகாம்கள் நடத்தப்பட்டன. 45,085 நபர்களுக்கு குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர்களுக்கு உதவி (அம்சம்: 11)**

இம்மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டில் 5149 ஆதிதிராவிடர்களுக்கு, அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால், 51,678 ஆதி திராவிடர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**வீட்டுவசதி (அம்சம்: 14)**

இம்மாவட்டத்தில்21,500வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டு மனை அளிக்கப்பட வேண்டுமென அரசு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கிற்குமேலாக40,799 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் மட்டத்திலுள்ள மக்களுக்கு 250 வீடுகள் கட்டிக் கொடுக்குமாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், மொத்தம் 5334 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலம் 367 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது மார்ச் '88 முடிய மொத்தம் 2116 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்த விலையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், 80 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட

**நமது ஒற்றுமை, நமது வலிமை**

**இந்தியா வலிமையாக இருந்தால் தான் ஒவ்வொரு இந்தியனும் வலிமையோடு இருக்கலாம். இந்தியாவின் பல வீனம் ஒவ்வொரு இந்தியனுக்குமே பலவீனம். இந்திய மக்களை வலிமை கொண்டவர்களாக்குவதும், நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதும், எப்போதுமே நமது முயற்சியாக இருந்து வருகிறது. நமது மதிப்பும், முன்னேற்றமும் நமது வலிமையில் உள்ளன. — பிரதமர் ராஜீவ் காந்தி**

இலக்கைவிட, 3386 வீடுகள் இம் மாவட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**குடிசைப் பகுதியைச் சீர் செய்தல் (அம்சம்: 15)**

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் இருபது அம்சத் திட்ட முன்னேற்றத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி குடிசைப் பகுதிகளில் பொதுமக்களின் உபயோகத்திற்காக நவீன கழிப்பிடம் கட்டுதல், சாலை அமைத்தல், குடிநீர் வசதி, கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல் முதலியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 13792 நபர்கள் பயன் பெற வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டிற்கு மேல், 30,000 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

**மரங்கள் நடுதல் (அம்சம்: 16)**

இம்மாவட்டத்தில்86.30 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மொத்தம் 106.29 லட்சம் மரக்கன்றுகள் ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை



மற்றும் சமூக நலக்காடுகள் அலுவலர்கள் மூலமாக நடப்பட்டுள்ளன.

**கிராமங்களுக்கு மின்வசதி (அம்சம்: 19)**

விவசாய விளை பொருள்களின் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு 1380 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, மதுரை மின்திட்டத்தின் மூலம் 2544 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மாற்று எரிபொருள்**

இம்மாவட்டத்தில் 4000 புகையில்லாத அடுப்புகள் அமைக்கப்படவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கையும் மீறி 12,510 புகையில்லாத அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**சாண எரிவாயுத் திட்டம்**

1987-88ஆம் ஆண்டில் 1200சாண எரிவாயுக் கலன்கள் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென இம்மாவட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மொத்தம் 2243 கலன்கள் 21 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அமைத்துக் கொடுத்து, மாநிலத்திலேயே முதன்மையான மாவட்டமாக மதுரை மாவட்டம் திகழ்கிறது. ஒன்றிய அளவில் மதுரை கிழக்கு ஒன்றியத்தில் 500 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டப்பணிகளைச் சிறப்பான வகையில் 1987-88-இல் நிறைவேற்றியதன் மூலம் மாநில அளவில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது மதுரை மாவட்டம். தொடர்ந்து நடப்பு நிதியாண்டிலும் இருபது அம்சத் திட்டப்பணிகள் சீரிய முறையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
ஆரோக்கியம் இருக்குமிடம்!




லைப்பாய்
அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS LB P 100 2317 TM

# இந்திய தரநிர்ணய அமைவனம்

ஜி. கணேசன்,
உதவி இயக்குநர், (மக்கள் தொடர்பு)
இந்திய தர நிர்ணய நிறுவனம்.



ஐ.எஸ்.ஐ என அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த 'இந்திய தர நிர்ணய நிறுவனம்' இந்திய அரசாங்கத்தால் 1947-ஆம் ஆண்டு, தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் போன்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் தோற்றுவிக்கப்பட்டது. பொதுவாக பொருள்களின் தரத்தை உயர்த்தவும், அதற்காக ஒரு வழிமுறை வகுக்கவும், பொருள்களின் தரத்தை உயர்த்தப்போதுமான - தேவையான பரிசோதனைக் கூடங்கள் உள்ளனவா என்று கண்டறியவும், நுகர்வோர்களைப் பாதுகாக்கவும், மக்களிடையும் உற்பத்தியாளர்களிடையும் தர உணர்வை ஏற்படுத்தவும், 1987-ஆம் ஆண்டு, ஏப்ரல் முதல் நாளன்று நாடாளுமன்றம் 'பீரோ ஆப் இண்டியன் ஸ்டெண்டெர்ஸ்' என்ற சட்டத்தின் மூலம் இந்த நிறுவனத்திற்குச் சட்ட ரீதியான அந்தஸ்தையும், கூடுதலான அதிகாரங்களையும் அளித்தது.

## குறிக்கோள்

ஒவ்வொரு உற்பத்திப் பொருளுக்கும் தரவரம்பு நிர்ணயித்தல், தரமான பொருள்கள் தயாரிக்க ஒரு பொதுமுறை மூலம் நற்சான்றுகள் வழங்குதல், இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள பொருள்கள் இந்திய தர வரம்புகளுக்கு உட்பட்டு இருக்கும் பொருட்டு 'ஐ.எஸ்.ஐ' முத்திரை வழங்குதல், உலக அளவில் இந்தியப் பொருள்களின் தரத்தை மேலும் உயர்த்துவதற்குவேண்டிய உதவிகள் செய்தல் போன்றவை இந்த நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

தரமான பொருள்களை உற்பத்தி செய்யத் தேவையான பல்வேறு விதமான வழிமுறைகளைத் தெளிவாக விளக்கும் நூல்களே இந்திய தரக்கட்டுப்பாட்டு நியமங்கள் எனப்படும். அவை மூலப் பொருள்கள், முற்றுப் பெறாத மூலப் பொருள்கள் போன்றவற்றை விளக்குகின்றன. இந்திய தரநிர்ணய அமைவனத்தில் தரக்கட்டுப்பாட்டு நியமங்களைப் பதிப்பிக்க 3000-க்கும் மேற்பட்ட தொழில்நுணுக்கக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களில் பங்கேற்கும் உறுப்பினர்கள் வல்லுநர்களாக இருப்பதுடன், பலதுறைகளுக்குப் பிரதிநிதிகளாகவும் விளங்குகிறார்கள். உதாரணமாக நுகர்வோர்கள் சிறுதொழில் புரிவோர்களின் சங்கங்கள், உற்பத்தியாளர்கள், விஞ்ஞானிகள் பரிசோதனைக் கூடங்கள் - இவர்களுக்கு இக்குழுக்களில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகின்றது. தரக்கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டு, இக்குழுக்களின் பரிந்துரைகள் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டு, தர நியமங்களாக நூல்களில் வடிவம் பெறுகின்றன. தற்பொழுது சுமார் 14,000 தரநியமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## ஐ.எஸ்.ஐ முத்திரை

தரம் தெரிந்து கொள்ள முடியாத பொருள்களிலிருந்து தரம் உள்ள பொருள்களைத் தனியாக அறியும் பொருட்டு அரசாங்கம் அளித்திருக்





கும் சின்னமே ஐ.எஸ்.ஐ. தர முத்திரை. இந்திய தர நியமங்களில் கூறியபடி உற்பத்தி செய்வோர்களுக்கு இந்தத் தர முத்திரை வழங்கப்படுகிறது. இதனால் நுகர்வோர்களுக்குத் தரமான பொருள்கள் கிடைக்க வழி செய்யப்படுகிறது. மத்திய அரசால் 1987-இல் இயற்றப்பட்ட பீரோ ஆப் இந்தியன் ஸ்டென்டெர்ஸ் என்ற சட்டத்தின் கீழ் ஐ.எஸ்.ஐ. தர முத்திரை வழங்கப்படுகிறது. எந்த உற்பத்தியாளரும் ஒரு குறிப்பிட்ட தரக்கட்டுப்பாட்டு நியமங்களில் வரையறுக்கப்பட்டபடி உற்பத்தி செய்தால் அவர் ஒரு குறிப்பிட்ட தொகையுடன் அதற்காக ஏற்படுத்தப்பட்ட விண்ணப்பத்தில் இந்திய தரக்கட்டுப்பாட்டு அமைவனத்திற்கு விண்ணப்பிக்கலாம். பிறகு தரநிர்ணய அதிகாரிகள் உற்பத்திக் கூடத்தைப் பார்வையிட்டு, உற்பத்தி செய்த பொருள்கள் இந்திய தரக்கட்டுப்பாட்டு நியமத்தில் கண்ட பல்வேறு பரிசோதனைகளின்படி இருக்கின்றனவா என்று பரிசோதிப்பார்கள். அவை அனைத்திலும் அப்பொருள் எவ்வித குறையுமின்றித் தேர்ச்சி பெற்றால் அவை தரக் கட்டுப்பாட்டு முத்திரைக்குத் தகுதியானவை என ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின் ஒழுங்கான நடைமுறைத் திட்டம் (Scheme of testing and inspection) ஒன்று வழங்கப்பட்டு அதனை உற்பத்தியாளர்கள் பின்பற்ற வற்புறுத்தப்படுவார்கள். திட்டப்படி தரமான பொருள் தயாரிக்கப்படுகிறதா என்று பரிசோதிக்க உற்பத்திக் கூடத்திலும், வெளிக்கடைகளிலும் அப்பொருளை அவ்வப்போது வாங்கிப் பரிசோதனை செய்யப்படும். அதற்

காக சென்னை, பம்பாய், கல்கத்தா டெல்லி, பெங்களூர், பாட்னா போன்ற இடங்களில் பரிசோதனைக் கூடங்களை இந்த அமைவனம் நிறுவியுள்ளது. இந்திய தரக்கட்டுப்பாட்டு முத்திரையிட்ட எந்த ஒரு பொருளும் தரக்குறைவாக இருந்தால் இந்த அமைவனத்தின் தலைமை/மண்டல/கிளை அலுவலகங்களில் ஏதாவது ஒன்றில் கீழ்க்கண்ட விவரங்களோடு புகார் செய்யலாம்.

(1) பொருள்களின் பெயர் வகை/வாங்கப்பட்ட இடம்/நாள் இவற்றோடு குறையின் விவரம்.

2. பணம் கட்டிய ரசீது எண் (இருந்தால்)

3. குறையுடைய பொருள் உற்பத்தி செய்யப்பட்ட நாள்/தொகுதி எண்.

புகாரின் மேல் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவ்வாறு உண்மையிலேயே தரக்குறைவாக இருப்பின், அந்தப் பொருளுக்கு பதிலாகத் தரமான வேறு மாற்றுப் பொருள் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. தவிர, தரம் தாழ்ந்த பொருள்களைத் தயாரித்ததற்காக உற்பத்தியாளரின் மேல் தக்க நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. இந்தத் தவறு மீண்டும் நிகழாதிருக்கும் பொருட்டு வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கட்டாய தரக்கட்டுப்பாடு**

மக்களின் உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய பொருள்கள் சிலவற்றையும், விபத்து ஏற்படுத்தக்கூடிய பொருள்கள்/சாதனங்கள் சிலவற்றையும் மத்திய அரசு கட்டாய தரக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றன. இந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய பொருள்களை ஐ.எஸ்.ஐ. தர முத்திரை இல்லாமல் உற்பத்தி செய்வதோ, விற்பதோ குற்றமாகும்.






**கட்டாய தரக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள சில பொருள்கள்**

உணவு—கலர் பௌடர்கள்
வனஸ்பதி
சிமெண்ட்
ஸ்டீல்
பம்ப் ஸ்டவ்

கீழ்க்கண்ட மின்சார சாதனங்கள்:

இஸ்திரிப்பெட்டி
எலக்டிரிக் ஸ்டவ்
ஸ்விட்சுகள்
காஸ் சிலிண்டர்

மற்றும் கட்டாயமாக்கப்படாத, பல பொருட்களுக்கும் இந்த அமைவனம் ஐ.எஸ்.ஐ. தர முத்திரை வழங்கியிருக்கிறது. அவைகளில் சில:

காபித் தூள்
பிஸ்கட்
சவர பிளேடு
அலுமினியப் பாத்திரங்கள்
பனியன்கள்
போர் பம்ப்
ஹெல்மெட்
பிரஷர் குக்கர்

**பயிற்சித் திட்டங்கள்**

உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள், விற்பனையாளர்கள் போன்ற எல்லோரிடத்திலும் தரம் சம்பந்தப்பட்ட ஒரு தரமான விழிப்புணர்ச்சி ஏற்படுத்த இந்த அமைவனம் அயராது சேவை செய்கிறது. தொழில் கூடங்களில் ஒழுங்குமுறை உற்பத்திக்காகவும், தொழில்கூட இயந்திர தளவாட தரக்கட்டுப்பாட்டுக்காகவும் ( In plant - standardation ) இந்த அமைவனம் பயிற்சி முகாம்கள், மாநாடுகள், சார்புத் தொழிற்கூடங்களைப் பார்வையிடுதல் போன்ற நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டு வருகிறது.

உலக அளவில் வளர்ந்துவரும் நாடுகளிலிருந்து, இளம் தொழில் விஞ்ஞான வல்லுநர்களை வரவழைத்துப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. நம்நாட்டில் தொழில் கல்விக் கூடங்களில் தரக்கட்டுப்பாட்டு நியமங்கள் வேரூன்ற தரக்கட்டுப்பாட்டு நியமங்கள் பயன்பட வேண்டிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாநில அரசின் பங்கு**

மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் தமிழ்நாடு அரசு மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டுக் குழு ஒன்று ஆணையர் மற்றும் செயலர் (தொழில்) தலைமையில் செயல்பட்டு வருகிறது. இக்குழு பொதுவாக, தரம், தரத்துக்கான வழிமுறைகள், தரமான பொருள்கள் உற்பத்தி செய்யத் தேவையான பரிசோதனைக் கூடங்கள், ஐ.எஸ்.ஐ. போன்ற தர முத்திரை இட்ட பொருள்களை வாங்குவதில் ஊக்கம் அளிக்க விலையில் சலுகை, தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யப் பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றைப் பரிசீலனைசெய்து மாநில அரசாங்கத்திற்கு அவ்வப்போது பரிந்துரை செய்யும். இந்தக் குழுவுக்கு, ஆணையர் மற்றும் இயக்குநர்(தொழில்)செயலராக இருப்பார்.




# அடிப்படை உரிமைகளைச் சாமான்ய மக்களும் அறிந்திட வகை செய்யும்

# சட்டத் தமிழ்ப் பதிப்பு வெளியீடு

இந்திய அரசியல் சட்டத்தின் தமிழ்ப்பதிப்பு 13.8.88 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

மத்திய அரசின் சட்டம், நீதி, மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.பி.சங்கரானந்த் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் இந்திய அரசியல் சட்டத்தின் தமிழ்ப் பதிப்பை மேதகு தமிழக ஆளுநர் பி.சி.அலெக்சாண்டர் வெளியிட, முதலாவது பதிப்பைச் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பொறுப்பில் உள்ள திரு. இரத்தினவேல் பாண்டியன் பெற்றுக்கொண்டார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு.எம்.எம்.ராஜேந்திரன் தமது வரவேற்புரையில் - ''இவ்விழாவில் இன்னொரு செய்தியையும் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேதகு ஆளுநர் அவர்கள்-நமது சங்க இலக்கியங்களையும், பழம்பெருங்காப்பியங்களையும் பிற நாட்டினரும் தெரிந்து கொள்ளும் வகையில் அவற்றை ஆங்கிலத்தில் வெளியிட ஒரு குழு அமைத்திருக்கிறார்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

நீதிபதி எஸ்.மோகன் பேசும்போது ''மகாத்மா காந்தியடிகள் இறந்த பிறகே உருவாக்கப்பட்டதென்றாலும், அவரது உயரிய நோக்கங்களை அடிப்படையாக வைத்தே இந்திய அரசியல் சட்டம் நிர்ணயிக்கப்பட்டது. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ்மகனும் புரிந்து கொள்ளும் வகையில் தமிழில் அதை உருவாக்கித் தந்தவர்களுக்கு நாம் பெரிதும் நன்றி தெரிவித்தாக வேண்டும். தமிழில் இப்படியொரு நூல் வெளியிடப்படும் இந்தக் காலத்தைச் சங்ககாலம் என்றே கூடக் கூறலாம்'' என்றார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ.பத்மநாபன் அவர்கள் பேசியதாவது: ''தமிழ் மக்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் வகையிலே இன்று இந்தச் சட்டம் வெளியிடப்படுகிறது. மக்களாட்சியில், தமக்குள்ள உரிமைகளைத் தமிழ் மக்கள் தெளிவாக உணர வேண்டும் என்பதற்காகவே இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இதை விரைவில் வெளியிட நமது ஆளுநர் அவர்களும் அரும்பாடுபட்டிருக்கிறார்.''

சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பொறுப்பில் உள்ள திரு இரத்தினவேல் பாண்டியன் தம் உரையில் குறிப்பிட்டதாவது; ''யானைக்குத் தன் பலம் தெரியாது; அதனால்தான் பாகனை அது தானே தூக்கித் தலைமேல் வைத்துக் கொள்கிறது; அதற்குத் தன் பலம் தெரிகிறபோது பாகன் அதை அடக்கி ஆள முடியாது. அதேபோல் பணம் படைத்தவர்கள், வழிமுறை தெரிந்து வழககு மன்றம் ஏறி நீதியைப் பெற்று விடுகிறார்கள். இப்போது வெளியிடப்படும் இந்த நூலால், ஏழை எளியவர்களும் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வார்கள். செல்வந்தர்கள் இனி அவர்களை ஆட்டிப் படைக்க முடியாது.''

மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் சட்டமியற்றுத் துறைச் செயலாளர் திரு.எஸ்.இராமையா தம் சொற்பொழிவின்போது, "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அந்தந்த மொழிகளில் வெளியிட மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது. மொழி பெயர்ப்புக்கான செலவு, அச்சுக்கூலி, தாள், வெளியீட்டுச் செலவு ஆகியவைகளை மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது.'' என்று தெரிவித்தார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் திரு. பி.சங்கரானந்த் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:

''தமிழ்நாட்டு வரலாற்றில், அரசியல் அமைப்புச் சட்டத்தின் தமிழாக்கப் புத்தக வெளியீட்டு விழா முக்கிய இடம் பெறுகிறது.

''இலவசச் சட்ட உதவி வழங்குவதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பற்றிச்

சாதாரண மக்களும் அறிந்து கொள்ள வேண்டும்; அந்த உன்னத மான நோக்கத்துடனேயே இங்கே இந்த நூல் வெளியிடப்படுகிறது. வெறும் சட்டத்தின் மூலம் மட்டுமே தனி மனிதனுக்குள்ள உரிமையைக் காப்பாற்ற முடியாது; சுதந்திர மாகச் செயல்படும் நீதித்துறை மூலம்தான் தனி மனித உரிமைகள் காப்பாற்றப்படும். மக்களுக்குள்ள அடிப்படை உரிமைகளைப் பாது காப்பது அரசின் கடமையாகும். சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமமே. அத்தகைய சமத்துவம் நிலைபெற நீதிமன்றங்கள்தான் செயல்பட வேண்டும்.

''சென்னை உயர்நீதிமன்றம் பழம் பெருமை பெற்றதாகும்; வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் அதை அப்படியே பாதுகாக்க வேண்டும்.''

மேதகு தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் பேசிய தாவது:

''ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தி லேயே இந்தியாவுக்கென்று தனியே ஓர் அரசியல் சட்டம் உருவாக்க ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று, 1937 ஆம் ஆண்டே தீரர் சத்தியமூர்த்தி, நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 1947ல் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, அதைச் செயல்படுத்த பண்டித நேரு அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்தார்.

''இந்திய மக்களிடையே என்றென்றும் ஒற்றுமை நிலைபெறும் விதத்தில், டாக்டர் அம்பேத்கார் அரும்பாடுபட்டு அரசியல் சட்டத்தை உருவாக்கினார். அந்தச் சட்டம் இப்போது தமிழில் வெளியிடப்படுகிறது. இதனால் மிகச் சாதாரண மக்களும் சட்டம் என்ன சொல்லுகிறது என்பதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இந்தத் தமிழாக்க நூலை வெளியிடுவதற்காக நல்ல முறையிலே அயராமல் ஒத்துழைத்த சட்ட நிபுணர்கள் அனைவருக்கும் அரசின் சார்பில் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

இந்திய அரசியல் சட்டத் தமிழ்ப் பதிப்பு வெளியீட்டு விழா விற்குத்தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம், முன்னாள் தலைமை நீதிபதி திரு. வீராசாமி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத் துறை வல்லுநர்கள், தமிழக அரசின் உயர் அதிகாரிகள், தமிழறிஞர்கள் ஆகிய பலரும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

விழா முடிவில், தமிழகச் சட்டத் துறைச் செயலாளர் திரு. ஜெயசிங் பீட்டர் நன்றி கூறினார்.

— நமது செய்தியாளர்



சென்னை தொலைக்காட்சி நிலையத்தில், மாநிலம் முழுமைக்குமான ஒளிபரப்பை மேதகு ஆளுநர், விடுதலை நாள் விழாவன்று துவக்கி வைத்தார். (15-8-88)

## சிறந்த கலைஞர் சிதம்பரனார்

''வீரச் சிதம்பரனார், வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல; சிறந்த கலைஞருங்கூட. பேச்சுக் கலை, அவரது உடன் பிறப்பு. இலக்கியக்கலை, வ. உ. சி.யின் இணை பிரியாத் தோழன். காவியக் கலை, சிதம்பரனாரின் அல்லலைத் துடைக்கும் இல்லக்கிழத்தி. நாடகக்கலை, அவரது உள்ளத்தைக் கவரும் செல்லக் குழந்தை. வீரக்கலை, அவருக்கு மரபுவழி வந்த மதிப்பற்ற சொத்து. ஆம்! கலைப்பண்புகளையே குடும்பமெனக் கொண்டு வாழ்வு நடத்திய கலைஞராவார் வ. உ. சி.''

— சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்



# தமிழ்ப் பத்திரிகை உலகின் முன்னோடி

**ப**ழம்பெரும் பத்திரிகையாளரும், விடுதலைப்போராட்ட வீரருமான டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 9-ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

தமிழ்நாடு அரசும் சென்னைப் பத்திரிகையாளர் சங்கமும் இணைந்து இந்த விழாவினை நடத்தின.

வரவேற்புரையாற்றிய செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி குறிப்பிட்டதாவது:

''சென்ற ஆண்டிலேயே கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய விழா, தவிர்க்கமுடியாத காரணங்களினால் காலம் கடந்துகொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் புரட்சி தினமான 9ஆம் தேதியன்று அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது பொருத்தமாகும்.

''பேச்சு, எழுத்து, பத்திரிகை ஆகியவற்றின் மூலம் பாமர மக்களின் உள்ளத்தில் புரட்சிக் கனலை எழுப்பியவர் வரதராஜுலு நாயுடு ஆவார். அவரது 'தமிழ்நாடு' பத்திரிகையின் கோவைநகர் விற்பனையாளராக எனது தந்தையார் விளங்கியதால் அந்தப் பத்திரிகையைப் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்ததை எண்ணி, எண்ணி மகிழ்கிறேன்''.

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நீதிபதி திரு வேணுகோபால் தெரிவித்ததாவது:

''டாக்டர் வரதராஜுலு சிறந்த சிந்தனையாளர். தமிழ்ப் பத்திரிகை உலகின் முன்னோடி. தமிழில் அரசியல் பேச முடியும் என எடுத்துக் காட்டிய மேதை-சிறந்த தியாகி, தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போர் வீரர்.

''வளமான வாழ்வு -சௌகரியமான வாழ்வு வாழ்ந்த அவர், அவற்றை விட்டு விட்டு, அரசியலில் புகுந்து இன்னல்களை அனுபவித்து, ஏழையாகிப் போனார்.

''பிறருக்கு உழைப்பதற்காகவே அரசியலில் புகுந்தார்; பதவியின் பக்கம் தலை திரும்பிப் பார்க்காத பண்பாளர் அவர். பதவிகள் தம்மைத் தேடி வந்தபோதுகூட, அவற்றை உதறித்தள்ளிய உத்தமர்.''

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்த, தமிழ்வளர்ச்சி உயர்நிலைக் குழுத்தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டார்:

''அந்தக் காலத்தில் வெள்ளை அரசாங்கத்தை எதிர்த்து அதற்காக மேடையில் முழங்குவது - பத்திரிகையில் எழுதுவது என்பதெல்லாம் எளிதான பணியல்ல! தூக்கு மேடைக்குச் செல்வதற்குத் துணிந்தாலொழிய, இத்தகைய காரியங்களில் ஒருவர் ஈடுபட முடியாது. அத்தகைய துணிவுமிக்கவர் டாக்டர் வரதராஜுலு ஆவார்.

''ஒவ்வொரு துறையிலும் புரட்சி செய்தவர் அவர். நல்ல தமிழ்ப் பத்திரிகை நடத்தியவர் அவர். அவரது பாணியே தனி''.

சென்னைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு ஆர்.வி.சௌளி

தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''அவர் பாரதியைப் பின்பற்றி, தமது பத்திரிகையில் கார்ட்டூன்களை வெளியிட்டு வந்தார். பல இளைஞர்களைப் பத்திரிகைத் துறையில் உருவாக்கி அளித்தார். ஏ.என்.சிவராமன், சொக்கலிங்கம், என்.டி.சுந்தரவடிவேலு போன்றவர்கள் அவரது தயாரிப்புகள் தான்.''

டாக்டர் வரதராஜுலு அவர்களின் நூற்றாண்டையொட்டி உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு மலரை திரு எஸ். என். சோமையாஜுலு வெளியிட்டு உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''வரதராஜுலு நாயுடு நாட்டுக்குத் தொண்டு செய்தார். அவரது சேவையை நினைத்துப் பார்ப்பதற்கு இந்த விழா பயன்படும்.

''இறை அன்பர்கள் சிவலிங்கத்தைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டியது போல, தமிழ்ப்புலவர்களும் தமிழ்மொழியைப் பெட்டிக்குள் வைத்து முடக்கி வந்த காலத்தில், சரளமான தமிழ்ப்பேச்சின் மூலம் மக்களைக் கவர்ந்தவர் அவர்.

திரு டி.வி.ஆனந்தன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''தொழிற்சங்கங்களில் ஈடுபடுவதற்கு எவரும் அஞ்சிவந்த அந்தக் காலத்திலேயே 1917ஆம் ஆண்டிலேயே தென் இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கி, தொழிலாளிகளுக்காகப் பெரிதும் பாடுபட்டிருக்கிறார் டாக்டர் வரதராஜுலு நாயுடு என்றால் அது எளிதான செயலல்ல.

''அவர் ஒரு தீர்க்க தரிசி. அவர் செய்த தொண்டுகளில் சிறந்தது தேச சேவை ஆகும். அவரைப் பின்பற்றி நாட்டுப் பணி ஆற்ற நாம் கற்றுக்கொள்ள வேண்டும்''.

திரு ஒ.வி.அளகேசன் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இன்று அவரது புகைப்படக் கண்காட்சியைத்திறந்து வைத்தேன். சரித்திரப் புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிடப் படங்களின் மூலமாக மேலும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

''தேசத்தலைவர்கள், தியாகம் புரிந்த பெருமக்கள் ஆகியோரின் உருவப்படங்கள், வாழ்க்கை வரலாற்றுப் படங்கள் தொகுக்கப்பெற்றுக் கண்காட்சியாக அமைக்கப்பட வேண்டும். குழந்தைகள், மாணவ மாணவியர், முதியவர்கள்- வெளிமாநில சுற்றுப் பயணிகள் போன்ற அனைவரும் அந்தக் கண்காட்சியைப் பார்த்துத் தெளிவு பெற வழிவகை செய்யவேண்டும். டாக்டர் வரதராஜுலு அவர்களின் வாழ்க்கை வரலாறு பல்வேறு நிலையுள்ள பாடநூல்களிலும் இடம் பெறவேண்டும்.''

திருமதி மரகதம் சந்திரசேகர் எம்.பி., தமது உரையில் குறிப்பிட்டதாவது;

''திலகர் போல இவரும் சிறந்து விளங்கியதால் தென்னாட்டுத் திலகர் என்று அழைக்கப்பட்டார். நமது தமிழக விடுதலை வீரர்களின் பிறந்த நாளை வடமாநிலங்களும் கொண்டாடவேண்டும். அப்போது தான் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு உருவாக வழி பிறக்கும்.''

திரு பெ.சு.மணி தமது உரையில்

''இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்
திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறந்திலேனே

என்று பாடிய பாரதியின் பாடலுக்கு வடிவமாகத் திகழ்ந்தவர் டாக்டர் வரதராஜுலு. அவரது பார்வை தேசியப் பார்வை மட்டுமல்ல, சர்வ தேசப் பார்வையும் ஆகும்''

திரு டி. செங்கல்வராயன் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்திய அரசியலில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட தியாகி, வரதராஜுலு ஆவார். தேசத் தொண்டில் ஈடுபட்டு, தலைமைப்பொறுப்பைப் பெற்றார்.

''கதர் ஆடை அணிந்து, ஊர் ஊராகத் திரிந்து, பேசிப் பேசியே நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். சொல், செயல், ஆற்றல் அனைத்தையும் நாட்டு விடுதலைக்காக நல்கினார். அதே நேரத்தில் தமிழ்ப்பற்றும் அவரிடம் குடிகொண்டிருந்தது. அவரது சேவை என்றும் மறக்க முடியாததாகும்.

''திலகர், ராஜாஜி, திரு.வி.க, வரதராஜுலுநாயுடு இப்படி எண்ணற்ற தலைவர்கள் நமது நாட்டில் வாழ்ந்து மறைந்தனர். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை குடிகொண்டிருந்தது. அவர்கள் அனைவரையும் பின்பற்றுவது நமது கடமை.''

செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் நன்றி கூறினார்.

தொடக்கத்தில் ஜவகர் பாலபவனத்துக் குழந்தைகளின் பல்கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வரதராஜுலு நாயுடு அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிப் புகைப்படங்கள் கொண்ட கண்காட்சியை திரு ஒ.வி.அளகேசன் திறந்து வைத்தார்.

டாக்டர் வரதராஜுலுநூற்றாண்டு விழாக் குழுவினர் உருவாக்கியிருந்த சிறப்பு மலரை சோமையாஜுலு வெளியிட, டி.வி. ஆனந்தன் பெற்றுக்கொண்டார்.

வரதராஜுலு அவர்களின் புதல்வர்கள் நால்வர், புதல்வியர் மூவர் விழாவில் சிறப்பிக்கப் பெற்றனர்.

வரதராஜுலு நாயுடு அவர்களைக் குறித்து ஆய்வு செய்துவரும் அன்பழகன், கீதா ராஜேஸ்வரி ஆகியோர் சிறப்பிக்கப்பெற்றனர்.

—நமது செய்தியாளர்

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாறு

**ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் இடம் பெற்றிருந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாறு பற்றிய பாடப்பகுதி 1988-89 கல்வி ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய 6ஆம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் இடம் பெறாமல் விடுபட்டது மேதகு ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.**

**மேதகு ஆளுநரின் ஆணைக்கிணங்க அரசு, அதனைப் பரிசீலனை செய்து, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாறு பற்றிய பாடப் பகுதியை உடனடியாக அச்சிட்டு, இந்த ஆண்டே ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடநூலிற்கு இணைப்பாக வெளியிட ஆவன செய்யுமாறு ஆணையிட்டுள்ளது.**

**இப்பாடப் பகுதியினை மிக விரைவாக அச்சிட்டு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளில் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு உடன் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.**



# தியாகச் செம்மல் கேசவ பிள்ளை

**தமிழ்நாட்டில் பிறந்த இந்தத் தியாக சீலர் ஆந்திர மாநிலத்தில் அதிகாாள் வாழ்ந்தவர். இவரது தேசபக்தி நிறைந்த தொண்டு வாழ்வு இளைஞர்களுக்கு ஊக்கமளிக்க வல்லது.**




சிறந்த தேச பக்தச் செம்மல்களுள் ஒருவர் திரு பட்டு. கேசவ பிளளை. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டில் விடுதலை பற்றிய உணர்வை மககளிடையே எழுப்புவதிலும், முன்னேற்றக் கருததுகளையும், சமூகச் சீர்திருத்த எண்ணங்களையும் விதைப்பதிலும் விறுவிறுப்பாகப் பணியாற்றிய முன்னணித் தலைவர்களில் அவருக்குச் சிறப்பிடம் உண்டு. அவரது உன்னதமான பணிகளை நினைவுகூருவதன் மூலம் இன்றைய இளந் தலைமுறையினர் எழுச்சியும் விழிப்பு உணர்ச்சியும் பெறமுடியும்.

இந்திய தேசிய உணர்வுக்கு வித்திட்ட முன்னோடிகளில் முதன்மை முடிமணிகளாக விளங்கிய தாதா பாய் நவ்ரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, சேலப் சி.விஜயராகவாச்சாரி, விபின் சந்திரபால், பி.எஸ். சிவசாமி ஐயர், பண்டித மதன்மோகன் மாளவியா, டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார், லாலா லஜபதிராய் போன்ற தலைவர்களில் ஒருவர் பட்டு கேசவ பிள்ளை.

பட்டு கேசவ பிள்ளை 1860 அக்டோபர்-8இல் வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டப், பட்டு என்ற கிராமத்தில் பிறந்தவர். தந்தையார் பெயர் வெங்கடாசலம் பிள்ளை. தாயார் சுப்பம்மாள். பெற்றோருக்குப் பிறந்த 7 பையன்களில் கேசவபிள்ளை ஒருவர்.

இளமையில் கேசவபிள்ளை முகத்தில் கடுமை கொண்டவராக இருப்பார். இந்தப் புறத் தோற்றம் அவரது அகத்தோற்றத்தைக் காட்டுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. உறுதிவாய்ந்த குணங்களைக் கொண்டவர் அவர் என்பதை அது காட்டியதே தவிர, இறுகிய மனம் கொண்டவர் என்பதைத் தெரிவிக்கவில்லை. அவரிடம் பழகியவர்கள் அவர் எவ்வளவு இளகிய மனம் கொண்டவர் என்பதைத் தெளிவாக அறிவார்கள்.

இவரது இளமைக் கல்வி பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. அவர் 16 வயது வாலிபராக இருந்தபொழுது நாட்டில் கடுமையான பஞ்சம் நிலவியதையும், பெரும் பணக்காரர்கள்கூட பசி பட்டினியால பாதிக்கப்பட்டதையும் கண்டு மிகவும் வருந்தியிருக்கிறார். இவரையும் இவரது குடும்பத்தினரையும் அந்தப் பஞ்சம் மிகவும் பாதித்தது.

கேசவபிள்ளை சித்தூர் மாவட்ட உயர்நிலைப் பள்ளியில் படித்து, 1877-இல் மெட்ரிக்குலேசன் தேறினார். இராணிப்பேட்டையிலிருந்த தலைமை உதவியாளர் அலுவலகத்தில் படியெடுப்பாளராக அரசுப் பணியில் சேர்ந்தார். பின்னர் திருத்தணியில் உதவி மாஜிஸ்திரேட் அலுவலகத்தில் குமாஸ்தாவானார். அதன் பிறகு செய்யாறு வட்டம் மடுப்பாக்கம் கிராமத்திலிருந்த உதவி தாசில்தார் அலுவலகத்தில் குமாஸ்தாவானார்.

1879-இல் திருமணம் நடந்தது. மனைவியார் பெயர் சலம்புரி அம்மையார். இவர் அவருடைய முதல் மனைவியார். இவ்விருவருக்கும் நான்கு பையன்களும், ஒரு பெண்ணும் பிறந்தனர். 1898-இல் முதல் மனைவி காலமானார். புஷ்பாவதி அம்மையாரைத் தன் இரண்டாவது மனைவியாகக் கேசவ பிள்ளை மணந்து கொண்டார். இவர் நற்குணங்கள் பொருந்திய நங்கையாகவும், மாண்புமிக்க மங்கையாகவும் பரந்த மனப்பாங்கு பெற்றவராகவும் திகழ்ந்தார். இத்தம்பதிக்கு இரண்டு பெண்களும், ஒரு பையனும் பிறந்தார்கள். பிறகு இரண்டாவது மனைவியும் காலமாகிவிட, உண்ணாமுலை அம்மையார் என்பவரைக் கேசவ பிள்ளை மூன்றாவது மனைவியாக மணந்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு பெண்கள் பிறந்தார்கள்.

கேசவபிள்ளை. சேலத்தில் இரண்டாம் பிரிவு வழக்குரைஞருக்கான தேர்வெழுதி, சட்ட முகவராக சங்கரி துர்கத்தில் 1880-இல் பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுது அவர் உள்ளூர் நூலகத்தின் செயலராகவும் விளங்கினார். அதன் பிறகு 'கூட்டி'யில் 1880-இல் உதவி கலெக்டர் அலுவலகத்தில் மாதம் ரூபாய் பதினைந்து சம்பளத்தில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். விரைவிலேயே அவ்வேலையை விட்டுவிட்டு, சேலத்தில் இந்து பத்திரிகைக்குச் சிறப்பு நிருபராகப் பணியாற்றத் தொடங்கினார்.

1882-இல் சேலத்தில் இந்து-முஸ்லிம் கலகம் வெடித்தது. கேசவ பிள்ளை சேலத்தை விட்டு இடம் பெயர்ந்தார். 'கூட்டி' சேர்ந்து வழக்குரைஞராகத் தொழில்

தொடங்கினார். கொஞ்ச நாளிலேயே தம்முடைய சலியா உழைப்பாலும், சாதுர்யமான பண்புகளாலும், சமூகத் தொண்டில் கொண்ட தன்னலமற்ற ஆர்வத்தினாலும், கூட்டி' மக்களின் அன்பையும், ஆதரவையும் ஒருங்கே கவர்ந்துவிட்டார். வழக்குரைஞர் தொழிலிலும் வல்லமை காட்டிப் பெரும் பொருள் ஈட்டினார்.

ஆந்திரப் பிரதேசம் அனந்தப்பூர் மாவட்டத்தில் தென் இரயில்வேயில், சென்னை - குண்டக்கல் பிரிவில் கூட்டி நகரம் அமைந்துள்ளது. இந்த நகரத்தில்தான் சுமார் ஐம்பதாண்டுக் காலம் கேசவபிள்ளை அயராது அரும்பணியாற்றினார்.

இந்தக் கூட்டியில் பிறந்தவர் தான், இந்தியாவின் குடியரசுத் தலைவராக விளங்கிய திரு நீலம் சஞ்சீவ ரெட்டி. இதைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, ''நான் சிறுவனாக இருந்தபோது திரு கேசவ பிள்ளை புகழின் உச்சியில் இருந்தார். அவரைப் பற்றி அவர் காலத்திய பெரியவர்கள் சொல்லியுள்ள செய்திகள் அவர் எப்படிப்பட்ட மாவீரராகத் திகழ்ந்தார் என்று பறைசாற்றுகின்றன. எந்தவொரு நியாயமான காரியத்திற்கும் அவர் போராடத் தயங்கியதே இல்லை. இப்படிப்பட்ட பெரியவர்களைப் பற்றி எண்ணிப் பார்க்கின்றபொழுது, இந்தக் காலத்தில் நாம் ஊக்கமும், உத்வேகமும் பெற அது உதவியாக இருக்கின்றது'' எனப் பெருமிதப்படுகின்றார்.

*1884-85*-இல் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு தோன்றியது. ஓய்வுபெற்ற வெள்ளைக்கார அரசு அலுவலர் சர். ஆலம் ஆக்டேவியன் ஹியூம் என்பவரும், தாதாபாய் நவ்ரோஜி, சர் பெரோஸ்ஷா மேத்தா போன்ற இந்தியத் தலைவர்களும் இந்த அமைப்பைத் தோற்றுவித்தார்கள். இந்தச் சிறு வித்துதான் பின்னாளில் பெரிய மரமாக வளர்ந்தது. ஆரம்பம் முதலே இந்த அமைப்பில் பங்கு கொண்ட கேசவ பிள்ளை ஆர்வத் துடிப்புமிக்க, அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட காங்கிரஸ்காரராகத் திகழ்ந்தார். இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது கூட்டம் *1885*-இல் பம்பாயில் நடந்தபோது அதில் கலந்து கொண்ட எழுபத்தைந்து பிரதிநிதிகளில் இவரும் ஒருவர்.

*1917-18*-இல் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் திருமதி அன்னிபெசன்ட் அம்மையார் திகழ்ந்தபோது பணியாற்றிய மூன்று இணைச்செயலாளர்களில் கேசவ பிள்ளை ஒருவர்.

மிண்ட்டோ-மார்லி சீர்திருத்தங்களின் கீழும், மாண்டேகு -சேம்ஸ் போர்டு சீர்திருத்தங்களின் கீழும் சட்டமேலவையில் அவர் ஓர் உறுப்பினராக இருந்தார்.

கேசவ பிள்ளை தமது வாழ்நாள் முழுவதும் ஏழை-எளிய, தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப், போராடியும்-வாதாடியும் வந்தவர். வனத்துறையிலும், சிறைத்துறை நிர்வாகத்திலும், கல்வித் துறையிலும் சீர்திருத்தங்கள் மலரப் பாடுபட்டவர். அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார் என்றால், அதை அவ்வளவு சுலபமாக யாரும் மறுத்துவிட முடியாது. இலாகாத் தலைவர்கள்கூட ஒருமுறைக்கு இருமுறை எண்ணிப்பார்த்துத்தான் அவருடன் ஒரு வாதத்தில் இறங்குவார்கள்.

கேசவ பிள்ளை, சிறந்த ஜன நாயகவாதியாகவும், சமூகச்சீர்திருத்தவாதியாகவும், சமயப்பற்றுமிகுந்த பக்திமானாகவும், நண்பர்களின் நலம்பேணும் உற்ற தோழராகவும் ஒருங்கே விளங்கியவர். நகைச்சுவை கலந்துபேசி யாரையும் தம்பால் ஈர்த்துவிடக்கூடியவர். ஒருவருக்குப் பிடிக்காத விஷயங்களைக்கூட, அவரது மனங்கோணாமல் அவரே விருப்புற்றுக் கேட்கும் அளவுக்கு அதை எடுத்துச் சொல்லக்கூடியவர். அவரது காலத்தில் அவரை இந்திய மக்கள் மட்டுமின்றி, ஆங்கிலேயர்கள்கூட அன்புடனும் மதிப்புடனும் போற்றினர்.

நூற்றாண்டு கடந்தும் வரலாற்றில் கேசவபிள்ளை நிலைத்திருப்பதற்குக் காரணம் அவரது நேர்மையான, நெஞ்சுரமிக்க, நாட்டுப்பற்றுமிக்க, தெய்வ மணங்கமழும் தொண்டு வாழ்க்கையே என்று சொன்னால் அது உண்மையே தவிர வெறும் புகழ்ச்சியன்று.

-தொகுப்பு:

**டாக்டர் மு. முத்துக்காளத்தி**


தொலைபேசி : 22844

# கணேஷ் சக்தி இன்கார்ப்பரேட்ஸ்

(அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

**103-105, ஜமால் ஹுசேன் நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்-6.**

தயாரிப்புகள் : தரமான ஃபைபர் கிளாஸ் வாயு கொள்கலன்கள்,
இரும்புத் தகட்டாலான வாயு கொள்கலன்கள்,
மற்றும் சாண எரிவாயு அடுப்புகள்

# வ. உ. சிதம்பரனார்

## வாழ்க்கைக் குறிப்பு

1872 செப். 5. — ஒட்டப்பிடாரத்தில் உலகநாதர்—பிரமாயி அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

1895 — திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளை மகள் வள்ளியம்மையை மணந்தார்.

— திருச்சிராப்பள்ளியில் சட்டக்கல்வியைப் பயின்று வழக்குரைஞர் ஆனார்.

1900 — ஒட்டப்பிடாரத்தை விட்டு, தூத்துக்குடிக்கு வந்து வழக்குரைஞர் தொழிலைத் தொடர்ந்தார்.

1901 — மனைவி வள்ளியம்மை இயற்கை எய்தினார்.

— வள்ளியம்மையின் உறவு வழியைச்சேர்ந்த மீனாட்சி அம்மையை மணம் செய்தார்.

— நான்கு ஆண்மக்கள், நான்கு பெண்மக்கள் பிறந்தனர்.

1905 — திருநெல்வேலியில்தேசாபிமானிகள் சங்கம் என்னும் அமைப்பைத் தொடங்கினார்.

1906 — 'சுதேசி நாவாய்ச் சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, கப்பல் வாணிகத்தைக் கூட்டுறவு முறையில் தொடங்கினார்.

1907 — சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1908 — மார்ச் 9-ஆம் நாளன்று விபின்சந்திர பாலின் விடுதலை நாளைக் கொண்டாடியதால்-அரசு கோபம் கொண்டு-சிதம்பரனார் மீது குற்றம் சாட்டியது.

— மார்ச் 12-இல் சிதம்பரனாருடன், சிவா, பத்மநாபர் ஆகியோரும் பாளையங்கோட்டைச் சிறையில் வைக்கப்பெற்றனர்.

— ஜூலை 7-இல்—அரசு நிந்தனைக்காக 20 ஆண்டுகளும்-சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காக 20 ஆண்டுகளும் என 40 ஆண்டுத்தண்டனை விதிக்கப் பெற்றது. பின்பு அப்பீலில் 6 ஆண்டு தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

— கோவைச் சிறையிலும், கண்ணனூர்ச் சிறையிலும் அடைக்கப்பட்ட வ.உ. சிதம்பரனார், சணல் கிழிக்கும் இயந்திரத்தைச் சுற்றினார். எண்ணெய் ஆட்டும் செக்கை இழுத்துத் தொல்லைப் பட்டார். கைகளில் இரத்தம் கசிந்தபோதும், வந்தே மாதரம் முழக்கத்தை அவரது நா முழங்கியது.

1912 — டிசம்பர் மாதத்தில் விடுதலை செய்யப் பெற்றார். நெல்லை மண்ணிலே மிதிக்கத் தடை. சென்னையில் வாணிபம் செய்து வாழ்ந்தார். தென் ஆப்பிரிக்காவில் இருந்த அண்ணல் காந்தியடிகள் வ.உ.சி. அவர்கட்கு நிதி திரட்டி உதவினார். ஈ.எச்.வாலஸ் என்ற நீதிபதி தேடி வந்து வக்கீல் சின்னத்தைத் திரும்ப வழங்கியதால் கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் வழக்கறிஞராயிருந்தார்.



1935 — வறுமை வாட்டியது. நோய்வாய்ப்பட்டார்.

1936 — நவம்பர் 18-இல் தென்னாட்டுத் திலகர், புரட்சி வீரர், கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல், செந்தமிழ் அறிஞர் இறவாநிலை பெற்றார்.

1972-ஆம் ஆண்டு வ.உ.சி. நூற்றாண்டு விழா ஆண்டு.

### செந்தமிழ்ச் செல்வர் சிதம்பரனார்

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பில்லாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

வஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே - வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை



# டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1888 செப். 5. | — | டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறப்பு. |
| 1903 | — | மெட்ரிகுலேஷன் தேர்வு. |
| 1905 | — | எப். ஏ. தேர்வில் முதலாவதாகத் தேர்வு. |
| 1908 | — | பி . ஏ. தேர்வில் முதலாவதாகத் தேர்வு. |
| 1908 – 1917 | — | சென்னை மாநிலக் கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர். —தமது முதல் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடல்—டாக்டர் பட்டம் பெறுதல். |
| 1910 | | —சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் சேர்தல். |
| 1918 – 1921 | — | மைசூர் மகாராஜா கல்லூரியில் தத்துவ இயல் பேராசிரியர். |
| 1927 1928 1930 | — | கல்கத்தா பல்கலைக் கழகத்தில், முது கலைக் குழுத் தலைவர். |
| 1931 | | பிரிட்டிஷ் அரசு, சர் பட்டம் வழங்கல். |
| 1931 – 1936 | — | ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தர். |
| 1936 – 1942 | — | ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவப் பேராசிரியர். |
| 1936 | | பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பல்கலைக் கழகங்களின் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளல். |
| 1937 – 1938 | — | லக்னோவில் நடந்த ஆசியக் கல்வி மாநாட்டுக்குத் தலைமை வகித்தல். |
| 1938 | — | பிரிட்டிஷ் அறிஞர் சங்கத்தில், 'கௌதம புத்தர்' பற்றிச் சொற்பொழிவு. சங்கத்தின் உறுப்பினராகத்தேர்வு செய்யப்படுதல். |
| 1939 – 1948 | — | காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர். |
| 1948 | — | பல்கலைக்கழகக் கல்விக் கமிஷன் தலைவர். |
| 1950 | — | இந்தியாவின் ரஷ்யத் தூதர். |
| 1952 | — | யுனெஸ்கோ தலைவர். |
| 1953, 56 | — | இருமுறை அமெரிக்கா சென்றார். |
| 1952, 1962 மே, 11 | — | இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர். |
| 1962, மே, 12 — 1966 | — | இந்தியக் குடியரசுத் தலைவர். |
| 1975 ஏப்ரல், 16 | | டாக்டர் ராதாகிருஷ்ணன் அமரரானார். |





**கல்வி**

கல்வி என்பது ஒரு கருவியே தவிர, அதுவே ஒரு குறிக்கோள் அல்ல; நல்ல ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவி செய்யும் கல்வி முறையைத் தான் உண்மையான கல்வி என்று சொல்ல முடியும்.

— மகாத்மா காந்தியடிகள்



# டாக்டர் ராதாகிருஷ்ணன் நூறாண்டு நிறைவு

**தத்துவமேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் நூற்றாண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

தத்துவமேதை டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள், 1888-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் தேதி திருத்தணியில் பிறந்தார்.

சிறந்த சமய அறிஞராக விளங்கப் போவதாலோ-என்னவோ, அவர் இளமை முதலே தனித்திருத்தலையும், தனித்திருந்து சிந்தனையில்ஆழ்தலையும் அவாவினார்.அவர் சிறுவர்களுடன் கலந்து விளையாடவில்லை; தாம் பிறந்து வளர்ந்த திருத்தணிகை அவருக்குச் சமய உணர்ச்சியை மிகுதியாக ஊட்டியது போலும்!

இராதாகிருஷ்ணன் 13 வயது வரை திருத்தணிகையிலும், திருப்பதியிலும் படித்தார்; பின்னர்ச் சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார்; 1903-இல் மெட்ரிகுலேஷன் வகுப்பில் சிறப்புறத் தேறினார்; கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து உயர் படிப்பைக் கவனிக்கலானார். அவர் ஆசிரியரிடம் அடக்கம், அன்பு, மரியாதை உடையவராக இருந்தார்; ஆசிரியர் விரும்பத்தக்க முறையில் நன்றாகப் படித்தும் வந்தார். இங்ஙனம் வருந்திக் கற்று 1905-இல் எப். ஏ. தேர்வில் முதல்வராகத் தேறினார்.

எம். ஏ. பட்டம் பெற்ற இராதாகிருஷ்ணன் முதலில் சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவ உதவிப் பேராசிரியராக வேலை பார்க்கலானார். அந்த இளவயதில் அவர் சிறந்த ஆசிரியர் என்று பெயர் பெற்றார்.

இராதாகிருஷ்ணன் இரவீந்திரநாத் தாகூர் வெளியிட்ட பல நூல்களைப் படித்தார்; தாம் கருதும் சமயக் கருத்துகளையே அப்பெரியாரும் தம் நூல்களில் வெளியிடுவதைக் கண்டு வியப்புற்றார்; பின்னர்த் 'தாகூருடைய சமயக் கருத்துக்கள்' என்னும் ஆராய்ச்சி நூலை வரைந்து வெளிப்படுத்தினார்.

தாகூர் அந்நூலினை முழுவதும் படித்துப் பெரு வியப்புற்றார். 'என்னுடன் நெருங்கிப் பழகாது என் நூல்களைப் படித்தே என் கருத்துக்களை உள்ளவாறு உணர்ந்து வெளிப்படுத்திய உங்கள் பேரறிவு பாராட்டற்பாலது. வேறு எவரும் என்னை உள்ளவாறு உணர்ந்தவர் இல்லை' என்று பாராட்டிக் கடிதம் வரைந்தார்.

இராதாகிருஷ்ணன் பெயர் நாட்டில் பரவி வந்த காலத்தில், மைசூர் சமஸ்தானத்தில் பல்கலைக்கழகம் ஏற்பட்டது. அதில் சமய தத்துவப் பேராசிரியர் வேலை பார்க்குமாறு இராதாகிருஷ்ணனுச் அழைப்பு வந்தது. அவர் மூன்று ஆண்டுக் காலம் அப்பதவியில் இருந்து தொண்டாற்றினார்.

ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக 1931 முதல் 1936 வரை திறம்படப் பணியாற்றினார்.

உலகப் புகழ் பெற்ற டாக்டர் இராதாகிருஷ்ணனுக்கு அரசாங்கத்தார் 'சர்' என்னும் கௌரவப் பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர்.

1936-இல் டாக்டர் சர். இராதாகிருஷ்ணனுக்கு ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலிருந்து அழைப்பு வந்தது. அங்குக் கீழ்நாட்டுச் சமயப் பேராசிரியர் பதவி காலி ஆயிற்று. அதனை இராதாகிருஷ்ணனுக்கு அளிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தார் விரும்பினார். அப்பொறுப்புள்ள பதவியைப் பெற்ற முதல் இந்தியர் நமது டாக்டரே ஆவர்.

நமது டாக்டர் ஏழை-பணக்காரர் முதலாளி - தொழிலாளி, கற்றவர்-கல்லாதவர் என்று வேறுபாடு இன்றி மக்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகினார்; தாம் பெரிய படிப்பாளி என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் இல்லை; அவர் கர்வப்பட்டதும் இல்லை. அவர்,

'எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்ற வள்ளுவர் கருத்தை அடிக்கடி வற்புறுத்துவார். அப்பெரியார், தாம் உதவி செய்வதை உதவி பெறுபவர் அறியாத வகையில் உதவும் இயல்புடையவர். இங்ஙனம் உதவி செய்பவரைக் காண்பதும் அரிதினும் அரிதன்றோ? அப்பெரியார் அனைவர்க்கும் தாழ்மையாகவே பதில் கூறும் பண்புடையவர்; எவரிடமும் சினத்துடன் பேசி அறியாதவர். அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவர்; எப்பொழுதும்எளிய உடைகளையே உடுத்துபவர்; அரையில் ஒரு வேட்டி, மேல் ஒரு கோட், தலையில் பாகை இவையே அவர் உடை விசேடம், அரசரைக் காண்பதாயினும் - ஆண்டியைக் காண்பதாயினும் இந்த ஒரே உடை தான். ஆடம்பர உடைகளை அவரிடம் காணல் இயலாது.

1947 ஆகஸ்டில் இந்தியா விடுதலை பெற்றது. விடுதலைக் கொண்டாட்டத்தன்று அவர் வானொலியில் பேசிய பேச்சு உள்ளத்தில் இருக்கத்தக்கது:

'நமது தாய்நாடு இன்று விடுதலை பெற்றது குறித்து நாம் விழாக் கொண்டாடுகிறோம்; இந்த நல்ல நாளில் - (1) 'இந்த விடுதலை நிலைபெற நாம் பாடுபடவேண்டும்; அதற்கு அடிப்படையாக இந்தியர் அனைவரும் ஒரு தாயீன்ற மக்கள் என்னும் எண்ணத்தைச் செயலளவில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்; (2) நம் நாட்டுப் பெரும்பாலான மக்கள் ஏழைகள்; கிராமவாசிகள்; கல்வியறிவு அற்றவர்கள், அவர்களை மேனிலையில் உயர்த்தப் பாடுபட வேண்டும்;(3) இந்தியக் கைத்தொழில்-விவசாயம்-வாணிகம் இவை வளர்ச்சி பெறப் பாடுபடுவோம்; (4) தொன்று தொட்டு இந்தியாவின் பெருமைக்குக் காரணமாக விளங்கிவரும் அறக் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்க்கை நடத்துவோம்' என்று நாம் சபதம் செய்து கொள்ள வேண்டும். உரிமை பெற்ற தாய் நாடு வாழ்க!'

தத்துவமேதை டாக்டர் இரர்தாகிருஷ்ணன் 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ந் தேதி அமரரானார்.




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# தமிழக அரசின் அரும்பணிகள்

மக்கள் நல அரசின் குறிக்கோள்களை அடைவதில் முன் எப்போதையும்விட தமிழகம் இன்று முன்னணியில் உள்ளது. தேசிய அளவில் தமிழ்நாட்டின் மதிப்பு உயர்ந்துள்ளது.

**நிர்வாகத்தில் திறமை**

எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலை அகற்றிட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. கண்காணிப்பு, ஊழல் ஒழிப்பு இயக்குநரகம் முடுக்கிவிடப்பட்டு, ஊழலுக்கு வாய்ப்புள்ள துறைகளில் திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன. தேங்கிக் கிடந்த பல்லாயிரக்கணக்கான கோப்புகள்மீது விரைவாக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மக்கள் குறைகள் கேட்டல்**

பொதுமக்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்த்து வைக்கும்பணி தீவிரமாக்கப்பட்டது. குறைகேட்கும் பிரிவுகள் தலைமைச் செயலகத்தில் பொதுத் துறையில் மட்டுமல்லாது, எல்லாத் துறைகளிலும் அமைக்கப்பட்டன. பொதுமக்கள் குறைகள் கேட்கப்பட்டு, உடனுக்குடன் குறை தீர்க்கும் நடவடிக்கைகள் முழுமூச்சுடன் எடுக்கப்படுகின்றன.

**தொழில் வளம் பெருகிட**

மந்தமடைந்துவிட்ட தொழில் முயற்சிகளை முடுக்கி விடவும், தொழில் வளம் பெருக்கிடவும், வர்த்தக வரிகளைச் சீரமைப்பது உள்ளிட்ட பல புதிய சலுகைகளையும், மின்சார வசதி, தொழில் நுட்ப ஆலோசனை போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் 1988 மே 8 அன்று அரசு அறிவித்தது.

1988 ஜூலை 16 வரை, பல்வேறு நிதி நிறுவனங்கள், வங்கிகளின் உதவி, 1645 நலிவடைந்த சிறுரகத் தொழிற்சாலைகளுக்குக் கிடைத்திருக்கிறது. நலிவடைந்திருந்த 58 நடுத்தரத் தொழிற்சாலைகளில் 'சிப்காட்' உதவியினால் 10 பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும்12 விரைவில் நல்ல நிலைக்கு வந்துவிடும். 15 தொழிற்சாலைகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுகின்றன.

**மூடப்பட்ட நெசவு ஆலைகள் திறக்கப்பட்டன**

1988 பிப்ரவரி 21-இல் தமிழ்நாட்டில் 41 நெசவாலைகள் மூடப்பட்டிருந்தன. அரசு மேற்கொண்ட சிறப்பு உதவி நடவடிக்கைகளின் பயனாக, கடந்த ஐந்து மாதங்களில் 13 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. மற்றவை திறக்கப்பட தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மறுவாழ்வு**

தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 8 தான் இலாபகரமாக நடக்கின்றன. ஆறு ஆலைகளை இலாபகரமாக நடத்துவது சம்பந்தமாகக் குழு ஒன்று செய்த பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

**பருத்தி இறக்குமதி**

நூல் விலையேற்றத்தைக் குறைப்பதற்காக, கூட்டுறவு நூற்பாலைகள் பயன்படுத்திக் கொள்வதற்கு 30,000 பேல் பருத்தி இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நூல் விலை குறைய**

நெசவாளர்களுக்கு நூல் விலையைக் குறைக்க நூலுக்குப் பதில் மின்சாரம் வழங்கும் திட்டம்ஒன்றை 1988 ஏப்ரல் முதல் அரசு கொண்டு வந்தது. அதன்படி, துணி ஆலைகள் குறைந்த விலையில் நூல் உற்பத்தி செய்வதற்காக மாநில மின்வாரியம் ஆலைகளுக்கு 70 இலட்சம் யூனிட் மின்சாரம் கூடுதலாக வழங்கியுள்ளது. இதனால், 4.5 கிலோ கிராம் எடையுள்ள ஒரு நூல் கட்டு மார்க்கெட் விலையைவிட ரூ. 12 குறைவாக நெசவாளர்களுக்கு விற்கப்படுகிறது.

**மகளிர் நிலை உயர**

கிராமப்புற மகளிர், சுகாதாரம், துப்புரவு ஆகியவற்றில் அறிவு வளர்ச்சி பெறவும், தொழில் திறமையை வளர்த்துக் கொள்ளவும், சமுதாய நிலையிலும், பொருளாதார நிலையிலும் உயர்வு பெறச் செய்யவும், உதவிடும் திட்டங்களை அரசின் தலைமைச் செயலர் தலைமையில் உள்ள வல்லுநர் குழு வகுத்து வருகிறது. இத்திட்டங்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் 600 மகளிர் வீதம் 11,400 மகளிர் பயன் அடைவர்.

நடப்பாண்டில் மகளிர் மேம்பாட்டிற்கான தனித் திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் பயிற்சி பெறவும், வருவாய் தரும் தொழில்களை மேற்கொள்ளவும் கிராமப்புற மகளிருக்குப் புதிய வாய்ப்பும், வசதிகளும் கிடைக்கின்றன. கிராமப்புறங்களில் வாழும் 25,000 ஆதிதிராவிட மகளிர் மேம்பாட்டிற்காக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சிறப்பு உதவிகள்**

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் நன்மை தரும் திட்டங்களுக்காக 1988-89-ஆம் ஆண்டுக்கு ரூ. 198.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 161.05 கோடிதான். அது மாநிலத் திட்டத்தின் மொத்தச் செலவில் 11.46 சதவிகிதம் ஆகும். ஆனால் இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மொத்தச் செலவில் 13.4 சதவீதம் ஆகும்.

பொதுப் பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிட பழங்குடி மாணவர்களுக்கு (சுமார் 10 இலட்சம் பேருக்கு) நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்க அரசு ரூ. 128 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் கூடுதலாக ரூ. 45 இலட்சம் அனுமதிக்கப்படுகிறது.

காமராஜர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 8,000 தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் படிப்பு உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினருக்கு 35321 வீட்டுமனைப்பட்டாக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், நலனுக்காக 5,000 பாசனக் கிணறுகள் 'ஜீவன்தாரா' என்னும் புதிய திட்டத்தின்கீழ் அமைக்கப்படுகின்றன.

**நுகர்வோர் பயன்பெற**

கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார ரீதியில் தனித்து இயங்கும் திறனைப் பெருக்கவும், இருப்பை அதிகரிக்கவும், விநியோக ஏற்பாடுகளை எளிதாக்கவும், தக்க வழி வகைகள் காணப்பட்டு, பொது விநியோக முறை சீரமைக்கப்பட்டுள்ளது.

பதுக்கலையும், கள்ளச்சந்தையையும் நீக்கிடவும், நியாயவிலையில் பொருள்கள் கிடைத்திடவும், தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 20.51 கோடி அளவிற்கு அபராத வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு பற்றி குழந்தைகளும் அறிந்திட பாடத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

## அரசு மகளிர் இல்லங்களின் விழிப்புப் பணி!

பாதுகாப்பற்ற பெண்கள், வாழ்க்கை தவறிய பெண்கள், தவறக்கூடிய சூழ்நிலையிலுள்ள பெண்கள் ஆகியோருக்கு முறையான பாதுகாப்பு, உறைவிடம், உணவு, உடை ஆகியவை அளித்து, தொழிற்பயிற்சி முறை சார்ந்த, மற்றும் முறை சாராக்கல்வி மூலம் மறுவாழ்க்கைக்கான அடித்தளம் அமைத்துத் தரும் பணிகளை, தமிழ்நாடு சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு மகளிர் இல்லங்கள் நிறைவேற்றி வருகின்றன. அவை:

1. ரோசரி சர்ச் சாலை, மயிலை,சென்னை-4. 2. பெசண்ட் ரோடு, சொக்கிக் குளம், மதுரை. 3. ரேஸ் கோர்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி, 4. ஏர்க்காடு ரோடு, கோரிமேடு, சேலம். 5. சரவினாம்பட்டி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

சென்னை, மயிலை கச்சேரி சாலையில் இயங்கி வரும் அபய நிலையமும், மயிலை ரோசரி சர்ச் சாலையில் ஆந்திர மகிள சபாவின் கீழ் இயங்கும் ஆஷ்ரயாவும் இச்சமூகப் பணியில் இணைந்து கொண்டு 14 முதல் 21 வயதுக்குட்பட்ட மேற்குறிப்பிட்ட பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்தும், தொழில் கல்வி மற்றும் கல்வி அளித்தும் வருகின்றன. பாதுகாப்பு வேண்டும் ஆதரவற்ற மகளிர் இந்த இல்லங்களை அணுகலாம்.

**கிராம நலம்**

தமிழ்நாட்டுக் கிராமங்களில் இப்போது புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் வறுமை ஒழிப்பை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் 1988-89 நிதியாண்டுத் தொடக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அவற்றிற்கான அரசு அனுமதி 1988 மார்ச் மாதத்திலேயே பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் புதிதாக 1.43 இலட்சம் பேர் பயனடைவர். சென்ற ஆண்டில் இப்படிப் புதிதாகப் பயன்பெற்றவர்கள் 69,000 பேர்தான்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 20,707 தொகுப்பு வீடுகள், 1913 கிராமப்புறக் கழிப்பிடங்கள், 125 தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள், 426 கிராமச்சாலை மதகுகள், 297 நீர்த்தேக்கங்கள், 412வடிகால்கள்,3971 மற்றவகைப் பணிகள்1988 ஜுன் வரை முடிக்கப்பட்டுள்ளன. 25,366 வேலைகள் நடந்து வருகின்றன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், 1988 ஜுன் வரை15,521 தொகுப்பு வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. 29,050 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**அபிவிருத்தி செய்யப்பட்ட சூளைக்கள்**

1958 பிப்ரவரி-ஜுன் மாதங்களில் 54,942 அபிவிருத்தி செய்யப்பட்ட சூளைக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் எரிபொருள் சிக்கனம் ஏற்பட்டதோடு, அடுப்பங்கரையில், கரிப்புகை படிவதும் தடுக்கப்பட்டது.

**எல்லாருக்கும் நலவாழ்வு**

1988 ஜனவரி முதல் நாளன்று தமிழகத்தில் 698 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருந்தன. நடப்பாண்டில் கூடுதலாக 414 புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்படும். அடுத்த 3 மாத காலத்தில் மேலும் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனுமதிக்கப்பட உள்ளன.

கிராமப் பகுதிகளில் 20,000 சுகாதாரப் பணியாளர்களுக்கும், 2,000 டாக்டர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக சுகாதாரப் பயிற்சி தொடர் கல்வித்துறை இயக்ககம் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் உலக வங்கி உதவியுடன் ரூ. 60 கோடி செலவில் ஏழாண்டுகளில் நிறைவேற்றப்படும் 'மக்கள் தொகைத் திட்டம்-5' இறுதியாக்கப்பட்டுள்ளது.

**நீதித்துறைப் பதவிகள்**

நீண்ட காலமாகக் காலியாக இருந்த நீதிபதி பதவிகள் குறுகிய காலத்தில் நிரப்பப்பட்டுள்ளன. இரண்டாம் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளாக 216 தற்காலிக நீதிபதிகள்பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளனர்.

**விவசாய உற்பத்தி பெருக**

விவசாய உற்பத்தியைப் பெருக்கிட, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர் அதிகாரிகளைக் கொண்ட உயர்நிலைக் குழுவினர் விளை நிலங்களை நேரில் பார்வையிட்டு விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடங்கலாக இருக்கும் நிலைமைகள் பற்றி ஆராய்கின்றனர்.

**சென்னை நகரைத் தூய்மைப்படுத்தும் இயக்கம்**

சென்னை மாநகரில் துப்புரவுப் பணிகளை முடுக்கிவிட்டு, சென்னை நகரைச் சுத்தமான, சுகாதார மான நகரமாக மாற்றத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சிக்குக் கூடுதல் நிதிவசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

துப்புரவு இயக்கம் மதுரை, கோயம்புத்தூர் போன்ற மற்ற பெரிய நகரங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டுக்கு ஊக்கம்**

தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்கச் செய்வதன் மூலம் தமிழ்மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் வளர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கான வழி

காட்டி நெறிகளை வகுத்துக் கொடுக்க நீதிபதி மோகன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை வளப்படுத்தும் திட்டங்கள் இன்னும் பல — அவைகளில் சில பின்வருமாறு :

மின்னணுப் பொருட்கள் உற்பத்திக்கு ஊக்கம்;

மின்னணுப் பொருள்தொழிற்சாலைகள் தொடங்க மூலதன உதவி;

சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் சிக்கல் இல்லாத எளியமுறை;

21000 ஊனமுற்றோர் நலனுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு;

கோயில்களில் ஓதுவாருக்கு ஓய்வூதியம்;

பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எல்லா வகுப்புகளிலும் அதிகரிப்பு;

15,385 கல்லூரி ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பல்கலைக் கழக மானியக்குழுச் சம்பள வீதங்களில் சம்பள உயர்வு;

453 இலட்சம் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்குக் குறித்த காலத்தில் விநியோகம்.

4392குடிசை வாழ்வோருக்குப் பலமாடிக் கட்டட வசதி, 25,000 குடும்பங்கள் பயன்பெற ரூ. 15 கோடி ரொக்கக் கடன் உதவி.

15 தொழில்களில் குறைந்த பட்ச ஊதியம் உயர்வு; கூடுதலாக 23,320 பேருக்கு வேலைவாய்ப்பு.

சேலம், தூத்துக்குடி, விமான நிலையங்கள் அமைக்க நடவடிக்கை; அதற்கான நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது.

21,700 எக்டேர் நில சாகுபடிக்குப் பாசன வசதி.

தொகுதி ஆயுள்காப்பு, நிலச் சீர்திருத்தம் மூலம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சிக்காக உலக வங்கி உதவியைப் பெறுதல்.

நைலான், வலை வாங்க 1000 மீனவர்களுக்கு மானியம்.

இயற்கை விபத்துக்குள்ளானோருக்கு ரொக்க உதவி மாதம் ரூ. 400 ஆக அதிகரிப்பு;

சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் திட்டங்கள்;

தொகுப்பு :

**வ. இராசமனோகரன்**



# மாநகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம்

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே, மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வுபெறும் ஊழியர்களுக்கும் ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை வழங்கப்படுகின்றன.

1.8.82 முதல், மாநகராட்சி ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே அவர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 350 ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். ஓய்வு பெறும் மாநகராட்சி ஊழியர்களுக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன:

ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பு ஊதியம், சிறப்பு வைப்பு நிதி, பொது வைப்பு நிதி, ஓய்வூதியத்தைத் தொகுத்துப் பெறுதல்; குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.245 ஆகும். அதிக பட்ச ஓய்வூதியத்திற்கு வரம்பு இல்லை.

பணிக்கொடையின் உச்ச வரம்பினை ரூ.1,00,000 ஆக உயர்த்தி, சமீபத்தில் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வுத்தரவு மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. ஓய்வுபெறும் மாநகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சலுகைகள் வழங்குவதற்காக மாநகராட்சி ஆண்டொன்றிற்கு ரூ.3.80 கோடி செலவுசெய்கின்றது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம், அகவிலைப்படி ஆகியவற்றை அரசு அதிகரிக்கின்ற போது, அதுபோலவே ஓய்வுபெற்ற மாநகராட்சி ஊழியர்களுக்கும் உயர்த்திக் கொடுக்கப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் ஓய்வுபெற்ற சுமார் 178 ஊழியர்களுக்கும், பணியிலுள்ளபோது மரணமடைந்த சுமார் 40 ஊழியர்களது வாரிசுதாரர்களுக்கும், ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் இழப்பீடு ஆகியவற்றிற்கான காசோலைகள் 15-8-1988 அன்று நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் சிறப்பு அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டன.

1.8.84 தேதிக்கு முன்னர் மாநகராட்சியில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஆகியனவைகள் மட்டுமே வழங்கப்பட்டன. 1.8.84 முதல் மாநகராட்சியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



# செந்தமிழ் இலக்கியத்தை
# இந்தி மொழிக்கு
# எடுத்துச் செல்லும் தூதுவர்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்று பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. இலக்கியம் எந்த மொழியிலே அமைந்திருந்தாலும், அதிலே காணப்படும் நெறிகளுக்குள்ளே ஓர் ஒப்பியல்பு இருந்துதான் வந்திருக்கிறது.

தாயன்பு, தாய்நாட்டுப் பற்று, சகோதர வாஞ்சை, இப்படி எத்தனையோ பண்புகளில் பலநாட்டு இலக்கியங்கள் ஒன்றுபடுகின்றன. ஒருமித்த கருத்தை வலியுறுத்துகின்றன.

தமிழ் இலக்கியங்கள் பிறமொழிகளிலும், பிறமொழி இலக்கியங்கள் தமிழ் மொழியிலும் தொன்று தொட்டுப் பெயர்க்கப்பட்டு வருகின்றன.

வான்புகழ் வள்ளுவர் செய்த திருக்குறள் உலகத்தில் உள்ள பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கிறது. அது, தொடர்ந்து இன்னும் பலமொழிகளில் அவ்வப்போது பெயர்க்கப்பட்டு வருகிறது.

இதுபோலவே லத்தீன் மொழியில் உள்ள பைபிள், தமிழ் மொழியிலும், வேறு பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது.

வால்மீகி முனிவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப் பெற்ற ராமாயணம் - கவிச் சக்கரவர்த்தி கம்பரால் தமிழில் காவியமாக்கப்பட்டது. வடமொழி நைஷதம் - தமிழில் நளவெண்பாவாக மலர்ந்தது.

முற்காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் அந்தப் பணி தொடர்கிறது. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் ரவீந்திரகுமார் சேத், செந்தமிழ் இலக்கியங்களை இந்தி மொழிக்கு எடுத்துச் செல்லும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

லாகூரில் பிறந்த இவர், 'திருவள்ளுவர் - கபீர் ஓர் ஒப்பாய்வு'' என்ற தலைப்பில் இந்தி மொழியில் கட்டுரை எழுதி 19/1-இல் டாக்டர் பட்டம் பெற்றவர் எனபது குறிப்பிடத் தக்க செய்தி.

தாய்மொழி பஞ்சாபி என்றாலும் தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய பிறமொழிகளை இவர் அறிந்திருக்கிறார். அதிலும் தமிழ் மொழி மீது இவருக்குத் தணியாத பற்று இருக்கிறது. 1964ல் டெல்லிப் பல்கலைக் கழகத்தில் இந்தி முதுகலை வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலத்தில் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கே. ஆறுமுகனார் அவர்களின் உரையைச் செவிமடுக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அவரது அரிய உரை இவரிடத்திலே தமிழ்ப்பற்றை ஏற்படுத்தி விட்டது.

இந்தி முதுகலை வகுப்பில் பயில்வோர் இந்திமொழியைத் தவிர, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை விருப்பப்பாடமாகப் பயிலவேண்டும் என்ற நியதி உண்டு. ரவீந்திர குமார் விருப்பப் பாடமாகத் தமிழைத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் அவருக்கு ஏற்பட்ட பற்று, இன்று வரை தொடர்ந்து வருகிறது.

இந்தி மொழி எழுத்தாளர் - தமிழ் இலக்கியங்கள் குறித்து - தமிழ் எழுத்தாளர்கள் குறித்து, இந்தி மொழியில் எழுதி, தமிழ் இலக்கியங்களின் சிறப்பம்சங்களை எடுத்துச் சொல்லி வருகிறார். தமிழிலிருந்து, இந்திக்கு மொழி பெயர்க்கும் எளிய பணியை அவர் செய்து கொண்டிருக்கவில்லை; ஆனால் தமிழ் இலக்கியங்களுக்கும் இந்தி இலக்கியங்களுக்கும் இடையேயுள்ள ஒப்பியல்புகளைத் தொகுத்துச் சொல்லும் தூய பணியில் ஈடுபட்டிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், தமிழ் இலக்கிய வாணர்களையும், தமிழ இலக்கியங்களையும் ஆய்வுரையுடன், நுண்ணோக்குடன் இந்தி மொழி பேசும் வாசகர்களுக்கு இவர் அறிமுகம் செய்கிறார். இதனால் தமிழ் நெறியுணர்ந்த இந்தி எழுத்தாளராக இவர் திகழ்கிறார்

இவரது எழுத்துக்களில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா? பொதுவாக, தமிழ் இலக்கியங்களைக் குறித்து ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து தங்களது மொழியில் பெயர்த்து வருகிறார்கள். ஆனால் டாக்டர் ரவீந்திர குமார் அந்த வகையினரைச் சேர்ந்தவரல்லர்; தமிழ் இலக்கியங்களை - தமிழ் மொழியில் பயின்றே இந்தியில் பெயர்த்து வருகிறார்.

அண்மையில், இவர் இந்தியில் எழுதி வெளிவந்துள்ள நூல், 'தமிழ் வைணவக் கவிஞர்கள் - ஆழ்வார்கள்' என்பதாகும். இந்த நூல் நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்ற 12 ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்நூலைப் பாராட்டி இவருக்கு ரூ.5100 பரிசளித்துள்ளது டெல்லி இந்திக் கழகம்.

தமிழ்நெறிகளை அடிப்படையாக வைத்து இதுவரை 6 புத்தகங்

களை இவர் எழுதியிருக்கிறார். அவை வருமாறு:

* திருவள்ளுவரும் கபீரும்
* திருக்குறள் (இந்தி மொழி பெயர்ப்பு)
* சுப்பிரமணிய பாரதி
* தமிழ் வைஷ்ணவக்கவிஞர்கள் - ஆழ்வார்கள்.
* முகந்தமாலா (குலசேகர ஆழ்வாரின் பக்தி இலக்கியம் - ஆய்வுரை)
* தமிழ் இலக்கியங்களின் மைல் கல். (தொல்காப்பியத்திலிருந்து பாஞ்சாலி சபதம் வரை தமிழ் இலக்கியங்கள் பலவற்றின் சிறப்பம்சம், தமிழ்ப் பரம்பரையின் சிறப்பம்சம்.)

இவர் எழுதியுள்ள 'சுப்பிரமணிய பாரதி' என்னும் நூல் நவீன இந்திய இலக்கியங்களில் மிகச் சிறந்ததாக 1986-87இல் பீகார் அரசு தேர்ந்தெடுத்து ரூ.5,000 பரிசளித்தது.

பல்வேறு கருத்தரங்குகளில், குறிப்பாக கீழ்த்திசை மொழிகள் குறித்த கருத்தரங்குகளிலும், உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குகளிலும் இவர் பலமுறை பங்கேற்றிருக்கிறார்.

கலை, இலக்கியங்களின் வாயிலாக, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் வகையில் செயலாற்றிவரும்-தமிழ் - இந்தி சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் இவர், டெல்லித் தமிழ்ச் சங்கம், நூலாசிரியர்கள் சங்கம், அனைத்திந்தியக் கீழ்த்திசை மொழி மாநாடு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பொறுப்பு வகிக்கிறார்.

இவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்-இந்தி சங்கம் அண்மையில் மகாகவி பாரதியாரின் 105-வது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடியது.

தமிழ் மொழியை அதன் வளமைக்காகவும் பெருமைக்காகவும் இந்திய நாட்டின் பழம் பெரும் மொழிகளில் ஒன்று என்ற சிறப்பம்சத்திற்காகவும், மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் டாக்டர் ரவீந்தர் குமார் சேத், டெல்லிப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாலை நேரக் கல்லூரி ஒன்றில் முதுகலை வகுப்பு விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

தமிழ் இலக்கியங்களை இந்தி மொழியில் அறிமுகம் செய்வதன் மூலம், வடக்கு-தெற்கு இரு பகுதி மக்களிடையேயும்நல்லெண்ணத்தை உருவாக்கவும், வட இந்திய மக்கள் மேலும் மேலும் தென்னகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஆர்வத்தை ஊட்டவும் நான் முயற்சி செய்து வருகிறேன்'' என்று தெரிவிக்கும் டாக்டர் ரவீந்திரகுமார் சேத்தமிழார்வத்தின் வடிவமாகவே காட்சி தருகிறார்.

—எஸ். எஸ். சுந்தரம்

# நரிக்குறவர் நலம் பெற...



நரிக்குறவர் இனம், தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி தாலுக்கா அருகாமையில் உள்ள கல்வராயன் மலைப்பகுதியில் வாழ்ந்து வருகின்றது.

இப்பகுதியில் இருந்து 50 நரிக்குறவர் குடும்பங்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கடலூர் தாலுக்கா, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடலூர் பேரூராட்சிப் பகுதியில் குடியேறி வசித்து வருகிறார்கள்.

இக்குடும்பங்கள் அரசு புறம்போக்கு நிலத்தில் ஒரே கூட்டமாக, தற்காலிகக் கொட்டகை அமைத்து அதில் வசித்து வருகிறார்கள். 50 குடும்பங்களில் ஆண்கள் 55, பெண்கள் 60, குழந்தைகள் 80 உள்ளனர். இவர்களில் 14 வயது சிறுவன் ஒருவன். இவன் வடலூர் உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறான். மற்ற அனைவரும் எழுத்தறிவு இல்லாதவர்கள்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளையன் குமாரன், பழனி என்பவர் தென்னார்க்காடு மாவட்டம் நரிக்குறவர்இனத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறார். நரிக்குறவர் 50 குடும்பங்கள் தற்போது வடலூர் பேரூராட்சியைச் சேர்ந்த பார்வதிபுரம் கிராமத்தில், தொழில்பேட்டைத் தெருவில் உள்ள ஓடைபுறம்போக்கு நிலத்தில் தற்காலிகக் கொட்டகை அமைத்து வசித்து வருகிறார்கள்.

அரசு அளிக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டின்கீழ் உள்ள, பின்தங்கிய இந்த நரிக்குறவர் குடும்பங்களுக்கு, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் மூலம் பாசிமணி வாங்கி விற்பனை செய்து பயன் பெற ஒரு குடும்பத்திற்கு ரூ.3,000 வீதம், 25 குடும்பங்களுக்கு 1985-86-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மேற்படி திட்டத்தில்-'டோக்ரா' திட்டத்தின் கீழ் 15 குடும்பங்களுக்குப் பாசிமணி மூலம் பயன் பெற ரூ.3,000 வீதம் கடன் 1987-88-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மேலும் 1988-'89ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்மூலம் இவர்கள்ஒன்றுசேர்ந்து பணி புரிய ஒரு நிரந்தரப் பணி செய்யும் கொட்டகை அமைத்துத் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சங்க இலக்கியம், கம்ப இராமாயணம், சித்தர் பாடல்கள் பிற மொழிகளில் வெளியிட அரசு நடவடிக்கை

கம்ப இராமாயணம், சங்க இலக்கியம், சித்தர் பாடல்கள் ஆகியவை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்படும் என்றும், புகழ் வாய்ந்த தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள அரிய கையெழுத்துப் பிரதிகள் ஆய்வுசெய்யப்பட்டு, மொழி பெயர்க்கப்பட்டு, நூல்களாக வெளியிடப்படும் என்றும் 26.6.88 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவொன்றில் மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன் தொடர்பாக அப்பணிகளைச் செம்மையாக நிறைவேற்ற நீதிபதி திரு எஸ். மோகன் அவர்களைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் (பொறுப்பு) திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப., அவர்களை அமைப்பாளராகவும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அரசு நியமித்துள்ளது.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம், பேராசிரியர் கே. சுவாமிநாதன், பேராசிரியர் மு. அருணாசலம், திரு கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் கிருஷ்ணா சீனிவாஸ், டாக்டர் முத்துக் கண்ணப்பர், திரு வன்மீகநாதன், டாக்டர் ஔவை நடராசன், டாக்டர் விக்ரமன், திரு எல்.பி.கே. ஆர். இராமநாதன் செட்டியார், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம், திரு அன்பு வேதாசலம் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இந்த ஆலோசனைக் குழுவின் முதற்கூட்டம் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையில் 5-8-88 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குழு உறுப்பினர்கள் டாக்டர் அகத்தியலிங்கம், திரு வன்மீகநாதன் தவிர மற்ற அனைவரும் கலந்து கொண்டனர். ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் உடல் நலக் குறைவின் காரணமாக இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.

கூட்டத்தின் தொடக்கத்தில் ஆலோசனைக் குழுவின் அமைப்பாளரும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலருமான (பொறுப்பு) திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் அரசின் நோக்கம் குறித்தும், ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள், ''தமிழுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அரிய பணிகள் ஆற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் தோன்றியதே இச் சீரிய முயற்சி. தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, நூல்களாக வெளியிடுவது குறித்து, தமிழ் அறிஞர்களிடம் கலந்தாலோசித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணியினை விரைவாக நிறைவேற்றவும், செம்மையாகச் செய்து முடிக்கவும் இந்த ஆலோசனைக் குழுவினை அரசு அமைத்துள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரசு எல்லா வகைகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கும்'' என்று தெரிவித்தார்.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

## பார்த்தோம் படித்தோம்.

1.8.88 இதழில் வெளியான ''போதை மருந்துகளை ஒழிக்கப் போர் தொடுப்பது அவசியம்'' என்ற கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. குடும்பத்தில் விரும்பிப் படித்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாகும்.

—நாவலூர் கே.எஸ்.எம்.ராஜா,
தேவகோட்டை.

டாக்டர் வீரதாராஜுலு அவர்களைப் பற்றிய கட்டுரை வெளியிட்டதன் மூலம், பெருந்தொண்டு புரிந்துள்ளீர்கள். போதைப் பொருள் பற்றிய கட்டுரை நல்ல விளக்கமாய் இருந்தது. மண்டேலாவின் சுதந்திர வேட்கைக் கவிதையும் சிறப்பு அம்சம்

—கவிஞர் கானதாசன்,
சென்னை-16.

தென் ஆப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவின் சுதந்திர வேட்கையைச் சித்திரிக்கும், ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்களின் ஆங்கிலக் கவிதைத் தமிழாக்கம் அற்புதமாக அமைந்திருந்தது.

—அரிமா பூபாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

1.8.88 இதழில், அரசின் ஊதியக் குழு பற்றிய முழு விவரத்தையும் படித்துத் தெரிந்து கொண்டேன்.

—எஸ்.நாகரத்தினம்,
படமாத்தூர்.

1.8.88 இதழ் அட்டைப்படம் நன்றாக இருந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாச் செய்திகள் பயனுள்ளவையாக இருந்தன.

—சு. தங்கராஜ்.
வடமலை சமுத்திரம்.

கவியரசு கண்ணதாசன் கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது. தன் நாட்டைக் காக்க ஒரு போர் வீரன் இமயமலைச் சாரலில் படுத்துக் கனவு காண்பதைப் படித்ததும்-அங்கே நானே இருந்து கனவு காண்பதாக உணர்ந்தேன். அந்தக் கட்டுரையைப் பலமுறை படித்தும் என் தாகம் தணியவில்லை. ஒரு ராணுவ வீரனின் வேகம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

—பி. கே. வாதாபி,
பொம்மிகுப்பம்,
திருப்பத்தூர்,
வ. ஆ. மாவட்டம்.

## அரசுச் சார்புத்துறைகளில் ஒரு மணிமகுடம்

# தமிழ்நாடு கனிம நிறுவனம்!



ஒரு நாட்டின் தொழில்வளம் அந்நாட்டின் கனிம வளத்தைப் பொறுத்து அமைகிறது. கனிம வளம் ஒரு முறை வெட்டியெடுத்து விட்டால் மீண்டும் ஈடு செய்ய இயலாத அரிய சொத்தாகும். ஆகவே கனிமங்களை விரயமாக்குவதைத் தவிர்த்தல், குறைந்த தரமுடைய கனிமங்கள் உள்ளிட்ட அனைத்துக் கனிமங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்துதல், அறிவியல் முறையில் கனிமங்களை வெட்டியெடுத்தல், பிற்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் பாதுகாத்து வைத்தல் போன்றவைகளில் ஈடுபாடு கொள்வது அரசின் தலையாய கடமையாகிறது.

தமிழ்நாட்டில் முக்கியத் தொழில்களுக்குப் பயன்படும் கனிமங்களைச் சீராகவும், அறிவியல் முறையிலும், வணிக நோக்கோடு அகழ்ந்தெடுக்கவும், கனிம வளத்தைப் பேணிக் காக்கவும், கனிம ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், பின்தங்கிய கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கவும் - முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவக்கப்பட்டது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் இயங்கத் துவங்கியவுடன் மேற்கொண்ட முக்கியப் பணிகளில் ஒன்று கரும்பாறை ஏற்றுமதியாகும். சிறு கனிமங்களில் ஒன்று என்று கூறப்பட்டாலும் புவியியல் வட்டாரத்தில் 'டோலரைட்' பாறைகள் எனக் குறிப்பிடப்படும் கரும்பாறைகள் மிகுந்த ஆதாயத்தைத் தரக்கூடிய மதிப்புமிக்க ஏற்றுமதிப் பொருளாகக் கருதப்படுகிறது. ஏற்றுமதித் தரமுடைய கரும்பாறைகள் நம் நாட்டில் ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. தமிழ்நாட்டில் திண்டிவனம், ஆத்தூர் பகுதிகளில் கிடைக்கும் கரும்பாறைகளின் தரம் உலகில் சிறந்த ஸ்வீடன் நாட்டுக் கரும்பாறை வகையைச் சார்ந்தவையாக இருப்பதால் ஜப்பான் நாட்டினர் ஸ்வீடன்நாட்டு கரும்பாறையை இறக்குமதி செய்வதில் ஏற்படும் மிகுதியான பொருட்செலவைக் கணக்கில் கொண்டு, தமிழ்நாட்டுக் கரும்பாறையையே மிகவும் விரும்பி இறக்குமதி செய்து வருகிறார்கள்.

**டாக்டர் ச. சரவணன்**
**தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்**
**தமிழ்நாடு கனிம நிறுவனம்**
**சென்னை.**

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகின்ற 'கிரானைட் பாறைக் கட்டிகள் மற்றும் மெருகிடப்பட்ட நினைவுக் கற்கள், கிரானைட் தகடுகளின் மொத்த மதிப்பில் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆறில் ஒரு பங்கு ஏற்றுமதி செய்து உலகச் சந்தையில் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது. கரும்பாறைகள் மிகவும் பளபளப்பாக மெருகிடக் கூடியவை. வெளிநாடுகளில் இவற்றைத் தகடுபோல் அறுத்து,பளிங்குபோல் மெருகிட்டுச் சுவர்களில் பதிக்கும் ஓடுகளாகவும், நினைவுக் கற்களாகவும் தரையில் பாவவும் பயன்படுத்தி வருகிறார்கள். துவக்கத்தில் கரும்பாறைகளை தனியார் சிலர் மட்டுமே வெட்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். வெளிநாடுகளில் இதன் தேவை நாளுக்கு நாள் பெருகுகிறது. குறுகிய காலத்தில் கூடுதலான ஆதாயம் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக இவ்வாணிபத்தில் ஈடுபட்டிருந்த தனியார்கள் கனிமத்தைப் பாதுகாத்தல், சீரான விற்பனை விலை ஆகிய கொள்கைகளைப் புறக்கணித்தனர். குவாரிகளில் பணி

புரியும் தொழிலாளர்கள் ஒரு வகைக் கொத்தடிமை நிலையில் வைக்கப்பட்டு வந்தனர். இந்நிலையைச் சீராக்கவே தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் கரும்பாறை வாணிபத்தை ஒப்படைத்தது.



தமிழ்நாடு கனிம நிறுவனம் கரும்பாறை வாணிபத்தில் ஈடுபட்டதும் நிலமைகள் மாறின. கரும்பாறைகளை நேரடியாக வெளிநாட்டு வணிகர்களுக்கு டெண்டர் முறையில் விற்பனை செய்வது என்ற கொள்கை வகுக்கப்பட்டுச் செயலாக்கப்பட்டது. அதனால் தமிழ்நாட்டின் கரும்பாறைகளுக்கு நல்ல ஏற்றுமதி விலை கிடைத்தது. சீரான விலைக் கொள்கையையும், தரக்கட்டுப்பாட்டையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் நிலை நிறுத்தியது. தமிழ்நாடு கனிம நிறுவனம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 40 இடங்களில் கரும்பாறைகளை வெட்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் மிகுதியாகக் கிடைக்கும் மற்றொருவகையான சாம்பல் நிறப்பாறைகள் ஏற்றுமதிக்கு ஏற்றதல்ல 'என்று கருதப்பட்டு, வெறும் சாலைக் கற்களாகவும், கட்டிடக் கற்களாகவும் பயன்படுத்தப்பட்டுவந்தன. ஆனால் தமிழ்நாடு கனிம நிறுவனம் சாம்பல் நிறப்பாறைகளுக்கு மேற்கு ஜெர்மனியில் சந்தையைப் பிடித்து ஆண்டுதோறும் சுமார் 3,500 கன மீட்டர் ஏற்றுமதி செய்வது ஒரு புரட்சியாகும்.

உயர் கனிமங்களாக சுண்ணாம்புக் கல், சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள், குவார்ட்ஸ் மற்றும் பெல்ட்ஸ்பார், வெர்மிகுலைட், வெப்பந்தாங்கிக் களிமண் ஆகிய கனிமங்களை தமிழ்நாட்டில் 20 சுரங்கங்களில் வெட்டியெடுத்து தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள பலதொழில்களுக்கு அளித்து வருகிறது. உயர் கனிமங்கள் விற்பனை மூலம் வருவாய் 1987-88-ஆம் ஆண்டு பன்மடங்கு உயர்ந்துள்ளது. உயர் கனிமங்களுக்கான தேவை பெருகி வருவதால் மேலும் பல சுரங்கங்களை இந்நிறுவனம் ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அப்படியே பாறைகளை ஏற்றுமதி செய்வதைவிட அவற்றை அறுத்து மெருகிட்டு ஏற்றுமதி செய்தால் குறைந்தது நான்கு மடங்கு கூடுதலாக ஆதாயம் கிடைக்கும். ஆகவே தமிழ்நாடு கனிம நிறுவனம் பாறைகளை அறுத்து மெருகிடும் 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய தொழிற்சாலை ஒன்றை சென்னைக்கருகில் மணலியில் ரூ. 640 இலட்சம் செலவில் அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையில் 1986 மார்ச் 25-ஆம் தேதி முதல் வணிக முறையில் உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சிவகங்கைக்கருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தை வெட்டி எடுத்து, சுத்திகரித்து, அதைக் கொண்டு பலவிதப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்தைத் தீட்டி செயலாக்கி வருகிறது. உலகில் செதில் வகையான கிராபைட் கனிமத்திற்குத்தான் அதிகமான கிராக்கி இருக்கிறது. மேலும் பெரிய செதில் வகை, உயர் தொழில்நுட்பப் பொருள்கள் தயாரிப்பிற்கு மிகுந்த வசதியாக இருக்கும். இத்தகைய பெரிய செதில் வகைகள் சிவகங்கையிலே மிக அதிகமாகக் கிடைக்கின்றன. இந்த கிராபைட் உலகத்தின் தலைசிறந்த வகையைச் சார்ந்தது என வல்லுநர்கள் கூறுகிறார்கள். பாறையிலே கிடைக்கும் கிராபைட் கனிமத்தைச் சுத்திகரிப்பதன் மூலம் கரிச்சத்தை 96 முதல் 99 விழுக்காட்டிற்கு உயர்த்தலாம். இத்தகைய உயர் கரிச்சத்து மிக்க கிராபைட் வெப்பக்கலங்கள், மின்முனைகள், கார்பன் புஸ்கள், சாயங்கள், உராய்வுக் குறைப்புச் சாதனங்கள், வேகத்தடைச் சாதனங்கள், ஆகாய விமானத்தின் பாகங்கள், காற்றாலைத் தகடுகள் ஆகியவை தயாரிப்பதற்கும், இரும்பு அல்லாத உலோகத் தாதுக்களை உருக்குவதற்கும் பயன்படுகிறது.



கனிமத்தை வெட்டியெடுத்தல், அதைச் சுத்திகரிப்பதற்குத் தொழிற்சாலை அமைத்தல் ஆகிய இரண்டு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குச் சுமார் ரூ. 25 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முறையாகச் செயலாற்றப்படும்போது பின்தங்கிய மாவட்டமான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சுமார் 600 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர். இத்திட்டம் விரைவில் துவங்க




அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தின் குவாரிகளும், சுரங்கங்களும் பெரும்பாலும் கிராமப் புறங்களிலும் காட்டுப் பகுதிகளிலும் அமைந்திருப்பதால் சுமார் 3,500 பின்தங்கிய கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். மருத்துவ வசதி, விடுமுறை வசதி போன்ற இதர சலுகைகளோடு தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆண்டு தோறும் தொழிலாளர்களுக்கு போனஸ் அளித்து வருகிறது.

மத்திய அரசு அளித்துள்ள வருமானவரி விலக்குச் சலுகையை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு கிராமப் புனரமைப்பு நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு கனிம நிறுவனம், முதல் அமைச்சரின் சத்துணவுக்கூடங்கள் அமைக்கக் கணிசமாக நிதியுதவி செய்து வருகிறது.

தனியார் நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் தொடர்ந்து இன்னல் விளைவித்த போதிலும், தொழிலாளர் பிரச்சினை, நிதி வசதிப் பற்றாக்குறை ஆகிய பலவித இடர்ப்பாடுகள் அவ்வப்போது எழுந்த போதிலும், குஜராத் கனிம வளர்ச்சி நிறுவனம் கடந்த 23 ஆண்டுகளில் பெற்ற வளர்ச்சியை, தமிழ்நாடு கனிம நிறுவனம் கடந்த பத்தாண்டுகளில் பெற்றுத் திகழ்கிறது என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் கனிமங்களின் மேன்மை, மகிமை, மேலும் அதன் மூலம் தொழில்கள் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள், வழிமுறைகள் ஆகியவை குறித்த தகவல்களைத் திரட்டிப் பொதுமக்களுக்கும், தொழில் துவங்குபவர்களுக்கும் தகவல்களைத் தந்து இதன் மூலம் பலநூறு தொழில்கள் கனிமத்தின் அடிப்படையில் உருவாவதற்கு வழிவகை கண்டு வருகிறது. இந்நிறுவனத்தின் ஏற்புடைய பணியால் தமிழகமும் இந்திய உபகண்டமும் தொழில் வளர்ச்சியால் மேன்மை எய்தும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

ஒரு நாட்டின் மொத்த வளர்ச்சி அந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டினைக்கொண்டே கணக்கிடுதல் இயல்பாகும். உலகத்தில் பொதுமையையும், மென்மையையும், தன்மையையும் உருவாக்க வல்லது, பொருளாதார மேம்பாட்டோடு கூடிய வளர்ச்சியேயாகும். அத்தகைய பொருளாதார மேம்பாட்டை இந்திய நாட்டில் உருவாக்கிக் காட்டுகிற இலட்சியத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் கொண்டு செயலாற்றிக் கொண்டு இருக்கிறது. ஆண்டுக்காண்டு ஏற்றுமதி வளர்ச்சியால் முறையான ஆதாயத்தையும் மெச்சத்தக்க அந்நியச் செலாவணியையும் இக்கனிம நிறுவனம் உருவாக்கியுள்ளது. பிற மாநிலங்களில் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு, வருகின்ற கனிம நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்றால் மிகையாகாது. இந்திய நாட்டின் கனிம வரைபடத்தில் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறந்த இடத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் பெற்றுத் தந்திருக்கிறது.

உலகத்தில் குறிஞ்சி நிலம் உயர்ந்து நிற்கும் தமிழகத்தில் குறிஞ்சி மலர் பத்தாண்டிற்கு ஒரு முறை பூத்து மணம் வீசுவதுபோல, தமிழ்நாடு கனிம நிறுவனம் பத்தாண்டுகளில் குறிஞ்சி மலராய் மணம் வீசி நிற்கிறது. கனிமத்தின் பெருமைதனை-சிறப்புதனை, உலகறியச் செய்து உலகச் சந்தையில் தனி இடம் பெற்றுத் திகழ்கிறது. கலைபேசும் சிற்பக்கலை, காண்போரைக் களிப்பில் ஆழ்த்தும் கட்டிடக்கலை இவற்றைப்பேணி வளர்ப்பதில் இந்நிறுவனம் உலக அரங்கில் பல வெற்றிகளை ஈட்டும் என்பது வெள்ளிடைமலையாகும்.

# உணர்வுகள் விழித்த பொழுது...

-டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

சங்கர் தனக்குள் சிரித்துக் கொண்டான். ஆயுள் கைதியாக வேலூர் சிறைக்கு வந்து மூன்று மாதங்களாகிவிட்டன. தன்னுடைய நன்னடைத்தையால், சிரித்த முகத்தால், அன்பால், அங்குள்ள அனைவர்க்கும் நண்பன் ஆனான். சங்கரின் நற்பண்புகளினால் ஈர்க்கப்பட்ட இன்னொரு கைதி சேகர். அவனும் சந்தர்ப்ப வசத்தால் தவறிழைத்துக் குற்றவாளி ஆனவன்.

'சங்கர், என்ன யோசனை! அன்பாகப் பழகுகிறாய்; அறிவாகப் பேசுகிறாய். பெரிய இடத்துப் பிள்ளைபோல் தெரிகிறாய். நீ எப்படியப்பா இங்கு வந்தாய் ?'' அன்புடன் கேட்டான் சேகர்.

'சேகர், என் துன்பத்தைக் கிளறாதே. நானே, என் கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும் என்று நினைக்கிறேன்.....''

'சங்கர், மனத்தில் இருக்கும் சுமை, மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும்போதுதான் குறையும், என்னிடம் உன் துயரங்களைப் பகிர்ந்து கொள்ள விருப்பமிருந்தால் சொல். உன்னை நான் வற்புறுத்தவில்லை, சங்கர்'.

* * * *

ஒரு நாள்...

'மாலா, எங்கேம்மா, சங்கரை இன்னும் காணோம்!' அம்மா பதட்டத்தோடு கேட்டாள்.

'போம்மா! அண்ணன் எங்காவது பார்ட்டிக்குப் போயிருப்பார். அங்கே குடித்துக் கும்மாளமடித்துக்கொண்டிருப்பார். இதெல்லாம் அடிக்கடி நடக்கிறதுதானே அம்மா!'- அலுப்பும் சலிப்புமாகச் சொன்னாள் மாலா.

அடடே! பார்ட்டின்னு நீ சொன்னவுடன்தான் நினைவுக்கு வருகிறது. இன்று தன் நண்பன் ஒருவன் பிறந்தநாள் விழா இருப்பதாகத்தான் சொல்லிச் சென்றான் உன் அண்ணன்....''

'சரிதான்! அங்கே எல்லோரும் வெளிநாட்டுச் சரக்குகளை உள்ளே தள்ளிவிட்டுத் தள்ளாடிக் கொண்டிருப்பார்கள். அளவுக்கு மீறிக் குடித்துவிட்டு, அண்ணன் எங்காவது விழுந்து கிடக்கப் போகிறார்!''

''என்னடி செய்யறது! அப்பா இருந்தாலாவது இவன் கட்டுப்படுவான். இப்ப நாம் என்ன சொன்னாலும், 'அதெல்லாம் ஒன்றும் ஆயிடாது. உன்னையும் தங்கையையும் எப்போதும் நான் கைவிடமாட்டேன். என்னைப் பற்றிக் கவலைப்படாதே' என்று சொல்லி என் வாயை மூடிவிடுகிறான்'' பெருமூச்செறிந்தாள் அம்மா.

* * * * *

'அம்மா நான் போய் அண்ணனை அழைத்து வருகிறேனம்மா! வழக்கமான இடத்தில்தானே பார்ட்டி?'



'நீயா மாலா, போகப் போகிறாய்? கண் கலங்கினாள் தாய்.

'ஆமாம்மா! நான்தான் போறேன், டிரைவர்கூட இன்று லீவில் போய் விட்டதால் அண்ணனே காரெடுத்துக் கொண்டு போயிருக்கிறார். குடி மயக்கத்தில் எப்படியம்மா ஓட்டி வர முடியும்?''

* * * * *

'மாலாவா?'

'ஆமாண்ணா! நான் பிடித்துக் கொள்கிறேன். எழுந்து வாண்ணா, அம்மா அழுது கொண்டிருக்கிறாள்.'

காரை நெருங்கி, டிரைவர் சீட்டில் அமர்ந்தான் சங்கர்; மாலா தடுத்தும் கேளாமல், அவளைப் பின்சீட்டில் உட்காரச் சொல்லிவிட்டான். இந்தக் காட்சியை, சங்கரின் நண்பர்கள் சிலரும் பார்த்துக் கொண்டே நின்றனர்.

மகனை அழைத்து வருவதாக மகள் போய் இரண்டு மணி நேர மாகியும் இன்னும் வரக் காணோமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த தாய்க்கு இடியாக வந்தது அந்தச் செய்தி.

பார்ட்டியிலிருந்து புறப்பட்ட சங்கரின் கார் வழியில் விபத்துக் குள்ளாகி நொறுங்கி விட்டது. மாலா அந்த இடத்திலேயே மரண மடைந்து விட்டாள். சங்கர் நினை விழந்து கிடந்தான்.

* * * * *

போலீஸ் வந்தது. விசாரணை நடந்தது. யார் யாரோ சாட்சி சொன்னார்கள். சங்கர்தான் குடித்து விட்டுத் தாறுமாறாக ஓட்டிச் சென்று, **விபத்துக்குள்ளாக்கி மாலாவைக் கொன்று விட்டான் என்று முடிவாயிற்று.**

பெற்ற மனம் பெரும் சோகத்தில் மூழ்கியது. மகளை இழந்த தனக்கு, சங்கராவது துணையிருக்க வேண்டும் எனத் துடித்தாள்.



★ குடி என்பது வளர்ந்துகொண்டே வரும் ஒரு சமூகத்திமை.

★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப்பழக்கத் தீமையை விலக்க வேண்டும்.

— மகாத்மா காந்தியடிகள்

சிறையில் இந்த வரலாற்றைக் கேட்ட சேகர், 'அடப்பாவி! குடி, குடியைக் கெடுக்கும் என்று தெரிந்தும், தந்தையில்லாக் குடும்பத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டிய நீ, **வாழவேண்டிய ஒரு பெண்ணை இப்படி அநியாயமாகக் கொன்று விட்டாயே! உன்னுடன் பேசுவது கூட தப்புதான்!'** என்று சங்கரை **விஷமாக ஒதுக்கிவிட்டு** வெறுப்புடன் நகர்ந்துவிட்டான்.

சங்கர் மனம் கலங்கவில்லை. தன் நெஞ்சில் நிலைத்துவிட்ட தன் அன்புத்தங்கை மாலாவை நினைத்தான். கண்கள் கலங்கின.

'மாலா! எல்லோரும் என்னைக் கொலைகாரன் என்று பழிக்கின்றார்கள். நான் குடிகாரன்தான். ஆனால் கொலைகாரனாம்மா' நான்? எவ்வளவு சொல்லியும் - தடுத்தும் - கேளாமல், நீ செய்த காரியம் உன்னையே அழித்து விட்டதேம்மா! என்னையும் கொலைகாரன் ஆக்கி விட்டதே. நம் அம்மா தனிமரமாகி விட்டார்களே மாலா.......'' நெஞ்சம் குமுறியது. வேதனையால் துடித்த அவன் மனக்கண் முன் விபத்து நடந்த அன்று நிகழ்ந்தவை தோன்றி மறைந்தன.

''அண்ணா! நீ குடிமயக்கத்தில் ஓட்டினால் நமக்கு ஆபத்து. நீ பின்னால் போ. நான் ஓட்டி வருகிறேன்' என்று அப்போதுதான் காரோட்டக் கற்றுக் கொண்டிருக்கும் கற்றுக்குட்டி மாலா காரை ஓட்டினாள். அண்ணன் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. அரை மணிக்குள் கார் விபத்துக்குள்ளாகி விட்டது. மாலா உயிரிழந்தாள். சங்கர் நினைவிழந்தான். அவன் கண் விழித்தபோது காலம் கடந்து விட்டது. உலகின் முன் இந்த உண்மையை எடுத்துச் சொல்லித் தான் தப்பிக்க அவன் விரும்பவில்லை. ஏன்?

'பொல்லாத குடிப்பழக்கம் தானே அன்று என் தங்கையை வரவழைத்தது! காரோட்ட வைத்தது! கடைசியில் அவளை மரணத்தின் பிடியில் தள்ளிவிட்டதே!' அவன் மனம் நினைத்தது இப்படி.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2 O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி :**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

DIPR/1174/MS/88/ARIES

மாணவர் பக்கம் மாணவர் பக்கம்
மாணவர் பக்கம் மாணவர் பக்கம்
மாணவர் பக்கம் மாணவர் பக்கம்
மாணவர் பக்கம் மாணவர் பக்கம்
மாணவர் பக்கம் மாணவர் பக்கம்
மாணவர் பக்கம் மாணவர் பக்கம்

# நாட்டுக்குப் பயன்படுவோம்!

பல்லவன்

துருப்பிடித்து இரும்பழிந்தால்
துளியும் நன்மை இல்லை—ஒரு
தொழிலகத்தில் தேய்ந்தழிந்தால்
இரும்புக்கு இணை இல்லை!

எரியும் நெருப்பில் மெழுகையிட்டால்
ஏதும் பலன் இல்லை—ஒளி
ஏற்று மெழுகுத் திரியழிந்தால்
ஈடு அதற்கு இல்லை!

கழைமூங்கில் கரியானால்
காணும் பயன் இல்லை—அது
கலைஞன்கைக் குழலானால்
இசைக்குப் பஞ்சம் இல்லை!

சோம்பலுடன் நாமிருந்தால்
சூழும் வெற்றி இல்லை—உடல்
சுறுசுறுப்பால் பெருகும் இன்பம்
சொர்க்கத்திலும் இல்லை!

நாம்இணைந்து பாடுபட்டால்
நாட்டில் வறுமை இல்லை—அட
நமக்கு என்ன என்றிருந்தால்
நாம் அடைவோம் தொல்லை!





## விளையும் பயிர்:

தஞ்சை மாவட்டம் திருவாரூர் திரு.வி.க.அரசு கலைக் கல்லூரியில் பி.ஏ. மூன்றாம் ஆண்டு பொருளாதாரம் பயிலும் பி.என். ஜெய்சங்கர். இலக்கியத் துறையிலும், பொது நலச்சேவையிலும் ஆர்வமுள்ளவர். காந்தியடிகள் நினைவு தினத்தையொட்டி, மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளார்.

கோவை இராமகிருஷ்ண மிஷின் குரு பூஜையை முன்னிட்டு மாநில அளவில் நடத்திய கட்டுரைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றார். மாவட்ட அளவில் பகுத்தறிவுக் கழகம் நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார். இவர், கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டத் தலைவராகப் பொறுப்பேற்று பல்வேறு நற்பணிகள் செய்து வருகிறார். இதைத் தவிர கவிதைப் போட்டியிலும் பரிசுகள் பெற்றுள்ளார்.

# அறிவுச் சுடர்

* டாங்கு தொழிற்சாலை உள்ள இடம் எது?

ஆவடி (சென்னை)

* கப்பல்-கட்டும் தொழிற்சாலை எங்கு உள்ளது?

விசாகப்பட்டினத்தில் (ஆந்திரம்).

* நோபல் பரிசு பெற்ற இந்திய அறிஞர் யார்?

—சர்.சி.வி.ராமன்.

* ஒரு ரூபாய் நோட்டில் யார் கையெழுத்திடுவது?

நிதி அமைச்சகச் செயலர்.

* இந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஏரி எங்குள்ளது?

— காஷ்மீரில் உள்ள ஊலூர் ஏரி.

* உலகப் படத்தை வரைந்தவர் யார்?

தாலமி.

* சிவப்பு நிற மலரை, கறுப்புக் கண்ணாடியின் வழியில் பார்த்தால் தெரியும் மலரின் நிறம் எது?

வெள்ளை.

* பூச்சிகளை உண்ணும் தாவரம் எது?

டிரோசிரா.

* ஒரு குவிண்டால் என்பது எத்தனை கிலோ கிராம்?

100 கிலோ கிராம்.

* 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

டால்ஸ்டாய்

* தயிர் கடையும் மத்து எந்தத் தத்துவத்தில் வேலை செய்கிறது?

மைய விலக்கு விசையில்.

* பூமிக்கு இருபுறமுள்ள கோள்கள் எவை?

வெள்ளி, செவ்வாய்.




# குழந்தைகளே! உங்களைத்தான்!

குழந்தைகளே!

நீங்கள் நாளைய உலகின் சிற்பிகள்: வருங்காலச் சமுதாயம் உங்களை நம்பியே இருக்கிறது. அந்த நம்பிக்கை வீண்போகலாமா?

ஆகவே நீங்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் முதலான நற்பண்புகளைப் பெற்றுச் சிறந்து விளங்கிட வேண்டும்.

கல்வியிலும் சரி, விளையாட்டிலும் சரி, மற்ற துறைகளிலும் சரி, நீங்கள் படிப்படியாக வளர வேண்டும்; மேலே மேலே முன்னேற வேண்டும்.

காலை வேளை படித்து-வீட்டுக்
கணக்கை நன்றாய் முடித்து
மாலை வேளை ஆடு—மனம்
மகிழ நட்புக் கூடு!

உண்மை பேசு தம்பி—குறள்
நாளும் படி நம்பி
திண்மை உள்ளம் கொள்ளு-நல்ல
தீரன் என்று நில்லு!

துன்ப மான போதும்—உனக்குத்
துயரம் வேண்டாம் ஏதும்
இன்ப மாக வாழ்க—என்றும்
இன்னாச் சொல்லைச் சொல்லேல்!

நல்ல தம்பி என்றே—பெயர்
நன்கு எடுப்பாய் இன்றே
கள்ள மில்லா உள்ளம்—அதுவே
கடவுள் வாழும் இல்லம்!

குழந்தைகளே!

மலர்கள் என்றால் உங்களுக்கு ரொம்பவும் பிடிக்கும் அல்லவா? அதைப்போல உண்மையும் மலர்ந்திட வேண்டும்.

மலரினைப் போல உண்மை
மலர்ந்திட வேண்டும்
நிலத்தினைப் போலப் பொறுமை
நிலைத்திட வேண்டும்!

அது மட்டுமா?

குயிலினைப் போல குரல்
கூடிட வேண்டும்
மயிலினைப் போல ஆடி
மகிழ்ந்திட வேண்டும்!

சரி....

வீட்டுக்கு வெள்ளை அடிக்கிறோம், எதுக்கு? பளிச்சென்று வெண்மையாக இருப்பதற்குத்தானே? அதைப் போல உள்ளமும் வெண்மையாக இருக்க வேண்டாமா?

இல்லம் வெண்மையாகவே
வெள்ளை அடிக்கணும்
உள்ளம் வெண்மையாகவே
உண்மை இருக்கணும்!

இனிப்புக்காகக் கரும்பினை
எடுத்துச் சுவைக்கணும்
இனிய சொல் பேசவோ
எண்ணம் துலங்கணும்!

பழைய ஆடை களைந்திட
புதிது அணியணும்
பழமை யெல்லாம் தள்ளவோ
புதுமை கொள்ளணும்!

—பி.வி. கிரி

---

# பட்டு

இந்தியாவின் பட்டு பற்றிய குறிப்புகள் வேதகாலத்திற்கு முந்தியவை. கி.மு. 140-இல் பட்டு, சீனாவிலிருந்து, இந்தியாவிற்கு அறிமுகமாகியது என்று கூறப்படுகிறது. கௌடில்யர், தாம் எழுதிய அர்த்தசாஸ்திரம் என்ற நூலில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே பட்டு பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

கனிஷ்கர் காலத்திலேயே (கி.மு. 58) இந்தியாவிலிருந்து பட்டு, பிரசித்தி பெற்ற ரோமாபுரிக்கு ஏற்றுமதியாகி வந்தது.

மைசூரில் பட்டு வளர்ச்சிக்கு முதல் முதலில் வித்திட்டவர் திப்பு சுல்தான் ஆவார். அது இன்றைக்கு நாட்டின் 70 சதவிகிதக் கச்சாப் பட்டைத் தருகிறது. இன்றைக்குப் பட்டு உற்பத்தி பண்ணுவதில் சீனா முதலிடம் வகிக்கிறது. சீனாவிற்கு அடுத்து அதிகமாகப் பட்டு உற்பத்தி செய்யும் நாடு இந்தியா தான். 300 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பட்டை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடு, நமது நாடு. இதற்கு அடுத்தபடி பட்டு உற்பத்தியில் ஜப்பான் நாடு இருக்கிறது. இன்றைக்கும் ஜப்பான் மகாராணி தமது அரண்மனையில், பட்டுப் புழுக்களுக்குத் தாமே உணவளித்து வருகிறார்.

தாய்லாந்து மகாராணி, தம் மாளிகையிலேயே பட்டுப்பூச்சி பற்றிய பாடங்களை, ஒவ்வொரு வசந்த காலத்திலும் நடத்த வசதி செய்து தந்திருக்கிறார். இதனால் பட்டுப் பூச்சி வளர்த்தல் அங்கு ஒரு கலையாகவே பேணப்படுகிறது.

பட்டு நூலைக் கண்டுபிடித்த கதை மிகவும் சுவாரசியமானது.

கி.மு. 2700-ஆம் ஆண்டில் சீனாவில் ஒரு முறை மகாராஜா, தம் அரண்மனைத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். அப்பொழுது அங்குள்ள ஒரு தாவரத்தின் இலைகள் சிதைந்திருப்பதைக் கண்டார். அந்தத் தாவரம் மல்பெர்ரி என்கிற முசுக்கொட்டைத் தாவரம். உடனே அவர் தம் மகாராணிக்கு, மல்பெர்ரி இலைகள் சிதைவதற்கான காரணத்தை அறியுமாறு கட்டளையிட்டார். அந்த மகாராஜாவின் பெயர் ஹுவாங்-டி.

மகாராணி உற்றுப் பார்க்கும் பொழுது, மல்பெர்ரி இலைகளை ஒரு வித வெள்ளைப் புழுக்கள் கடித்துக் கொண்டிருப்பதையும் இலைகளில் சில இடங்களில் மட்டும் மின்னும் கூடுகள் இருப்பதையும் கண்டார். மின்னும் கூடுகளை விநோதப் பொருளாகச் சேகரித்து வைத்தார். ஒரு நாள் மகாராணி தேநீர் அருந்தும்போது, புழுக்கூடுகளை மேலே தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கூடு தவறி அவரது தேநீர்க் கோப்பையில் விழுந்து விட்டது. உடனே அந்தக் கூட்டை வெளியே எடுத்தார். அப்பொழுது அவரது கைவிரல்கள் மின்னுகின்ற இழையைப் பற்றின. அவர் கையைத் தூக்கும்பொழுது மெல்லிய மின்னும் இழையும் மேலே வந்தது.

இப்படித் தற்செயலாகப் பட்டு நூலைக் கண்டுபிடித்தார் சீனத்து ராணி. முதன் முதலில் பட்டு நூலைக் கண்டுபிடித்த பெருமை ஹுவாங்-டி மகாராணியையே சாரும்!

பட்டு கண்டுபிடித்த நாளிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இது பற்றிய விவரங்களை, ரகசியமாகவே சீனா வைத்திருந்தது. பட்டு பற்றிய ரகசியத்தை வெளி உலகிற்குத் தெரிவிப்போருக்கு மரண தண்டனை என்று எச்சரிக்கை விடப்பட்டது. இதனால் சீனாவிலிருந்து பட்டு பற்றிய விவரங்கள் வெளி உலகிற்குத் தெரியாமலேயே போய் விட்டன. பின் எவ்வாறு நமது நாடு பட்டு பற்றிய ரகசியத்தைத் தெரிந்து கொண்டது? இந்தக் கேள்விக்கு விடை நம்ப முடியாதது, ஆனால் உண்மையானது...

சீனாவிலிருந்து நமது நாட்டிற்குப் பட்டு பற்றிய ரகசியத்தைக் கொண்டு வந்தவர்கள், நம் நாட்டு பௌத்தக் குருமார்கள்தான்.

நன்றி: மஞ்சரி





# விடுதலை நாள் விழா

நம்நாட்டின் விடுதலைநாள் விழா இவ்வாண்டு கடந்த 14-8-'88 ஞாயிறு, 15-8-'88 திங்கள் ஆகிய இருநாட்களில் சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை போர் நினைவுச் சின்னம் அருகே முதல் நிகழ்ச்சி தொடங்கியது. தமிழகத்தைச் சார்ந்த இந்திய விளையாட்டு முன்ணணி வீரர்கள் சுதந்திரச் சுடரை ஏந்தித் தொடர் ஓட்டமாக ஓடினார்கள்.

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு ப்பா. சிவந்தி ஆதித்தன் சுதந்திரச் சுடரை ஏற்றி ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்களிடம் அளித்தார்.

சுதந்திரச் சுடரினைக் கூடைப் பந்து விளையாட்டு வீரர் திரு செந்தில் வடிவேலு, துப்பாக்கி சுடும் வீராங்கனை ரூபா உன்னிகிருஷ்ணன் ஆகியோரிடம் கொடுத்து ஓட்டத்தைத் தொடங்கிவைத்தார் ஆளுநரின் ஆலோசகர்.

நூற்றுக்கணக்கானோர் இந்த ஓட்டத்தில் பங்கேற்றனர்.

எழிலகம் அருகே சுதந்திரச் சுடரை, இந்திய கைப்பந்து வீரர் சித்திரை பாண்டியன் பெற்று, அண்ணா சிலை அருகே தயாராக நின்ற ஹாக்கி வீரர் அகமதுவிடம் கொடுத்தார். எழும்பூர் நீதிமன்றம் அருகே அந்தச் சுடரை கால்பந்து வீரர் சையதுஅஷரப்ஹாசன் பெற்று, நிறைவு விழாக் கொண்டாட்டங்களுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த எழும்பூர் மாநகராட்சி விளையாட்டரங்கம் அருகே கொண்டு வந்து, தடகள விளையாட்டு வீரர் ராஜசேகரன், வீராங்கனை மோனிகா ஆகியோரிடம் கொடுத்தார்.

இருவரும் சுதந்திரச் சுடரை இணைத்துப் பிடித்தபடி, மாநகராட்சி விளையாட்டரங்கத்துக்குள் நுழைந்தனர். அப்போது அங்கு கூடி இருந்த ஐந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கையில் வைத்திருந்த தேசியக் கொடிகளை அசைத்து, வரவேற்றார்கள்.

மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்ற இந்த நிறைவு விழாவில் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் பங்கேற்றார். மாணவ - மாணவிகளின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே சுதந்திரச் சுடரை விளையாட்டரங்கத்துக்குள் கொண்டு வரப்படுவதை ஆளுநர் பார்வையிட்டார்.

சுதந்திரச் சுடரை ராஜசேகரனும் மோனிகாவும் மேடையருகே கொண்டுவந்து, ஆளுநர் முன்னிலையில், ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. ராமகிருஷ்ணாவிடம் கொடுத்தனர்.

ஆலோசகர் திரு ராமகிருஷ்ணா அதைப் பெற்று, அந்தச் சுடரை முதலில் ஏற்றிக் கொடுத்த தமிழ் நாடு விளையாட்டுவளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தனிடம் ஒப்படைத்தார்.

இதைத் தொடர்ந்து ஆளுநர் டாக்டர் அலெக்சாண்டர் அங்கு அமைக்கப்பட்டிருந்த கம்பத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, மாணவ-மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

விழாவில் ஆளுநர் அலெக்சாண்டர் பேசியபோது குறிப்பிட்டதாவது :

'நாட்டு விடுதலையைக் கொண்டாடும் இந்த நல்ல நேரத்தில் நமது

44—ஆம் பக்கம் பார்க்க.

# படமும்-செய்தியும்



விடுதலைநாள் விழாவையொட்டி, சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற மாணவ மாணவிகள் நிகழ்ச்சியை மேதகு ஆளுநரும், ஆலோசகர்களும் பார்வை யிட்டனர். (14-8-88)



சென்னையை அடுத்துள்ள பெருங்குடியில், எல்காட்டுக் காகக் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா திறந்துவைத்தார். அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன் விழாவுக்குத் தலைமை வகித்தார் (25-8-88)



மாண்புமிகு மொரிஷியஸ் நாட்டுக் கல்வி, கலாச்சார அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் அவர்களை 20-8-'88 அன்று சந்தித்து, மொரிஷியஸ் நாட்டில் நடைபெற உள்ள ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகள் பற்றி விவாதித்தார்.



தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் 101-வது பிறந்த நாளையொட்டி 19-8-'88 அன்று அவரது திருவுருவச் சிலைக்கு, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களும், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதிதீரர்சத்தியமூர்த்தி அவர்களின் புதல்வி திருமதி லட்சுமி கிருஷ்ண மூர்த்தி ஆகியோரும்மாலை அணிவித்தார்கள்.

விடுதலை நாளன்று சென்னையில், அருள்மிகு கபாலீசுவரர் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் கோயிலில் ஆளுநரின் கலந்துகொண்டார்கள். (15-8-88)

கோயிலில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணாவும், ஆலோசகர் திரு ஆ. பத்மநாபனும் சிறப்பு வழிபாடு பொது விருந்தில்








கவியரங்கம்

4| —ஆம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்கள் விட்டுச் சென்றுள்ள பாரம்பரியத்தை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும்.

வெளிநாடுகள் மிகவும் பிரமிக்கத் தக்க அளவில் வளர்ச்சி அடைந்து விட்டன, நாம் பின்தங்கி இருக்கிறோம் என்று யாரும் ஏமாற்றம் அடைய வேண்டாம். நாம் சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள்தான் ஆகிறது.

நாம் அந்நியர்களால் சுரண்டப் பட்டவர்கள். எனினும் அந்நியர்களிடமிருந்து விடுதலை பெற்ற 40 ஆண்டுகளில் நல்லவளர்ச்சியும், முன்னேற்றமும் அடைந்துள்ளோம்.

வெளிநாடுகள் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகே வளர்ச்சியை எட்டி உள்ளன. இதற்காக நாமும் பல நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதில்லை. நாம் இப்போது எல்லாத்துறைகளிலும் பிரமிக்கத் தக்க அளவில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், சுதந்திரத்துக்காகப்பாடுபட்டதலைவர்கள் காந்தி, நேரு, வல்லபாய் படேல்; மவுலானா ஆஷாத், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் நம் மீது வைத்திருந்த நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' - இவ்வாறு ஆளுநர் அலெக்சாண்டர் பேசினார்.




மீண்டும் அரசியல் நிர்ணய சபை

விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த தமிழக வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் விருதுகளை ஆளுநர் வழங்கினார்.

கவுதம் ராம்தாஸ் (துப்பாக்கி சுடுதல்), ஸ்ரீவித்யா (பேட்மிண்டன்) டி. மதிவாணன் (குத்துச்சண்டை), சி.ஆர். குமார் (ஆக்கி), பி.ஜெயந்தி (கைப்பந்து), கே. ராஜா, (கேரம்), பி. பெண்ணரசி (டென்னிகாய்ட்), டி. சத்தியமூர்த்தி (பவர் லிப்டிங்), சையத் அஷரப் ஹாசன்(கால்பந்து) செந்தில் வடிவேலு (கைப்பந்து) ஆகியோர் ஆளுநரிடம் விருது பெற்றனர்.

நிறைவு விழாவில் மாணவ— மாணவிகளின் கண்க்வர் அணிவகுப்பும், உடற்பயிற்சிகளும் நடைபெற்றன.

பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த ஐந்தாயிரம் மாணவிகள் இந்த அணி வகுப்பில் கலந்து கொண்டு, பல்வேறு உடற்பயிற்சிகளைச் செய்து காட்டி பிரமிக்கவைத்தனர்.

**கவியரங்கம்**

கலைவாணர் அரங்கில் பிற்பகல் நிகழ்ச்சிகள் கலைமாமணி திரு. ஷேக் சின்னமௌலானா நாயன இசையுடன் தொடங்கின.

**விடுதலைநாள் விழாவில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தாமிரப்பத்திரம் அளித்தார் மேதகு ஆளுநர்.**





**எழும்பூர் மாநகராட்சி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கினார். 1987-இல் அகமதபாத் நகரில் நடைபெற்ற தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற திரு கவுதம் ராம்தாஸ், ஆளுநர் அவர்களிடமிருந்து விருது பெறுகிறார்.**

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் வரவேற்றார்.

விழாவைத் தொடங்கி வைத்து ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் உரையாற்றினார்.

'நாற்பது ஆண்டு விடுதலை' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்க நிகழ்ச்சிக்குத் திருமதி சௌந்தரா கைலாசம் தலைமை வகித்தார்.

'வளர்ச்சித் திட்டங்கள்' என்ற தலைப்பில் கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்களும், 'மகளிர் முன்னேற்றம்' என்ற தலைப்பில் கவிஞர் திருமதி நிர்மலா சுரேஷ் அவர்களும், 'நுண்கலை வளர்ச்சி' என்ற தலைப்பில் கவிஞர் நா.சீ. வரதராஜன் அவர்களும், 'சமுதாயச் சீர்திருத்தங்கள்' என்ற தலைப்பில் கவிஞர் புதுவயல் செல்லப்பன் அவர்களும், 'மக்கள் தொடர்புப் பணி' என்ற தலைப்பில் கவிஞர் மணமேடு குருநாதன் அவர்களும், 'சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கவிஞர் அயிலை தமிழ்ச்செழியன் அவர்களும் கவிதைகளை அரங்கேற்றினார்கள்.



## மீண்டும் அரசியல் நிர்ணய சபை

நாடு விடுதலை அடைந்த பொழுது அரசியல் நிர்ணயசபையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, சென்னை நகரக் கல்லூரி மாணவ-மாணவியர், 'அரசியல் நிர்ணய சபையை மீண்டும் நடத்திக் காட்டுதல்' என்ற நிகழ்ச்சியை எல்லாரும் பாராட்டும் வகையில் நடத்திக் காட்டினார்கள்.

நிகழ்ச்சியின் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவிருந்த திரு கிருஷ்ணசாமிபாரதி அவர்களும் முதுபெரும் அரசியல் அறிஞர் திரு. செங்கல்வராயன் அவர்களும் பங்கேற்றனர்.

## சிறப்புக் கூட்டம்

வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டம், பள்ளி மாணவ-மாணவியர் சேர்ந்திசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் செய்தி, சுற்றுலாத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் போராட்ட வீரர்கள் 26 பேருக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தாமிரப்பத்திரங்கள் அளித்து, தலைமை உரை ஆற்றினார்கள்.

ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ. பத்மநாபன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், திரு. ஜி. கே. மூப்பனார், எம்.பி, திருமதி வைஜயந்திமாலா பாலி, எம். பி, டாக்டர் எச்.வி. ஹண்டே, திரு. ப. மாணிக்கம், திரு ஏ.கே.ஏ. அப்துல்சமது, திரு செ.கு. தமிழரசன், திருமதி சரோஜினி வரதப்பன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி நன்றி நவின்றார்.

பின்னர் கலைமாமணி இளையராஜா இசை நிகழ்ச்சி நடைபெற்றது.






டாக்டர் சை.வே.சிட்டிபாபு பேசும்போது - கல்வித்துறையில் மட்டும் சுதந்திரம் பெற்றபோது இந்தியா இருந்த நிலையையும், இப்போதுள்ள நிலைமைகளையும் ஒப்பிட்டுக் காட்டி ''கல்வித்துறை மிக மேலாக வளர்ந்தோங்கியிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

'கல்வி வளர்ச்சி' என்பது பற்றிப் பேசிய டாக்டர் அவ்வை நடராசன் 'இந்த நாற்பத்தோராண்டுக் கால விடுதலை வாழ்க்கையில் 'கல்வி மகத்தான மாற்றத்தைப் பெற்றிருக்கிறது. நமது நாடு இது;இதற்கு ஏது ஈடு என்றுணர்த்தும் ஆற்றல் மிக்க கல்வியைத்தான் இந்த நாடு எதிர்பார்க்கிறது' என்றார்.

'பெண்கள் முன்னேற்றம்' பற்றி திருமதி சிவசங்கரி பேசுகையில், 'வளரும் நாடுகள் மத்தியிலே நம் இந்தியத் திருநாடு தனி மரியாதையைப் பெற்றிருப்பதற்காக மகிழ்கிறேன், என்று சமுதாயத்தில் பெண் மதிக்கப்படுகிறாளோ, அன்றைக்குத்தான் பெண் விடுதலை பேணப்படுவதாகப் பொருள்' எனக் குறிப்பிட்டார்.

# புதிய கருத்துக்கள் பொங்கி வழிந்த கருத்தரங்கம்

# மாணவ மாணவிகளின் கவின்மிகு கலைநிகழ்ச்சிகள்

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் விடுதலைநாள் விழா நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

ஆகஸ்ட் 15ந் தேதி காலை பத்து மணியளவில் கருத்தரங்கம் தொடங்கியது. கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் போ.சு.சுப்பிரமணியன் வரவேற்புரையுடன் தொடங்கிய நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு.பி.கே. சேதுராமன் தலைமை தாங்கினார்.

'கலை, கலாச்சார வளர்ச்சி' எனும் தலைப்பில் பேசிய திரு, எஸ்.டி.காசிராஜன் இ.ஆ.ப., ''தினந்தோறும் சூரியனைப் பார்க்கிறோம்; காற்றை உணர்கிறோம்; ஆனால் அது பற்றிச் சிந்திப்பதில்லை. அதேபோலச் சுதந்திரம் பற்றியோ அதை அடையப் பாடுபட்டவர்கள் பற்றியோ நாம் சிந்திப்பதே இல்லை; இந்த நிலை கூடாது'' என்றார்.

'அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி' என்ற தலைப்பில்

'கிராமப்புறப் பெண்கள் முன்னேற்றம்' குறித்துப் பேசிய டாக்டர் எஸ். விஜயலட்சுமி விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு பெருமளவில் இருந்தது. குறிப்பாக உப்புச் சத்தியாக்கிரகத்தில் கிராமப்புறப் பெண்களும் தங்கள் தங்கள் வீட்டில் உப்புக் காய்ச்சிப் போராடினார்கள். அப்படிப்பட்ட கிராமப்புறப் பெண்கள் முன்னேற்றத்திற்கு நிறைய நாமெல்லாம் பாடுபட வேண்டியுள்ளது' என்று தெரிவித்தார்.







'தொழில் வளர்ச்சி' பற்றிப் பேசிய திரு வ.உ.சி.சுப்பிரமணியம், இந்தியாவில் சுதந்திரம் பெற்ற போதிருந்த தொழில் வளத்தை விட, இப்போது அந்த வளம் மிக மிக மேம்பட்டிருப்பதை ஏராள மான புள்ளி விவரங்களோடு எடுத்து விளக்கினார்.

'வேளாண்மை வளர்ச்சி' என்ற தலைப்பின்கீழ் உரையாற்றும் போது-'ரஷ்யாவில் மூன்றே ஐந் தாண்டுத் திட்டங்களை நிறை வேற்றி எல்லாக் குறைபாடுகளை யும் போக்கியிருக்கிறார்கள்; இங்கே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்தும் எந்தக் குறையும் அடி யோடு நீக்கப்பட்டதாகத் தெரிய வில்லை; அதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதைப் போக்கி, நாடு நலம்பெற நாமெல்லாம் பாடுபட வேண்டும்' என்று அனபு வேதாசலம் கேட்டுக் கொண்டார்.

'சமுதாய வளர்ச்சி' பற்றிப் பேசிய திரு டி. செங்கல்வராயன்— 'இன்றைக்குத் தமிழகத்தில் இருப் பதை அரசியல் வளர்ச்சி என்பதா, அரசியல் வறட்சி என்பதா என்றே புரியவில்லை. மக்கள் மறுமலர்ச்சி காண இன்னொரு புரட்சி காண வேண்டியது அவசியமாக இருக்குமே யானால், அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்' என்றார்.

காலை நிகழ்ச்சிகளின் முடிவில், செய்தித் துறை உதவி இயக்குநர் திரு. சு. நல்லரசு நன்றி கூறினார்.

கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகள் அன்று மாலை 4 மணி யளவில் கலைவாணர் அரங்கத்தில் தொடங்கின.

மாலை நேர நிகழ்ச்சிகளின் துவக்கத்தில், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கி. கோபாலன் வர வேற்புரையாற்றினார். ''மாணவர் சமுதாயத்திற்குச் சிறந்த தேச பக்தியுணர்வை ஊட்டுவதற்காகவே இந்த நாளில் இவ்வாறான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன'' என்று அப்போது அவர் குறிப்பிட் டார்.






தலைமை விருந்தினராக வருகை தந்திருந்த சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஆ. ஞானம் தமது உரையின்போது - 'மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது நாம் பின்தங்கியிருக்கி றோமோ என்று கருத வேண்டி யிருக்கிறது. நாம் அந்த அளவுக்கு முன்னேறாததற்கு என்ன காரணம்? இனி நாம் செய்ய வேண்டியது என்ன? என்பதை இந்தச் சுதந்திர நாளில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்; இந்த நாடு முன்னேறும் வகையில் பாடுபட வேண்டும்' என் றார்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி-'இன்று மாணவ மாணவி களால் நடத்தப்படும் சிறந்த கலை நிகழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்கு, ஆசிரியர் தினமான செப்டம்பர் 5-ஆம் தேதியன்று பரிசுகள் வழங்கப்படும்' என்று அறிவித்தார்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் திரு எர்ஸ்கின் தேவாசீர்வாதம் நன்றியுரையாற்றினார்.

இதன்பின் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் துவங்கின. நுங்கம்பாக்கம் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை மகளிர் நடுநிலைப்பள்ளி, சிந்தாதிரிப் பேட்டைஆண்கள்மேல்நிலைப்பள்ளி, என். கே. டி. மகளிர், மேல்நிலைப் பள்ளி, ஆர். கே. எம். சாரதா வித்யாலயா, மணிலால் மேத்தா மேல்நிலைப்பள்ளி, தாராப்பூர் லோக நாதன் மேல்நிலைப்பள்ளி, தமிழ் நாடு இசைக் கல்லூரி, இராணி மேரிக் கல்லூரி, காயிதே மில்லத் மகளிர் கல்லூரி, புனித இதயம் கல்லூரி-ஆகிய கல்வி நிறுவனத் தார் விடுதலைத் திருநாளை மைய மாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ் வித்தார்கள்.







ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவுசெய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23








